ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 விக்கிரம௵ ஆனி௴ கதிர் 12

ஜுலை-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை — 1

மதுரை நாயக்கர்கள் காலத்து சேதுபதிகள் —

கே. ஜீ. கிருஷ்ணன் B. Sc. (Hons) 8

சுதந்திரத்தின் தேவைகள் யாவை? ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

— 10 வெ. சா. 17

மலரின் விருப்பம் வித்வான் எஸ். உமைதாணு பிள்ளை 30

அரசனும் குருவும் அல்லது புத்தகப்படிப்பும் அநுபூதியும்

(ஒரு கதை) — "ஆசிரமவாசி" 31

மௌலானா அபுல் கலாம் அஸாத் — ஒரு "காங்கிரஸ்வாதி" 37
உனக்கும் அச்சமா? —வ. பார்த்தசாரதி 40
தற்போதைய யுத்தத்திற்கு என்ன காரணம்? — மா. பூ. 43
காங்கிரஸும் அஹிம்சையும் — காரியக் கமிட்டி தீர்மானம் 48
நானூறு வருஷங்களுக்கு முன் பக்கோ நகரம்
எப்படி யிருந்தது? — "சரித்திரக்காரன்" 51
சென்ற மஹா யுத்தத்தைப் பற்றிய சில விவரங்கள் 54
அன்றும் இன்றும்—உடன்படிக்கை விவரங்கள் — 56
அன்றுட உலகம் — 70

மானிட ஜாதியின் சுதந்திரம்

புதிய கருத்துக்களைக் கொண்ட

புதிய நூல்

சுமார் 100 பக்கங்கள்

விலை; 8 அணா

ஜோதி

கதிர் 3 ஜூலை—1940 சுடர் 12



இனி ?

அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி, இதுகாறும், களங்கமில்லாத ஆனால் சூனியமான கற்பனை ஆகாசத்தில் சஞ்சரித்திருந்து கொண்டிருந்தது. இப்பொழுதுதான் 'மனித சக்திகளின் குறைபாடுகளையும் தவறுகளை'யும் உணர்ந்து, மலினமான இந்த மண்ணுலகத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. அந்த மட்டும் இப்பொழுதேனும்—இருபது வருஷங்கள் கழித்தாவது—அஸ்திவாரமில்லாமல் ஒரு கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை உணர்ந்து கொண்டதற்கு, நாம், மேற்படி காரியக் கமிட்டி அங்கத்தினர் அத்தனை பேரையும் பாராட்டுகிறோம்.

காரியக் கமிட்டியின் அறிக்கையை வேறோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். விஷயத்தை நேரடியாகவும் தெளிவுபடவும் சொல்லாத ஒரு மனப்பான்மை—ஆம்; இதுதான் காங்கிரஸின் பரம்பரை உரிமையாயிற்றே! —இந்த அறிக்கையின் வாசகத்தில் நன்கு பிரதிபலிக்கிறது. ஆயினும், இது பலருக்கு ஒருவித பிரமிப்பையே கொடுத்திருக்கும். உலக அரசியல் போக்கை சரித்திரரீதியாக ஆராய்ந்து வந்திருக்கின்ற—ஆனால் மௌனஞ் சாதிக்கின்ற—சிறுபான்மைக் கூட்டத்தினர் 'இஃதென்ன! விபரீதமாயிருக்கிறது! நான்கு மாதங்கள் முன்னர் வரையில் அஹிம்சையிலே பூரண நம்பிக்கை கொண்டிருந்த காரியக் கமிட்டியார், எல்லாச் சில்லரைக் காங்கிரஸ் கமிட்டிகளையும் சத்தியாக்கிரகக் கமிட்டிகளாக மாற்றியமைக்கவேண்டுமென்று உத்திரவிட்ட காரியக் கமிட்டியார், இவ்வளவு திடீரென்று காந்தியடிகளின் தத்துவத்திலிருந்து பிரிந்து சென்று விட்டனரே? இந்த ஞானோதயத்திற்குக் காரணமென்ன?' என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்வார்கள். கோழைத்தனமாயிருப்பது தான் அஹிம்சை யென்று கருதி, எதற் கெடுத்தாலும் பல்லிளித்து, அதன் மூலமாகத் தாங்கள் காந்தியடிகளைப் பின்பற்றுவதாக நினைத்துச்

சுய திருப்தி யடைகிறார்களே அவர்களும், தங்களுடைய அரசியல் ஞான சூனியத்தை அலங்கார பாஷையால் அழகு படுத்திக் காட்ட விரும்புவோரும், நாம் பலஹீனர்களா யிருப்பதால்தான் அஹிம்சையைக் கைப்பற்ற வேண்டுமென்று அறிவுக்குப் பொருத்தமில்லாத வழியில் வாதஞ் செய்கிறவர்களும், காரியக் கமிட்டியின் இந்த அறிக்கையைக் கண்டு உண்மையிலேயே திகைத்துப் போயிருப்பார்கள்.

தொட்டுப் பிடிக்கிற மனிதனுக்குச் சேவை செய்வது கடினம். ஆனால் எட்டிப் பிடிக்க முடியாத கடவுளுக்குத் தொண்டு செய்வது சுலபம். நாமும் இதே மாதிரிதான் அநுபவ சாத்தியமில்லாத பிரச்னைகளை அரசியல் உலகத்தில் கொண்டு புகுத்தி, தினசரி வாழ்க்கையில் லவலேசமும் அநுஷ்டித்துக் காட்ட முடியாத தத்துவங்களைப் பற்றிப் பேசி, சுயராஜ்யத்தைச் சுலபமாகச் சம்பாதித்து விடலா மென்று கருதிக் கொண்டிருக்கிறோம். நடக்கிற காரியமா இது? இன்றைய உலக நிலை நமக்கு இந்தச் சுலபமான பாடத்தைக் கற்றுக் கொடுக்கவில்லையே. கடினமான காரிய சாதனையில் இறங்கு மாறல்லவோ தூண்டுகிறது. அந்தத் தூண்டுதலுக்கு ஒரு கருவியாகவே, காரியக் கமிட்டியின் அறிக்கை இருக்கிறதென்று நாம் கொள்கிறோம்.

நியாயமான வழியிலும் சமாதான முறையிலும் பரிபூர்ண சுயராஜ்யத்தை யடைய வேண்டுமென்பதுதான் காங்கிரசின் கொள்கையாயிருந்து வந்திருக்கிறது. ஹிம்சையையோ, அஹிம்சையையோ உத்தியோக தோரணையில் அது ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் சட்டத்தில், ஹிம்சையோ, அஹிம்சையோ இடம் பெறவில்லை. ஆனாலும், நம்முடைய சுயராஜ்ய சித்திக்கு அஹிம்சை முறைதான் சிறந்ததென்ற நம்பிக்கை, காங்கிரஸ் தீர்மானங்களில் முக்கியத்துவம் பெற்றிருந்திருக்கிறது. சில சந்தர்ப்பங்களில், சட்டத்தைவிட சம்பிரதாயத்திற்கு அதிக முக்கியத்துவம் ஏற்பட்டு விடுவதுண்டு. அது போல, காங்கிரஸ் தீர்மானங்களில், இந்த அஹிம்சை சம்பிரதாயத்திற்கு பிரதானத்துவம் கொடுக்கப்பட்டது. இதற்குக் காரணம், காந்தியடிகளின் தலைமையிலும், அவருடைய புனிதத் தன்மையிலும், அவருடைய உறுதிப்பாடான கொள்கையிலும், காங்கிரஸுக்கு இருந்த அபார நம்பிக்கைதான். எப்படி காந்தியடிகள், காங்கிரசில் நாலணா சந்தா செலுத்தும் அங்கத்தினராகக் கூட இல்லாமல் அதே காங்கிரசின் அதி நாயகராகக் கருதப்பட்டு வந்தாரோ, அப்படியே, காங்கிரசின் சட்டத்தில் இடம் பெறாத அஹிம்சையானது, காங்கிரஸ் தீர்மானங்களில் இடம் பெற்று விட்டது. அதைப் பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் வலியுறுத்திப் பேசுவது ஒரு சம்பிரதாயமாகி விட்டது. ஜன சக்தியின் பிரதிபிம்பமாயிருக்கிற காங்கிரசுக்குப் பக்தி செலுத்துவதைக் காட்டிலும், தனிப்பட்ட ஒரு மனிதருக்குப் பக்தி செலுத்துவதுதான் சிரேஷ்ட மென்ற எண்ணம் எப்படி காங்கிரஸ்காரர்களிடத்தில் திணிக்கப்பட்டதோ, அதைப் போல், காங்கிரஸ் சட்டத்திற்கும், விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதைக் காட்டிலும், அஹிம்சைக்

கோயிலில் கண் மூடி பூசை செய்வது தான் சிரேஷ்டமென்ற எண்ணமும் காங்கிரஸ்காரர்களின் இதயத்தில் புகுத்தப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரியான நிலைமையில் காரியக் கமிட்டியின் தற்போதைய தீர்மானம், காங்கிரஸ் வாதிகளுக்கு ஒரு திகைப்பைத்தான் உண்டு பண்ணியிருக்கிறதே தவிர, தெளிவான வழியொன்றையுங் காட்டவில்லை. உண்மையில், யாருக்குமே, இந்தத் தீர்மானத்தைப் படித்து முடித்ததும் சில சந்தேகங்கள் தோன்றலாம். அவற்றைக் கீழே வரிசையாகத் தொகுத்துக் கூற விரும்புகிறோம் :—

1. சென்ற இருபது வருஷ காலமாகக் காங்கிரஸானது, அஹிம்சையிலும் காந்தியடிகளின் தலைமையிலும் நம்பிக்கை வைத்தே தீர்மானங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது. நான்கு மாதங்களுக்கு முன்னர் நடந்த ராம்கார் காங்கிரஸில்கூட இந்த அஹிம்சையும், காந்தியடிகளின் தலைமையும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. எந்தத் தலைவர்கள், காந்தியடிகளின் தலைமையையும், அஹிம்சையையும் இருபது வருஷங்களுக்கு முன்னால் ஏற்றுக் கொண்டார்களோ ஏறக்குறைய அதே தலைவர்கள் தான், இப்பொழுது காங்கிரஸ் சேனாதிபத்திய வட்டாரத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ராம்கார் காங்கிரஸ் போது, சர்வ தேச நிலைமையில் என்னென்ன சிக்கல்கள் இருந்தனவோ அதே சிக்கல்கள் தான் இப்பொழுதும் இருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்க, காரியக் கமிட்டியார், திடீரென்று, எவ்வித முன்சூசகமுமில்லாமல், காந்தியடிகளின் தலைமைக்கும் அஹிம்சைக்கும் விடை கொடுத்தனுப்புமாறு போல் ஒரு தீர்மானத்தைச் செய்வானேன் ?

2. அஹிம்சை பிரச்னையைப் பற்றி, காங்கிரஸ் சேனாதிபத்தியத்திற்குள்ளேயே, நீண்ட நாட்களாக ஏதேனும் சல சலப்பு ஏற்பட்டிருந்திருக்கிறதா? அப்படி ஏற்பட்டிருந்தால், இது வெளி வராமல் இருந்ததற்குக் காரணம் என்ன? காந்தியடிகளிடம், காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் கொண்டிருந்த விசேஷ பக்திதான் காரணமா ?

3. பண்டித ஜவஹர்லால் நேரு, தமது சுய சரிதத்தில் பின் வருமாறு கூறுகிறார் :—

> “வெளியேயிருந்து தாக்கப்பட்டால், தனக்குத் தற்காப்புத் தேடிக் கொள்வதற்காக, பக்குவம் பெறாத இந்த உலகத்திலே தேசீய அரசாங்கம் பலாத்காரத்தைக் கைக் கொள்ளத்தான் வேண்டும் என காந்திஜீ ஏற்றுக் கொள்வார் என்று நினைக்கிறேன். ஆனால் நிச்சயமாக எனக்குத் தெரியாது. ஒவ்வொரு அரசாங்கமும் தனது பக்கத்து நாடுகளோடும் அரசாங்கங்களோடும் நல்ல நட்பு உறவோடு இருக்கத்தான் வேண்டும். இருந்தாலும் தான் தாக்கப்படாது என்று அந்த அரசாங்கங்கள் நினைத்துக் கொள்வது அபத்தமாகும்.”

இந்த வாசகத்தையும் காரியக் கமிட்டி தற்போது நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தையும் பொருத்தி வைத்துப் பார்க்கலாமா? இந்தத் தீர்மான நிறைவேற்ற விஷயத்தில் பண்டிதர் ஏதேனும் பங்கெடுத்துக் கொண்டாரா ?

4. ஒரு தனி மனிதனுடைய அநுஷ்டானத்திற்குச் சாத்தியமாயுள்ள இந்த அஹிம்சைத் தத்துவத்தை, ஜன சமுதாய முழுமைக்கிற்கும் கொண்டு புகுத்துதல் அநுஷ்டான சாத்தியமென்று மனப்பூர்வமாக நம்பியே, காங்கிரஸ் தலைவர்கள் காரியங்களை இது வரையில் செய்து வந்திருக்கிறார்களா? அப்படிச் செய்து வந்திருப்பார்களானால், தற்போது இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமே யில்லையே.

5. இந்தியாவின் லட்சியமாகிற பரிபூரண சுதந்திரத்தை யடைய காங்கிரஸ், அஹிம்சா தர்ம வழியைத்தான் பின் பற்றுமென்று காரியக் கமிட்டியின் தீர்மானம் கூறுகிறது. அதே மூச்சில் தேசியப் பாதுகாப்பு விஷயத்தில் "இந்த அஹிம்சைக் கொள்கையை அநுஷ்டிக்க முடியாதென்றும் வருத்தப் படுகிறது. அப்படியானால், உள் நாட்டுக்கு மட்டுந்தான் அஹிம்சையா? வெளி நாட்டுப் படையெடுப்பினின்று தடுத்துக் கொள்ள ஹிம்சை முறை அநுஷ்டிக்கப்படுமா? பரிபூர்ண சுதந்திரத்தை யடைய தேசியப் பாதுகாப்பும் தேவைதானே. அப்படியிருக்க, இரண்டையும் வேறு வேறாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான முறை அநுஷ்டிக்கப் படுமென்று சொல்வது போலல்லவோ இருக்கிறது தீர்மானத்தின் வாசகம். இப்படி நினைப்பது சரிதானா? சரியானால், இந்தப் பிரிவினை எத்தனை பேருக்குப் புரியும்? இஃது எவ்வளவு தூரம் அநுஷ்டான சாத்தியமானது?

6. 'தற்போதைய இந்தியாவின் உள் நாட்டு வெளி நாட்டுக் குழப்பங்களை உத்தேசித்து, காங்கிரஸானது இனி என்ன வேலைத் திட்டங்களையோ அல்லது வேலைகளையோ நிர்ணயிக்க இருக்கிறதோ அவைகளின் பொறுப்பு இனி காந்தி யடிகளுக்கு இராதென்று' காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

எந்த ராம்கார் காங்கிரஸ், நான்கு மாதங்களுக்கு முன்னர், காந்தியடிகளுக்கு, சட்டமறுப் பியக்கத்திற்குத் தலைமை பூண்டு நடத்த மனமிசைந்ததற்காக நன்றி பாராட்டியதோ, எந்தக் காங்கிரஸ் அவருடைய நிர்மாண திட்டத்தை பூரணமாக நிறைவேற்ற வேண்டுமென்று கட்டளையிட்டதோ அதே ராம்கார் காங்கிரசின் நிருவாக யந்திரமாக அமைந்துள்ள தற்போதைய காரியக் கமிட்டியானது, காங்கிரசின் எதிர்கால வேலைத் திட்டத்தின் பொறுப்பு காந்தியடிகளுக்கு இல்லை யென்று தீர்மானித்திருக்கிறது! அப்படியானால், காந்தியடிகளுக்கும் காங்கிரசுக்கும் இனி எவ்விதமான சம்பந்தம் இருக்கும்? எப்பொழுதும் போல் அவர் உத்தியோகப் பற்றில்லாத தலைவராக இருப்பாரா? அவருடைய ஆலோசனைகளும், திட்டங்களும் இனி காங்கிரஸைக் கட்டுப்படுத்துமா?

இன்னமும் இந்தச் சந்தேக எண்ணிக்கைகளை நாம் பெருக்கிக் கொண்டு போக விரும்பவில்லை. ஏனென்றால், இந்திய தேசிய வாழ்விலே, சென்ற இருபது வருஷ காலத்துப் போராட்டமானது, மாற்றமும் ஏமாற்றமும் நிறைந்த ஓர் அத்தியாய மென்பது நமது அபிப்பிராயம். எப்படி இன்றைய பொருளாதார உலகத்தில் உயர்ந்த செல்வமும், குனிந்த வறுமை

யும் நெருங்கி வாழ்கின்றனவோ அதைப் போல, இந்த இருபது வருஷ காலப் போராட்டத்தில், தீவிரமான எதிர்ப்பும், பணிவான சமரஸமும் பக்கத்துப் பக்கத்திலேயே வாழ்ந்து வந்திருக்கின்றன. சென்ற இருபது வருஷ காலத்தில் தேசிய வாழ்வென்னும் ஆறு அகன்றிருக்கலாம். ஆனால் அதன் ஆழம் தூர்ந்திருக்கிறது. முதல் சத்தியாக்கிரகப் போரின் போது, தேசத்திலிருந்து வந்த ஒற்றுமை இப்பொழுது இல்லை. ஜன சமூகத்தில் பிளவுகள் விரிந்து கொண்டு வந்திருக்கின்றன. இப்படி நாம் கூறுவது, பலருக்கு வருத்தத்தை உண்டு பண்ணலாம். ஆனால், நோயாளிக்கு வலிக்குமே யென்பதற்காக, அவனுடைய புண்ணைக் கீறாமலிருக்க முடியுமா? புண்ணைக் கழுவியோ, கீறியோ தான் அதனை ஆற்ற முடியும்.

அஹிம்சையோடு நமக்கு எவ்வித போராட்டமும் கிடையாது. ஆனால் இந்திய தேசிய இயக்கத்தில் கலந்து கொண்டுள்ள எத்தனை பேர் அதன் நுண்மையையும் பெருமையையும் உணர்ந்திருக்கின்றனர் என்பதுதான் நமக்குச் சந்தேகம்.

> "சுத்த சாத்வீகத்தை அதிகமாக வற்புறுத்துவதால், அது வாழ்க்கைக்குப் பொருந்தாத ஒன்றாகப் போய் விடுகிறது. அதை மத பக்தியோடு சேர்த்துக் கொண்டு குருட்டுத்தனமாக ஜனங்கள் நம்புகிறார்கள்; அல்லது அதை நம்ப மறுத்து விடுகிறார்கள். அறிவால் அதை ஆராய்ச்சி செய்து பார்த்து, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் விலகிப் போகிறது."

பண்டித ஜவஹர்லால், தமது சுய சரித்திரத்தில் கூறியுள்ள இந்த வாசகங்களை அன்பர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

மனித சக்திகளின் குறைபாடுகளையும் தவறுகளையும் எளிதில் புறக்கணித்துவிட முடியாதென்றும், காந்தியடிகள், அஹிம்சைத் தத்துவ விஷயத்தில் போகிற அவ்வளவு தொலைவுக்குத் தன்னால் போக முடியாதென்றும், காரியக் கமிட்டி தன் தீர்மானத்தில் குறிப்பிடுவது ஆச்சர்யமாயிருக்கிறது. இந்தியாவின் தற்போதைய தலைமையின் தீர்க்கதரிசனத்தில் நமக்கு எப்பொழுதுமே நம்பிக்கை கிடையாது. இதனாலேயே, தலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நாம் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த மண்ணுலகத்தில் குறைபாடுடைய சக்திகள் பல இருக்கின்றனவென்பதை நமது தலைவர்கள் இப்பொழுதுதான் உணர்கிறார்களா? உலகம் என்பது, நன்மையும் தீமையும் கலந்ததுதான் என்பது இவர்களுக்குத் தெரியாதா? எப்பொழுதுமே, எந்த யுகத்திலுமே, துஷ்டர்கள் மட்டுமோ நல்லவர்கள் மட்டுமோ இருக்க மாட்டார்கள். துஷ்டர்களை நிக்ரகம் செய்யவும் சிஷ்டர்களைப் பரிபாலிக்கவுமே கடவுள் பல அவதாரங்களை எடுத்திருக்கிறார் என்று ஹிந்து புராணங்கள் கூறுகின்றன. அப்படியிருந்தும், இந்த உலகத்தில் மலின சக்திகள் இருந்து கொண்டுதானிருக்கின்றன. இது காலங் கடந்த உண்மை. இதனை நமது தலைவர்கள் இப்பொழுதுதான் உணர்ந்திருக்கிறார்களென்று சொன்னால், நாம் ஆச்சரி

யப்படாமல் வேறென்ன செய்ய முடியும்?

இந்திய அரசியல் வாழ்வில் காந்தியடிகள் ஒத்துழையாமைத் தத்துவத்தைக் கொண்டு புகுத்திய காலத்திலேயே, இந்த இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதைப் பற்றி அரசியல் நிபுணரான லோகமான்ய திலகர் சந்தேகப்பட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

"ஒத்துழையாமைத் திட்டம் எனக்குப் பிடித்துத்தானிருக்கிறது. ஆனால் ஜனங்களிடமிருந்து அந்த இயக்கத்திற்கான தியாகத்தை நாம் எதிர் பார்க்க முடியுமா வென்பதுதான் சந்தேகமா யிருக்கிறது."

திலகருடைய இந்தச் சந்தேகம் அப்படியே ஊர்ஜிதமாக வில்லை யென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒத்துழையா இயக்கத்தின் போது ஜனங்கள் அதிகமான தியாகங்களைச் செய்தார்கள். இவர்களுடைய தியாக சக்தியைக் கண்டு உலகமே ஸ்தம்பித்துப் போய் விட்டது. ஆனால் இந்தத் தியாக சக்திகள், சரியாக உருவகப் படுத்தப்பட வில்லை யென்பதுதான் நமது குறை.

ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு முதலிய இயக்கங்களுக்கு அடிப்படையாயிருந்த தத்துவங்கள் எவையோ அவற்றை—அஹிம்சை, சத்தியம் முதலியனவற்றை—ஜனங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. அப்படி எளிதில் தெரிந்து கொள்ளவும் முடியாது. இதற்குக் காரணம் என்னவாயிருக்கக் கூடுமென்பதைப் பற்றி நமது தலைவர்கள் சிந்திக்கவேயில்லை. சுதந்திரமில்லாத ஒரு நாட்டில் இந்தத் தத்துவங்கள், நன்மையை உண்டு பண்ணு விட்டாலும் தீமையையாவது உண்டு பண்ணுமலிருக்குமா வென்பதைப்பற்றிக்கூட நமது தலைவர்கள் கவலை கொள்ள வில்லை. இந்தத் தத்துவங்களைக் கொண்டு புகுத்திய தன் விளைவு என்ன? பண்டித ஜவஹர்லாலே கூறட்டும்:—

"ஒரு கூட்டத்தையோ அல்லது ஒரு தேசத்தாரையோ விவேகம் பொருந்திய கட்சியினாலும், நியாய புத்திக்கு மனுச் செய்து கொள்வதனாலும், மன மாற்றத்தை உண்டாக்கி விடலாம் அல்லது போராட்டத்தைத் தடுத்து விடலாம் என்று நினைப்பது தன்னை ஏமாற்றிக் கொள்வதாகும்."

* * *

ஆனால் அவரை (காந்தியடிகளை) சாத்வீகத்தில் பின் பற்றுபவர்களாகச் சொல்லிக் கொள்பவர்களில் பலர் வெறும் 'சோடை'ப் பேர்வழிகள், டால்ஸ்டாய் வர்க்கத்தைச் சேர்ந்த சாத்வீகிகள்! அவர்கள் அர்த்தமில்லாத சமாதானப் பிரியர்கள். வாழ்க்கைக்கும் உண்மைக்கும் பொருத்த மில்லாமல் வாழும் சிறு கூட்டத்தினர். அவர்கள் தங்களைச் சுற்றிச் சில பேர்வழிகளை வளைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய நிலைமையை மாற்றக் கூடாது என்றும், மாற்றினால் சாத்வீக லட்சியம் மறைந்து போகுமென்றும் அவர்கள் வரட்டு வியாக்கியானம் செய்கிறார்கள். இவ்வாறு

சமயோசித புத்தி, லேசாக நுழைந்து கொள்ளுபவர்களின், எதிரியை மன மாறச் செய்யும் முயற்சியால் 'சாத்வீகம்' என்ற பெயரை வைத்துக் கொண்டு, தாங்களே எதிரியின் கட்சியில் போய்ச் சேர்ந்து கொள்ள நேரிடுகின்றது. உற்சாகம் குறைந்து, நாம் பலவீனமடையும் பொழுது, அந்தச் சந்தர்ப்பத்தில் லேசாகப் பின்னடைய நேரிடுகின்றது. அப்பொழுது ராஜீ மனப்பான்மை ஏற்படுகிறது. எதிரியை மன மாறச் செய்யும் சாமர்த்தியம் இது என்று தங்களையே சௌகர்யமாகச் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள்."

—சுயசரிதம்

இனி, காங்கிரசின் எதிர்கால வேலைத் திட்டம் என்னவாயிருக்கு மென்பது தெரியவில்லை. தலைவர்கள் இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்களென்று நம்புகிறோம். எப்படியும், இந்த எதிர்கால வேலைத் திட்டமானது, 'வெறும் பாலைவனமா'யில்லாமல் உருப்படியான, பயன் தரக்கூடிய வேலைத் திட்டமாயிருக்கு மென்றே நம்புகிறோம்.

இவ்வளவெல்லாம் கூறிய நாம், காந்தியடிகளின் மகத்தான ஆத்ம சக்தியையும், தம் கொள்கையில் அவர் கொண்டுள்ள உறுதியையும் எப்படி வியந்து போற்றாமலிருக் முடியும்? நாம் கொண்டுள்ள கருத்தைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் சொல்லும் ஆற்றல் அவருக்கு எப்பொழுதுமே உண்டு. சத்தியத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள அவர், எந்த விதமான எதிர்ப்பையும் புன்சிரிப்புடனேயே சமாளித்துச் செல்கிறார். இதனால் அவருடைய பெருமை பன்மடங்கு உயர்கிறது. அவரிடம் தெய்விக சக்தி பரிமளித்து நிற்கிறதென்று. பொது ஜனங்கள் அவரைப் போற்றுவதற்கும் இதுவே காரணம். நாமும் அவரை இந்தக் காரணத்திற்காகவே போற்றுகிறோம்.

யுத்தம்

ஐரோப்பிய யுத்தத்தைப் பற்றி நாம் அதிகமாக விஸ்தரித்துப் பேச இப்பொழுது விரும்பவில்லை. ஏனென்றால் இந்த நிமிஷத்தில் எந்த விதமான நிலைமை ஏற்படு மென்பதைப் பற்றி யாருமே ஒன்றுஞ் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆனால், பிரான்சின் வீழ்ச்சி யாரையுமே திடுக்கிடச் செய்திருக்கிறது. உலகத்திலேயே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடுத்தபடியாக, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குத்தான் ஐந்து கண்டங்களிலும் நாடுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஓர் ஏகாதிபத்தியம், தன்னை விட மிஞ்சின ஒரு பலாத்கார சக்திக்கு இரையாகி விட்டது.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற வாசகங்கள் பிறந்தது பிரான்சில்தான். உலகத்திலேயே புரட்சி எண்ணங்களுக்கு விதை போட்ட வால்டேர், ரூஸோ முதலிய அறிஞர்களை உண்டு பண்ணியது பிரான்ஸ்தான். இத்தகைய நாடு இப்பொழுது சிறகொடிந்த பறவையாயிருக்கிறது. பிரான்சிலேயே ஏறக்குறைய பாதி பாகத்திற்கு மேல் ஜெர்மன் ஆதிக்கத்திற்குட் பட்டு விட்டது. இது மிகவும் துக்ககரமான விஷயம். பிரெஞ்சு மக்களுக்கு நமது பூரண அநுதாபம்.

மதுரை நாயக்கர்கள் காலத்துச் சேதுபதிகள்

—கே. ஜீ. கிருஷ்ணன்
B. Sc. (Hons.)

நாயக்கர்கள் வரலாறு

கிருஷ்ண தேவராய் 1509ம் வருஷம் விஜய நகரத்திற்கு மகா ராஜாவாகச் சிம்மாசன மேறினார். விஜய நகரத்து ஆட்சியின் எல்லையில் தெற்கே கன்னியா குமரிவரை யுள்ள பாகங்கள் சேர்ந்திருந்தன. இந்த ராஜ்யத்திற்குள் பாண்டிய, சோழ இராஜ்யங்களும் உள்ளடங்கி யிருந்தன. கிருஷ்ண தேவராயருக்குப் போர் வீரராகவும், தலைமை அதிகாரியாகவும் அமர்ந்திருந்த நாகம நாயக்கருக்கு வெகு காலத்திற்குப் பின் (காசி விசுவநாதர் தரிசனத்திற்கும் நடந்து சென்றதாகத் தெரிகிறது) ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு விசுவநாதன் எனப் பெயரிடப் பட்டது. விசுவநாதன் 16 வயதடைந்ததும் கிருஷ்ண தேவராயருக்குத் தாம்பூலம் சுமப்பவனாக வேலைக்கு அமர்ந்தான். விசுவநாதன் அரண்மனை உத்தியோகங்களில் மேன் மேலும் உயர்ந்து கடைசியாக ஒரியா (Orissa) தேசத்து யுத்தத்திற்குக் கிருஷ்ண தேவராயருடன் சென்றிருந்தான். இந்த யுத்தத்தில் போர் செய்த வல்லமையைக் கண்டு ராயர் விசுவநாதனை இராய்ச்சூரைக் கைப்பற்ற அனுப்பிச் சித்தி பெற்றார். இதனால் விசுவநாதன் தென் பாகத்தின் கலகங்களை அடக்கத்தகுந்த படையுடன் அனுப்பப்பட்டான்.

சோழ ராஜன் (வீரசேகரன்) பாண்டிய தேசத்திற்குப் படை யெடுத்து வந்து பாண்டிய ராஜன் சந்திர சேகரனைத் தோற்கடித்து விட்டான்; ஆகவே சந்திர சேகரன் கிருஷ்ணராயரிடம் முறையிட, ராயர் உடனே நாகம நாயக்கரை யனுப்ப அவர் சோழ ராஜனை ஜெயித்து விரட்டி விட்டார். தென்பாகத்துக் கலகங்களைக் குறித்துத் தகுந்த ஆளை மதுரையை ஆளவைக்க வேண்டுமென்று நினைத்து நாகம நாயக்கர் ராயரின் கட்டளைப் படி பாண்டியனைச் சிம்மாசன மேற்றி வைக்கவில்லை, இதனால் ராயருக்குச் சினமுண்டாகி நாகமரைத் தண்டித்து வர ஒருவரும் முன்வராமை கண்டு நாகம நாயக்கர் குமாரன் விசுவநாதனை ஓர் படையுடன் அனுப்பி வைத்தார். விசுவநாதன் அரசர் கட்டளையைச் சிரமேற்றாங்கித் தன் தகப்பனை எதிர்த்துக் கைதியாக்கி அரசர் முன்னிலையில் கொண்டுவந்

தான். உடனே அரசர், விசுவநாதன் கடமையைச் சற்றும் பின் வாங்காது செய்து முடித்ததற்குப் புகழ்ந்து நாகம நாயக்கரை மன்னித்தார்.

தென் பாகத்தில் தகுந்த ஆட்சியின்றி கலகங்கள் விளைந்து கொண்டே வந்ததால் விசுவநாத நாயக்கரை பாண்டிய நாட்டிற் கதிபதியாகவும், தென் பாகத்திற் கதிகாரியாகவும் நியமித்து அனுப்பினார். அது சமயம் பாண்டியப் பரம்பரையும் மறைந்து போய் விட்டது. விசுவநாத நாயக்கர் ஆளுகைக்குப் பூரண அதிகாரியாகி தன் பிரதானிகளாகிய அரியநாதன், கேசவப்ப நாயக்கர் முதலியவர்கள் உதவியைக் கொண்டு மதுரைக் கோட்டைகளையும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவாலயங்களையும் கட்டி முடித்தார். விசுவநாத நாயக்கர் ஏராளமாய்ச் செலவு செய்து அநேக சீர்திருத்தங்கள் செய்தார். இவர் காலத்தில் மதுரை இராஜ்ஜியம் வடக்கே உறத்தூர், வாலிகோண்டபுரம், தெற்கே கன்னியாகுமரி, மேற்கே கோயமுத்தூர், ஈரோட், தாராபுரம் கிழக்கே இராமேஸ்வரம் கீழ்கடல் வரையும் பரவியிருந்தது. விசுவநாத நாயக்கர் 1529-64 வரை ஆண்ட பின் அவர் குமாரர் கிருஷ்ணப்ப நாயக்கர் 1. 1572 வரையிலும், அவருக்குப் பின் அவர் குமாரர் வீரப்ப நாயக்கர் 1595 வரையிலும், அவர் குமாரர் கிருஷ்ணப்ப நாயக்கர் 11. 1691 வரை ஆண்ட பிறகு இவருடைய தமையனார் கஸ்தூரிரங்கர் சிம்மாசனமேறிய ஒரு வாரத்திற்குள் கொலையுண்டார். பிறகு கிருஷ்ணப்ப நாயக்கரின் மற்றொரு தமையனார் விசுவப்ப நாயக்கர் குமாரர் முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.

மறவர் நாட்டு ஸ்தாபனம்

இராமநாதபுர நகரும், அதைச் சுற்றியுள்ள பாகங்களும் மறவர் நாடாயிருந்தது. பாண்டியர்கள் சேதுபதிகளை ஏற்படுத்தி மறவர் நாட்டை ஆண்டு வந்திருக்கலாமெனக் கருதப் படுகிறது. நாயக்கர்களின் தலைமையான விசுவநாதர் முன்னேற்பாடுகளைக் களைந்து புதிதாக இரண்டு காரியக்காரர்களை நியமித்து அவர்களால் மறவர் நாட்டை மேல் பார்த்து வந்தார். இதனால் நாடு சீர்பெறாமல் களவு, கொலை முதலிய கொடிய செய்கைகள் அதிகமாயின.

நாயக்கர்கள் கீழ் கடற்பாகங்களை மேல் பார்க்காமல் விட்டதால் போர்த்துக்கீயர் வந்து குடியேறி முத்து எடுப்பதிலும், மீன் பிடிப்பதிலும் வேலை பார்த்து வந்தனர். போர்த்துக்கீயர் நாயக்கர் உத்தரவின்றிக் குடியேறிக் கொண்டதால், அவர்களை உள்ளேற விடாமல் தடுப்பதவசியமா யிருந்தது. தவிரவும் புண்ணிய ஸ்தலமாகிய இராமேஸ்வரத்திற்குப் போகும் கோடானகோடி ஜனங்களை மறவர் நாட்டில் கொள்ளையடித்துத் தயங்க விடுவது வழக்கமா யிருந்தது. இக்காரணங்களை முன்னிட்டு முத்துகிருஷ்ண நாயக்கர் பழைய சேதுபதிகளை மறுபடியும் உண்டாக்கி, மறவர் நாட்டை அடக்கியாள நினைவு கொண்டார். அச் சமயம் கொலை, களவில் அழுந்திக் கிடந்த நாட்டைப் புதிய நாடாக்கத் தகுந்த ஆள் வேண்டியதா யிருந்தது. அத் தருணத்தில் சடைக்கத் தேவர் I தகுந்தவராய் காணப் பட்டார். ஆகவே முத்துகிருஷ்ண நாயக்

கர் சடைக்கத் தேவரை உடையன் சேதுபதியாக ஏற்படுத்தி வருஷா வருஷம் கப்பங்கட்டி ஆண்டு வரும்படி செய்தார். உடையன் சேதுபதி இராமநாதபுரத்தை ஆண்டு வரும் போது இராமேஸ்வரம் ஏகும் பிரயாணிகளின் பாதுகாப்புக்காக இராமநாதபுரம், போகலூர் முதலிய விடங்களில் இராணுவங்களை வைத்திருந்தார். காளையார் கோவில், பட்டமங்கலம் முதலிய விடங்களை அடக்கி மேல் பார்க்கத் தகுந்த ஆட்களை நியமித்தார்.

உடையன் சேதுபதி அநேக சிறந்த சீர்திருத்தங்களைச் செய்து ஜனங்களுக்கு முன்னேற்றத்தையும், சமாதானத்தையும் உண்டு பண்ணினார். காடுகளைக் களைந்து நல்ல விவசாயங்களை விருத்தி செய்தார். இவர் இராமேஸ்வர ஆலயத்திற்கு 1607ம் வருடத்தில் ஐந்து கிராமங்களும், 1608ல் ஆலயத் தொண்டர்களுக்கு எட்டுக் கிராமங்களையும் தருமமாக ஒதுக்கி வைத்தார். உடையன் சேதுபதி 1623ம் ௵ வரை நல்ல தரும பரிபாலனஞ் செய்து மறைந்தபின், அவர் குமாரர் குட்டன் சேதுபதி ஆட்சிக்கு வந்து 1635ம் ௵ வரை ஆண்டு காலமடைந்தார்.

சடைக்கத் தேவர் II

குட்டன் சேதுபதி மாண்ட பின் அவர் குமாரர் சடைக்கத் தேவர் II ஆளுகையைக் கைக்கொண்டார். அப்பொழுது மதுரையை நாயக்கர்களில் ஏழாவதாகிய திருமலை நாயக்கர் ஆண்டு வந்தார். சடைக்கத் தேவரின் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் குட்டன் சேதுபதியின் வைப்பாட்டிப் பிள்ளை "தம்பி" என்பவர் சேதுபதி ஸ்தானத்திற்கு தனக்கே பூரண உரிமையுண்டென்று தர்க்கித்துத் திருமலை நாயக்கரிடம் முறையிட்டான். திருமலை நாயக்கர் "தம்பி"யை ஆதரித்துச் சடைக்கத் தேவரை நீக்க இராமப்பையா, இரங்கண்ண நாயக்கர் இவர்களின் அதிகாரத்தின் கீழ் பெரும் படையொன்றை யனுப்பினார். திருமலை நாயக்கர் "தம்பி"யை ஆதரித்தது சடைக்கத் தேவர் கப்பம் கட்டத் தவறியதே காரணமெனத் தெரிகிறது. நாயக்கர் போர்த்துக்கீயரின் உதவியைக் கொண்டார். சேதுபதி டச்சுக் காரர்களின் உதவியைப் பெற்றார். இவ்விதமாகவே மேனாட்டார்கள் இரு பக்கமும் சேர்ந்து கொண்டு அடங்கிப் போகிற சண்டையை அதிகப்படுத்தி கையுயர்ந்த பக்கம் தாங்கள் செய்த உதவிக்கு வெகுமானமாக அனேக ஊர்களைக் கைப்பற்றி வந்தனர். இம்முறையையே கடைசி வரைக் கையாண்டு நம் சுதேச மன்னர்களிடமிருந்து இந்தியாப் பூராவையும் கைப்பற்றிக் கொண்டனர்.

திருமலை நாயக்கரின் படை சேதுபதியின் படையை முறியடித்துப் பாம்பன் வரை துரத்திச் செல்லவே சேதுபதி இராமேஸ்வரத்தில் ஒடி மறைந்து கொண்டார். நாயக்கர் படை, பாலம் கட்டித் தீவையடைந்து சேதுபதியைக் கைதி செய்து மதுரையடைந்தனர். இப்போர் முடியுமுன் நாயக்கர் படைத் தலைவர் இராமப்பையா மரணமடைந்தார். "தம்பி" மறவர் நாட்டை ஆள முயன்றபோது குடிகள் இணங்கவில்லை. மேலும் சடைக்கத் தேவரின் உடன் பிறந்தார்

மக்கள் இரகுநாதத் தேவர், நாராயணத் தேவர் இவர்கள் "தம்பி"யை எதிர்த்தனர். இதனால் மறவர் நாட்டில் கலகங்கள் அதிகரிக்கத் தொடங்கின. "தம்பி" மறுபடியும் நாயக்கர் உதவியை நாடினான். நாயக்கர் மறவர் நாட்டின் அபாய நிலைமையைக் கண்டு அதை அடக்கியாள 'தம்பி' தகுந்தவனல்லவென்றறிந்து, சடைக்கத் தேவரைச் சிறையினின்றும் விடுத்து மறவர் நாட்டுக்குச் சேதுபதியாக்கினார். அதற்குப் பின் நாடு முன்போல அமைதியடைந்தது. ஆனால் சில வருடங்களுக்குப் பின் (1645) 'தம்பி' சடைக்கத் தேவரைக் கொலை செய்து விட்டான். உடனே திருமலை நாயக்கர் மறவர் நாட்டை மூன்று பாகமாக்கி, இரகுநாதத் தேவர், அவர் தம்பி தனக்கத் தேவர், 'தம்பி' ஆகிய இம் மூவர்களிடம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் பிந்திய இருவரும் சீக்கிரத்தில் இறந்து போகவே இரகுநாதத் தேவர் தனிப்பட்ட சேதுபதியானார்.

திருமலைச் சேதுபதி

இரகுநாதத் தேவர் காலத்தில் நாட்டின் கஷ்ட நஷ்டங்கள் வெகு விரைவில் நீங்கின. திருமலை நாயக்கருக்கு இவர் அநேக தடவை உதவி செய்திருக்கிறார். திருமலை நாயக்கரை எதிர்த்து வந்த மகமதியரையும் (?), எட்டியாபுரத்து அதிபதியையும் இரகுநாதத் தேவரின் உதவியினால் நாயக்கர் முறியடித்துத் துரத்தி விட்டார். இப்பேருதவிக்காக நாயக்கர் இரகுநாதத் தேவருக்கு மன்னார் கோவிலையும், முத்துச்சிப்பி வருமானத்தில் கொஞ்சமும் பிரதி உபகாரமாக அளித்தார். அதனோடு அநேக பட்டங்களையும், மதுரையில் நடைபெறுவதைப் போல நவராத்திரி உற்சவத்தைக் கொண்டாடவும் அனுமதியளித்தார். (இவ்வுரிமை வேறு யாருக்கும் இருந்ததில்லை.) இரகுநாதர் இராமேஸ்வரத்தில் அநேக சீர்திருத்தங்களும் செய்தார். இதற்காக 'இராமேஸ்வர அதிபதி' என்ற நாமமு மளிக்கப்பட்டார்.

காந்தீரவ நரசராஜா (மைசூர் மகாராஜா)வின் படை மதுரையை முற்றுகை போட்டது. மைசூர் சேனாதிபதி தான் கைதி செய்த ஆண், பெண் இருபாலரையும் மூக்கை யறுத்து மைசூருக் கனுப்பினான். இத்தருணத்தில் நாயக்கர் படுத்த படுக்கையிலிருந்தமையால் தன் உண்மைச் சிநேகர் இரகுநாதச் சேதுபதிக்குச் சேதி விடுத்தார். உடனே இரகுநாதர் 25,000 மறவர்களைத் திரட்டி வந்து மதுரையிலிருந்த 35,000 படையுடன் மைசூர் இராணுவத்தை எதிர்த்துப் போராடி திண்டுக்கல் வரை துரத்தி வெற்றி பெற்றார். இதில் இருபுறத்திலும் சுமார் 24,000 பேர் மாண்டனர். இவ் வெற்றிக் கறி குறியாய் திருமலை நாயக்கர், இரகுநாதச் சேதுபதிக்கு 'திருமலைச் சேதுபதி' யென்ற பட்டத்தை யளித்ததோடு கப்பம் வாங்குவதையும் நிறுத்தி அநேக வெகுமானங்களையும் அளித்தார்.

பேர் பெற்ற மங்கம்மாள் கணவனும் *ஒன்பதாவது நாயக்கரு மாகிய சொக்கநாதர் மதுரையை 1659ம்-வருஷத்திலிருந்து ஆளஏற்பட்டது. இவர் 16-வது வயதில் சிம்மாசன மேறினார். இவரின் உயிர் நீக்க அநேக சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. ஆவைகளுக்

கெல்லாம் தப்பி, தன் விரோதிகளைக் களைந்து செங்கோல் செலுத்தினார். இவர் காலத்தில் அநேக யுத்தங்களேற் பட்டதோடு சுமார் 1662-ல் கொடிய பஞ்சமும் ஏற்பட்டு ஆயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டனர். ஆகார மற்ற ஜனங்களுக்கு ஆகாரம் தருவதாகச் சொல்லி வெள்ளையர்கள் (டச்சுக்காரர்கள்) அவர்களை அழைத்துக் கொண்டு கடலோரம் சென்றவுடன் படகுகளில் ஏற்றி அடிமைகளாக மற்ற பாகங்களில் கொண்டு சென்று விற்றனர்.

நாயக்கர்-சேதுபதி யுத்தம்

1663ல் பீஜப்பூர் மகமதிய அரசர் ஐதல்கான் என்ற சேனாதிபதியின் கீழ் ஒரு படையைத் திருச்சினாப்பள்ளிக் கனுப்பினான். ஐதல்கான் மதுரைக்கு வந்து ஜனங்களைக் கொன்றும், கிராமங்களை நெருப்புக் கிரையாக்கியும் வந்தான். சொக்கநாத நாயக்கர் ஒன்றுந் தோன்றாதவராகி ஐதல்கானுக்குப் பெருத்த திரவியங் கொடுத்து அனுப்பிவிட்டார். இச்சமயத்தில் திருமலைச் சேதுபதி யாதொரு உதவியும் புரியவில்லை. ஆகவே சொக்கநாதர் சேதுபதியின் கர்வத்தை யடக்க ஓர் பெரும் படையை மறவர் நாட்டுக்கனுப்பி திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோவில் முதலிய ஊர்களைக் கைப்பற்றினார். சேதுபதியின் படை அடர்ந்த காடுகளில் மறைந்து நின்று யுத்தம் புரிந்தது. இச்சமயத்தில் மதுரையிலோர் உற்சவத்தை நடத்த வேண்டியதா யிருந்ததால் சொக்கநாதர் தன் சேனாதிபதியை யுத்தத்தை நடத்தச் செய்து விட்டுத் திரும்பினார். அப்பொழுது சேதுபதியின் படைகள் கூடிய சீக்கிரம் திரண்டு வந்து நாயக்கர் படையை ஜெயித்து முறியடித்து விட்டது. இதை யறிந்த நாயக்கர் அளவற்ற விசனமுற்றுத் தான் கைப்பற்றிய ஊர்களை வைத்துக் கொண்டு மறவர் நாட்டோடு எதிர்க்காம லிருந்துவிட்டார். திருமலைச் சேதுபதி 1674ல் விண்ணுலகை யடைந்தார்.

“கிழவன்” சேதுபதி

திருமலைச்சேதுபதிக்குப் பின் அவர் உடன் பிறந்தான் மகன் இராஜ சூரியன் என்பவர் ஆட்சிக்கு வந்தார். அப்பொழுது தஞ்சாவூர் இராஜ குமாரன செங்கமலதாஸ் சொக்கநாத நாயக்கரை எதிர்த்துப் போராடினான். இராஜ சூரியன் செங்கமலதாஸுக்கு உதவி புரிந்ததைக் கண்ட நாயக்கரின் சேனாதிபதி வெங்கட கிருஷ்ணப்பன் இராஜ சூரியனைக் கைதியாக்கிச் சிறையிலிட்டான். இராஜ சூரியன் சிறையிலேயே கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. நாயக்கர், மறவர் நாட்டுக்குத் தலைமை வகிக்கத் தகுந்த ஆளை மறவர்களே தேர்ந்தெடுக்கும்படி கட்டளையிட்டார். அதிக காலம் தர்க்கம் நடந்து கடைசியாகத் திருமலைச் சேதுபதியின் வைப்பாட்டி மகன் இரகுநாதத் தேவரைச் சேதுபதியாகத் தேர்ந்தெடுத்தனர். இரகுநாதத் தேவர் அப்பொழுது வயதில் முதிர்ந்தவரா யிருந்ததால் அவரைக் “கிழவன்” சேதுபதி என்றழைத்தனர். இவர் வெகு ஊக்கமும், தைரியமுமுடையவர். இவர் தன் சார்பிலிருந்த இரு மனிதர்களைத் திடீரென்று கொன்று விட்டார். ஏனெனில் இவர்களின் அதிகாரம் அதிகமா யிருந்ததால் தனக்குத் திடீரென்று ஆபத்து நேரிட்டாலும் நேரிடலா

மென நினைத்தார். சேதுபதியின் ஆட்சியின் கீழ் புதுக்கோட்டையை ஆண்டுவந்த பல்லவராயன் தொண்டமான் தஞ்சாவூர் மகா ராஜாவை நேசித்து அவருடைய ஆட்சிக்குக் கீழிருக்க ஆசை கொண்டதைச் சேதுபதி யறிந்து தொண்டமானைத் துரத்தி விட்டு அவருடைய விடத்தில் தன் மைத்துனர் இரகுநாதரை ஏற்படுத்தினார். இந்த இரகுநாதரே தற்காலப் புதுக்கோட்டை இராஜ்ஜியத்தை ஸ்தாபனஞ் செய்தவர்.

"பர ராஜகேசரி"

சொக்கநாத நாயக்கர் அடிக்கடி யுத்தங்கள் நடத்தி வந்ததால் ஜனங்களின் கஷ்டம் அதிகரித்தது. இதைக் கண்ட குடிகள் சொக்கநாத நாயக்கர் மதி யிழந்து விட்டதாகக் கருதி அவரைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கிச் சிறையிலிட்டனர். அவர் ஸ்தானத்திற்கு அவருடைய இளைய சகோதரர் முத்துலிங்க நாயக்கரை (1678) ஏற்படுத்தினர். இவர் காலத்திலும் கஷ்டங்கள் ஒழியவில்லை. வைகையில் வெள்ளம் வந்து அநேக வீடுகளும் உயிர்களும் சேதமாயின. இப் பரிதாபகரமான நிலைமையில் ரஷ்டம்கான் என்னும் மகமதியர் தன் படையுடன் முத்துலிங்கர் வெளியில் சென்றது பார்த்து, திருச்சினாப்பள்ளிக்குள் நுழைந்து சிறையிலிருந்த சொக்கநாத நாயக்கரைக் கொணர்ந்து மறுபடியும் அவரை அரசராக நியமித்துத் தானும் அதிகாரம் செலுத்தி வந்தான். மைசூர் படையொன்றை எதிர்த்துச் சண்டை செய்ய முடியாததால் "கிழவன்" சேதுபதி, கோவிந்தப்பையா முதலியோர் சேர்ந்து ரஷ்டம்கானையும் அவன் ஆட்களையும் கொன்று விட்டனர். பிறகு சொக்கநாத நாயக்கரின் நிலைமை ஸ்திரமாயிற்று. இப் பேருதவிக்கு "கிழவன்" சேதுபதிக்கு "பரராஜகேசரி" (அன்னிய அரசர்க்குச் சிங்கம்) என்ற பட்டமளிக்கப்பட்டதோடு குமாரப் பிள்ளையும் மறவர் நாட்டின் சீர்திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டான். சொக்கநாதர் (1682) இறந்தவுடன் அவர் குமாரர் இரங்ககிருஷ்ணப்ப நாயக்கர் III ஆட்சிக்கு வந்தார்.

"கிழவன்", சேதுபதியின் சதியோசனை

1686ல் "கிழவன்" சேதுபதி முன்பு மதுரை நாயக்கரின் மந்திரியாயிருந்த வெங்கட கிருஷ்ணப்பாவோடு சேர்ந்து சதியாலோசனை செய்து? தஞ்சாவூர் மகாராஜாவான செங்கமலதாஸின் உதவியைப் பெற்று மதுரையை எதிர்த்துப் போராட ஆயத்தமானார். முன்பு சொக்கநாத நாயக்கர் "கிழவன்" சேதுபதிக்கு குமாரப் பிள்ளையை வேலைக்காக அளித்தாரென்று கூறினோம். அக் குமாரப் பிள்ளை சேதுபதியின் அடாத யோசனையை அறிந்து சேதுபதியையும், வெங்கட கிருஷ்ணப்பனையும் கைதி செய்து மதுரைக்கனுப்ப முயன்றான். இதை யுணர்ந்த சேதுபதி குமாரப் பிள்ளையையும், அவர் குடும்பத்தையும் அடித்துக் கொன்றான். இதைக் கேட்ட இரங்க கிருஷ்ண நாய்க்கர் மறவர் தலைவரை தண்டிக்கப் படையெடுத்துச் சென்றார். ஆனால் சேதுபதி தஞ்சாவூரிலிருந்து உதவியைப் பெற்று நாய்க்கரின் படையை முறியடித்துத் துரத்தி விட்டார்.

இரங்ககிருஷ்ண நாய்க்கருக்கு அவர் இறந்த பின் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆதலால் இரங்கக்கிருஷ்ண நாய்க்கரின் அன்னை மங்கம்மாள் 1689ல் மதுரை ஆட்சியைக் கைக்கொண்டு அநேக யுத்தங்கள் புரிந்து பகைவரைத் தந்திரமாய் கைவசப் படுத்தியும், ஜெயித்தும் வந்தாள். மங்கம்மாள் தனக்குண்டான பல யுத்தங்களால் மறவர் நாட்டைச் சரியாக அடக்கியாள முடியாததால் 'கிழவன்' சேதுபதி சுயேச்சையாக ஆண்டு, மதுரைக்கு இஷ்டமான கப்பங்கட்டி வந்தார். 1698ல் 'கிழவன்' சேதுபதி மதுரையைக் கைப்பற்றியதாகவும், கொஞ்ச நாளைக்குள் நரசப்பய்யா (மதுரைச் சேனாதிபதி) சேதுபதியை மதுரையை விட்டுத் துரத்தி விட்டதாகவும் மார்ட்டின் என்னும் கிறிஸ்து மதபோதகரின் கடிதத்தால் தெரிகிறது.

மதுரையோடு யுத்தமும் சுய ஆட்சியும்

மங்கம்மாள் தஞ்சாவூரை எதிர்த்து யுத்தம் செய்த காலத்தில் 'கிழவன்' சேதுபதி தஞ்சாவூரோடு ஒற்றுமையாயிருந்ததால் 1702ல் மங்கம்மாள் சேதுபதியைத் தண்டிக்க நரசப்பையாவின் கீழொரு படையை அனுப்பினாள். இப்பொழுது நரசப்பய்யா தஞ்சாவூரின் உதவியைப் பெற்றுச் சேதுபதியை எதிர்த்ததில் தோல்வியுற்றதோடு தானும் உயிர் துறக்க நேரிட்டது. 1702ல் 'கிழவன்' சேதுபதி மதுரையின் சம்பந்தத்தை அறவே யொழித்துச் சுய அரசாய் ஆளத் தொடங்கினார். 1709ல் இராமநாதபுரம் பஞ்சத்தால் பீடித்திருக்கும் போது தஞ்சாவூர் சேனை போர் புரியவர அதைச் சேதுபதி முறியடித்துத் துரத்தித் தஞ்சாவூரைச் சேர்ந்த அரந்தாங்கிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார்.

'கிழவன்' சேதுபதி 1710ல் சுமார் தன் 80வது வயதில் மரணமடைந்தார். முன் குறிப்பிட்ட மார்ட்டின் கடிதப்படி 'கிழவன்' சேதுபதிக்குச் சுமார் 47 மனைவிகளிருந்ததாகவும் அவர்களெல்லாம் 'கிழவன்' சேதுபதியோடு உடன்கட்டையேறி விட்டனர்களென்றும் காணப்படுகிறது.* இவருடைய அரசாட்சி 1674லிருந்து 1710 வரை நடந்து வந்தது. இவர் நல்லறிவும், மனோவல்லமையும் படைத்தவர். இவர் ஆட்சியில்தான் மறவர் நாடு சுதந்திரமடைந்தது. இவர் கிறிஸ்து மத போதகர்கள் அநேகர்களைக் கொடுமையாகத் தண்டித்து மேற்படி மத விருத்தியைத் தடுத்தார். இச் சேதுபதி தன் குடிகள் மீதும், தேசத்தின் மீதும் மிகவும் அன்பு கொண்டவர். தன் கடைசி நாட்களில் இவர் கொடிய பஞ்சத்தையும் பார்க்க நேரிட்டது. இவர் காலத்திலேயே ஓர் பெரும் புயலேற்பட்டு அளவற்ற சேதங்களேற்பட்டன. 'கிழவன்' இறக்கு முன் தன் வைப்பாட்டி மகனாகிய பவானி சங்கர தேவரை தனக்குப் பின் ஆளுகைக்கு வர நியமித்தார். ஆனால் குடிகள் சம்மதிக்காததால் 'கிழவன்' தன் இளைய குமாரனாகிய விஜயரகுநாதத் தேவரை சிம்மாசனமேற்றுவிக்கச் சம்மதித்தார். மூத்த குமாரனான வடுகநாதத் தேவர் தன் இராஜ்ஜியத்தை நல்லறிவு படைத்த

* மதுரை நாயக்கர்களின் மனைவிகளும் தங்கள் கணவர்கள் இறந்ததும் உடன் கட்டை யேறி வந்தனர்.

தன் தம்பிக்கே கொடுத்து விட்டதாகத் தெரிகிறது.

விஜயரகுநாத சேதுபதி

விஜயரகுநாத சேதுபதியைக் குடிகள் கொண்டாடினார்கள். பவானி சங்கரன் எப்பொழுதும் சேதுபதிக்கு இம்சை கொடுத்து வந்தான். சேதுபதி அரந்தாங்கிக் கோட்டையிலேயே வசித்து வந்தார். இவர் கடவுள் வழிபாட்டில் சிறந்தவர். இராமேஸ்வரத்திற்கு அடிக்கடி போய் வந்தார். அங்கே அநேக கோவில்களைக் கட்டி அவைகளுக்கு வேண்டிய நிதிகளையும் ஏற்படுத்தினார். இவர் கிறிஸ்துமத போதகர்களுக்கு இடம் கொடுத்து மதுரையில் (1711ல்) பெரிய கிறிஸ்துவ ஆலயம் ஏற்பட்டது. ஆனால் கொஞ்ச காலத்திற்குள் அவர்களின் கொடிய செய்கைகளுக்காக அவர்களை வெறுத்தார். அன்றியும் அவர்கள் கோயில்களையும் அழித்தார். வெகு காலம் வருத்தி வந்த பஞ்சம் 1720ல் நீங்கிற்று. மழை ஏராளமாய்ப் பெய்து தேசம் செழிப்படைந்தது. இச் சமயத்தில் பவானி சங்கரன் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மகாராஜாக்களின் உதவியைக் கொண்டு அரந்தாங்கியை எதிர்த்தான். திடீரென்று சேதுபதி வியாதியஸ்தராகி இராமநாதபுரம் கொண்டு சென்றவுடன் (1720) இறந்தார்.

பவானி சங்கரனின் கொடுமை

விஜயரகுநாத சேதுபதி இறக்கு முன் தாண்டத் தேவரை ('கிழவன்' சேதுபதி தகப்பன் வல்கயில் ஓர் பேரன்) அரசாட்சிக்கு ஏற்படுத்தினார். ஆனால் பவானி சங்கரன் தன் மாமியாளின் உதவியாலும், சில குடிகளின் ஒத்தாசையாலும் மறவர் நாட்டுக்குச் சேதுபதியானான். உடனே தாண்டத் தேவர், மதுரை, புதுக் கோட்டை' இராஜக்களின் உதவிகளைப் பெற்று பவானி சங்கரனைத் துரத்தி விட்டார். பவானி பிறகு தஞ்சாவூரை யடைந்து தான் பாம்பாறுக்கு வடக்கே யுள்ள எல்லாப் பாகத்தையும் கொடுத்து விடுவதாகச் சொல்லித் தனக்கு உதவி செய்ய வேண்ட தஞ்சாவூர் மகாராஜா தன் சேனையை அனுப்பிப், புதுக்கோட்டையை ஜெயித்து அவன் இரு இராஜகுமாரர்களையும் கைதி கொண்டார். ஆனால் சமாதானம் ஏற்பட்டது. பிறகு தஞ்சாவூர் சேனை இராமநாதபுரங் கோட்டையைச் சுரங்கமெடுத்து உட்சென்று தாண்டத் தேவரைக் கொன்றவுடன் பவானி சங்கரன் மறுபடியும் சேதுபதியானான்.

பவானி சங்கரன் கொடுங்கோலரசு புரிந்தான். அநேகரின் கிராமங்களை அநியாயமாய்க் கைப்பற்றிக் கொண்டான். அவர்களில் இருவர் (ஒருவர் காத்தய்யா தேவர், தாண்ட தேவரின் தாய் மாமன்) தஞ்சாவூர் மகாராஜாவிடம் சென்று முறையிட்டனர். இவர், பவானி சங்கரன் வாக்களித்தபடி ஊர்களைக் கொடுக்காததால் அவர்களின் முறைப் பாட்டிற் கிணங்கி பவானியை எதிர்த்து உறையூரினருகில் பெரிய யுத்தம் நடந்ததில் பவானியைக் கைதியாக்கிக் கொண்டு தஞ்சாவூர் வந்து சேர்ந்தார்.

மறவர் நாட்டின் பிரிவினைகள்

1729-ல் தஞ்சாவூர் மகாராஜா தனக்கு வாக்களிக்கப் பட்ட ஊர்களைக் கைப் பற்றிக் கொண்டு மீதியான மறவர் நாட்டை ஐந்து பாக

காத்தய்யா தேவருக்குக் கொடுத்தார். காத்தய்யா தேவரின் குமாரன் முத்து விஜய ரகுநாத சேதுபதியாக சிம்மாசன மேறினார். மீதியான இரண்டு பாகங்கள் காத்தய்யா தேவரோடு வந்து முறையிட்ட மற்ற இருவருக்குங் கொடுக்கப் பட்டன. இவர்களி லொருவர் சிவகங்கை இராஜாவானார். இவ்வாறு மறவர் நாடு பிரிக்கப்பட்டுப் போகவே சேதுபதியின் செல்வாக்கும் குறைந்து முன்னிருந்த பெருமையெல்லா மிழந்து சாதாரண அதிகாரியைப் போலொத்த நிலைமை ஏற்பட்டது. இவ்வித மறவர் நாட்டு உட்பிரிவினைகள் மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்திலேற் பட்டன. விஜயரங்க சொக்கநாத நாயக்கருக்குக் குழந்தை ஏற்படாததால் அவருக்குப் பின் அவர் மனைவி மீனாட்சி மதுரையை ஆண்டு வந்தாள். மீனாட்சியின் ஆட்சி சுமார் 4 வருஷ காலம் (1732-6) தான் ஏற்பட்டது. மீனாட்சியோடு நாயக்கர்கள் ஆட்சி பூர்த்தியாகி விட்டது.

நெதர் லாண்ட்ஸ் ஈஸ்ட் இன்டீஸ் எது?

சாதாரணமாக தினசரிப் பத்திரிகைகளில் நெதர் லாண்ட்ஸைப் பற்றியும் ஈஸ்ட் ஈண்டீஸைப் பற்றியும் செய்திகள் இப்பொழுது அடிக்கடி வருகின்றன. இந்த நெதர் லாண்ட்ஸ் பிரதேசம் என்பது யாது? ஹாலந்துக்கு நெதர் லாண்ட்ஸ் என்ற ஒரு பெயருண்டு. டச்சு அரசாங்கம் என்பதும் இதுதான். டச்சு அரசாங்கத்திற்குச் சொந்தமாக கீழ் நாட்டில் சில தீவுகள் இருக்கின்றன. இவைகளையே ஈஸ்ட் ஈண்டீஸ் என்று சொல்வார்கள். ஜாவா, சுமத்ரா, போர்னியோ, செலெபெஸ், மொலுக்கஸ், நியு கினியா, பலி முதலிய பெரிய தீவுகளும், இவை சுற்றியுள்ள இன்னும் பல தீவுகளும் ஈஸ்ட் இண்டீஸ் என்று அழைக்கப் படுகின்றன.

அறிவிப்பு

திருவாளர் ராம. முத்துராமன் செட்டியார் அவர்கள் நமது பிரதிநிதியாக புரோம் மார்க்கத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். அன்பர்கள், அவர் மூலம் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டு ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

——வெ. சா.

பிரசங்கம் 10

ஜனநாயகத்தின் நன்மை தீமைகள்

ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இரண்டு மூன்று நூற்றாண்டுகள் வரை, ஜன நாயகத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தார்களென்பதை, முந்திய பிரசங்கங்களிலிருந்து தெரிந்து கொண்டோம். இந்தக் காலத்தில், பிரஜா உரிமைகளை இவர்கள் எவ்வளவு தூரம் சம்பாதித்துக் கொடுத்தார்கள், ஜன நாயகத்தின் கீழ் இவர்கள் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்தார்கள் என்பதை இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கனவே, சீனாவில் ஜனநாயக எண்ணங்கள் பரவியிருக்கின்றன. நவீன புத்தகங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும், ஜனங்களுடைய மனதில் இந்த எண்ணங்கள் ஒருவித முத்திரையை இட்டிருக்கின்றன. இந்தப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நாம் படிக்கிறபோது, நமக்கு உண்மையிலேயே ஒருவித உணர்ச்சி உண்டாகிறது. மேனாட்டார், அரசியல் உரிமைகளுக்காகப் போராடி மகத்தான வெற்றிகள் அடைந்திருப்பதனால், நமக்கும் அந்த ஜன நாயக எண்ணங்கள் உதிக்கின்றன. தவிர, உலகத்தின் எல்லா நாடுகளிடையிலும் ஜன நாயகமானது பிரசன்னமாகிக் கொண்டு வருகிறதென்று கருதுகிறோம். உலகப் போக்கில் சீனாவும் ஈடுபட வேண்டுமென்றும், ஜன நாயக தத்துவத்தை வேரூன்றச் செய்ய வேண்டுமென்றும் நாம் கூறுகிறோம். இன்னுஞ் சிலர், தற்போது மேனாட்டில் ஜன நாயக எண்ணம் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறதோ அவ்வளவு தூரம் அந்த எண்ணம் சீனாவிலும் முன்னேற்ற மடைந்து விடுமானால், அப்பொழுது, சீனா, தன் லட்சியத்தை அடைந்து விடுமென்றும், நாகரிகம் வாய்ந்த, முற்போக்கான நாடாகி விடுமென்றும் நம்பிலே சிலர் கருதுகின்றனர். ஆனால் புஸ்தகங்களிலே காணப்படுகிற ஜன நாயகத்திற்கும் நடைமுறையிலே காணப்படுகிற ஜன நாயகத்திற்கும் அதிகமான வேற்றுமைகள் இருக்கின்றன. மேனாட்டில் ஜனநாயக அரசாங்கத்திற்கு அடிகோலிய அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளைப் பாருங்கள். இந்த நாடுகளிலேயுள்ள ஜனங்கள் எவ்வளவு அரசியல் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள்? மிகக் குறைவான உரிமைகளையே பெற்றிருக்கிறார்களென்று தான், ஜன நாயகத்தில் நம்பிக்கை யுள்ளவர்களெல்லாரும்

கிருதுகிறார்கள். பிரஜா உரிமைக்காகப் போராடிய எல்லாரும், தங்களுடைய ஜன நாயக லட்சியத்தை விரைவிலே அடையக் கூடுமென்று கருதி தங்களுடைய சக்தியனைத்தையும் பிரயோகித்து, இந்த ஜனநாயகப் போராட்டத்தை நடத்தி யிருக்கிறார்கள். ஆனால் போராட்டத்தில் வெற்றியடைந்த பிறகு, தாங்கள் எதிர் பார்த்ததை விடக் குறைவான அதிகாரத்தையே பெற்றிருப்பதாகக் காண்கிறார்கள். இவர்கள், பூரண ஜன நாயக லட்சியத்தை யடையவில்லை.

கிரேட் பிரிட்டனுக்கு விரோதமாக நடைபெற்ற அமெரிக்க சுதந்திர யுத்தத்தைச் சிறிது கவனிப்போம். அமெரிக்கா, சுதந்திரம் பெற எட்டு வருஷகாலம் யுத்தத்தை நடத்த வேண்டி யிருந்தது. இந்த யுத்தத்திற்குப் பிறகு, வெளியிடப் பெற்ற சுதந்திர பிரதிக்ஞையின் படி, சுதந்திரமும் சமத்துவமும், மனிதனின் இயற்கையானவும் பிரிக்க முடியாதனவுமான உரிமைகள். அமெரிக்க சுதந்திர யுத்தத்தை நடத்தியவர்கள், பூரண சுதந்திரமும் சமத்துவமும் பெற்று விடுவோ மென்றுதான் கருதினார்கள். ஆனால் எட்டு வருஷத்துப் போராட்டத்திற்குப் பிறகு, அவர்கள் என்ன கண்டார்கள்? பிரஜா உரிமைகளில் பல அவர்களுக்குக் கிடைக்கவில்லை, ஏன்? சுயேச் சாதிகாரம் விழ்த்தப்பட்ட பிறகு, ஒரு ஜனநாயக அரசாங்கத்தை எப்படி நிருவாகம் செய்வ தென்பதைப் பற்றி அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்பட்டன. இதனால் இரண்டு கட்சிகள் உண்டாயின. அமெரிக்கப் புரட்சியை நடத்திய தலைவரைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். அவர்தான் வாஷிங்டன். அவருக்குத் துணையாக வேறு சிலரும் இருந்தனர். அவரில் முக்கியமானவர்கள் ஹாமில்டன் (Hamilton) என்பவரும் ஜெப்பர்ஸன் (Jeffersen) என்பவரும். இந்த இரண்டு பேரும், நிருவாகம் நடத்துவதைப்பற்றித் தீவிரமான அபிப்பிராய பேத முடையவர்களா யிருந்தபடியால், இருவரும் தனித் தனியாகக் கட்சிகள் ஏற்படுத்தி, பலரைத் தங்களுக்குப் பின் பலமாகச் சேர்த்துக் கொண்டார்கள். ஜெப்பர்ஸனுடைய கட்சியினர் என்ன அபிப்பிராயப் பட்டார்க ளென்றால், ஜனங்களுக்கு இயற்கையிலேயே சில உரிமைகள் இருக்கின்றன; அவர்களுக்குப் பூரண ஜனநாயக அதிகாரம் கொடுத்தால், அவர்கள் சுதந்திரத்தை உபயோகிக்கும் விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருப்பார்கள்; தங்கள் சக்திகளனைத்தையும் பெரிய காரியங்கள் சாதிப்பதில் பிரயோகம் செய்வார்கள்; அப்பொழுது சமுதாயம் பல படித்தாக முன்னேற்றமடையும் என்பதாகும்.

மனித சுபாவம் இயற்கையில் நல்லதாகவே இருக்கிறது. பூரண ஜனநாயக ஆட்சியின் கீழ் இருக்கும் ஜனங்கள், தங்களுடைய இயற்கையான இந்த சுபாவத்தை வெளிப்படுத்தி, நல்லது செய்யாமல் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார்களானால், அதற்குக் காரணம், அவர்களுடைய முற்போக்கில் ஏதோ தடையேற்பட்டதேயாகும். அதனைக்களைய அவர்கள் மேற் கண்ட விதமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்பது

தான். இதைத் தேவராவிதமாகச் சுருக்கிக் கூறப்போனால், ஒவ்வொரு மனிதனும் இயற்கையிலேயே, சுதந்திரமும் சமத்துவமும் பெற்றிருக்கிறானாகலின், அவனுக்கு அரசியல் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவு உண்டு. அவனுக்கு அரசியல் அதிகாரம் கொடுக்கப்பட்டால், சமூகத்திற்கு அவன் பல நன்மைகளைச் செய்வான்; நல்ல அரசாங்கம் நடைபெறுவதற்கு, எல்லா ஜனங்களும் சேர்ந்து பொறுப்பு ஏற்றுக் கொள்வார்களாதலால், தேசம் செழிப்படைந்து சமாதானமாக வாழும். ஜெப்பர்ஸன் கட்சியினர், பிரஜா உரிமையைப் பற்றி இந்த மாதிரியான கருத்துக்களைத் தான் கொண்டிருந்தனர்.

ஹாமில்டன் கட்சியினரின் கருத்துக்கள், இதற்கு நேர் விரோதமாயிருந்தன. மனித சுபாவம் எப்பொழுதுமே நல்லதாயிருக்கவில்லையென்றும், எல்லா ஜனங்களுக்கும் சமமாக ஜனநாயக அதிகாரம் கொடுக்கப்பட்டால், கெட்ட சுபாவமுள்ள மனிதர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, கெட்ட லட்சியங்களுக்காகத் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வார்களென்றும், அப்பொழுது நியாயம், தர்மம், நல்லொழுக்கம் முதலியன ஒன்றுமே இல்லாமற் போய் விடுமென்றும், இதன் விளைவாகத் தேசத்தில் ஒற்றுமையின்மையோ அல்லது பாமர ஜனங்களின் ஆதிக்கமோ ஏற்பட்டு தேசத்தில் கலகமும் குழப்பமும் உண்டாகுமென்றும் இத்தகைய ஜனநாயக முறைகளைக் கைப்பற்றுவதினால் சமுதாயம் எந்த விதத்திலும் முன்னேற்றமடையாதென்றும் ஹாமில்டன் கட்சியினர் கருதினர். எனவே தேசத்தின் அரசியல் அதிகாரமானது ஜனங்களிடத்தில் பூராவும் ஒப்படைக்கப்படக்கூடாதென்றும், மத்திய அரசாங்கம் ஒன்றினிடத்திலேதான் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், ஜனங்களுக்கு வரம்பிட்ட ஒரு ஜனநாயகமே கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஹாமில்டன் கட்சியினர் வாதித்தனர். கொடுங்கோலனையுள்ள ஓர் அரசனுக்காவது மேற்பார்வை செய்யவும் அவனைக் கட்டுப்படுத்தவும் ஒரு சிலர் இருக்கின்றனர். ஆனால் ஜனங்களிடத்திலேயேவரம்புக்குட்படாத—எல்லையற்ற—அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் அவர்களைக் கட்டுப்படுத்துவதுயார்? இதனாலேயே சுயேச்சாதிகாரம் எப்படி ஒரு வரம்புக்குட் படுத்தப்பட வேண்டுமோ அப்படியே ஜன நாயகமும் ஒரு வரம்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஹாமில்டன் கட்சியினர் சாதித்தனர். இந்த நோக்கத்துடன் 'பெடரலிஸ்ட் கட்சி' என்ற ஒரு கட்சியை ஹாமில்டன் ஆரம்பித்தார்.

அமெரிக்காவில், சுதந்திர யுத்தம் நடைபெறுவதற்கு முன்னர், தனித் தனியாகப் பிரிந்திருந்த பதின் மூன்று மாகாணங்களும் கிரேட் பிரிட்டனின் நேரான ஆட்சிக்குட்பட்டிருந்தன. ஆனால் நாளாக ஆக, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரத்தைச் சகிக்க முடியவில்லை. இதனால் இவை அதனை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற உணர்ச்சிபெற்று, அப்படியே போராட்டத்தையும் நடத்தின. யுத்தத்திற்குப் பிறகு, இந்த மாகாணங்களுக்குள் மறுபடியும் அபிப்பிராய

வேற்றுமைகள் ஏற்பட்டன. சுதந்திரப் போராட்டத்தின் போது, இந்தப் பதின் மூன்று மாகாணங்களின் மொத்த ஜனத்தொகை சுமார் முப்பது லட்சம். இந்த முப்பது லட்சம் பேரில், இருபது லட்சம் பேரே கிரேட் பிரிட்டனை எதிர்த்துப் போராடினர்; பாக்கியிருந்த பத்து லட்சம் பேரும் பிரிட்டிஷ் மன்னரின் விசுவாசிகளாகவே இருந்தனர். அதாவது ஜனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் புரட்சிக்காரர்களாகவும் ஒரு பங்கினர் ஏராஜ விசுவாசிகளாகவும் இருந்தனர். இப்படி இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு விட்டதனாலேயே, சுதந்திர யுத்தம் எட்டு வருஷ காலம் நீடித்தது. யுத்தம், இங்கிலாந்துக்கு விரோதமாகவும் புரட்சிக் காரருக்குச் சாதகமாகவும் முடிந்த பிறகு, இங்கிலாந்துக்கு ஆதரவளித்தவர்கள் நாட்டிலே தங்க முடியாதவர்களாகி, செயிண்ட் லாரென்ஸ் நதியைக் கடந்து ஓடிப் போனார்கள். இவர்கள் சென்று குடியேறிய பிரதேசந்தான் கானடா. இப்பொழுது கூட இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த ஒரு நாடாகவே இருக்கிறது.

சுதந்திர யுத்தமும் ஒரு வாறு முடிந்து விட்டது. ஆனால் மேலே குறிப்பிடப் பெற்ற பதின்மூன்று மாகாணங்களும் சமரஸப் பான்மை கொண்டு வாழவில்லை. இதனால் ஒற்றுமையின்மை வளரத் தொடங்கியது. எந்த நிமிஷத்திலும் ஓர் ஐரோப்பிய வல்லரசு, இந்தப் பதின் மூன்று பிரதேசங்களையும் ஒன்று சேர்த்து விழுங்கிவிடலா மென்ற நிலைமை ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், முக்கியமான சில ராஜதந்திரிகள் ஒன்றுகூடி யோசித்து, எல்லா மாகாணங்களும் ஒன்று சேர்ந்து நிருவாகம் நடத்தக் கூடிய சமஷ்டி அரசியலை ஏற்படுத்தினார்கள். இங்கிருந்து தான், அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அரசியல் ஆரம்பிக்கிறது. இந்தச் சமஷ்டி அரசியல் முறை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் காரணமாகவே, அமெரிக்கா இப்பொழுது பெரிய பணக்கார தேசமா யிருக்கிற தென்று பலரும் அபிப்பிராயப் படுகிறார்கள். சீனாவிலுள்ள சிலரும் இதே அபிப்பிராய முடையவர்களாய், சீனாவிலும் சமஷ்டி அரசியலை ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்பொழுது சீனாவும் பணக்கார தேசமாகி விடுமென்றும் கருதுகிறார்கள். இப்படிக் கருதுகிறவர்கள், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் உள்ள அடிப்படையான வேற்றுமைகளைப் பற்றிக் கவனிக்கவில்லை. அமெரிக்காவில் இந்தச் சமஷ்டி அரசியல் ஏற்படுவதற்கு முன்னரேயே, சமஷ்டியில் சேர்க்கப் பட்ட பதின் மூன்று மாகாணங்களும் தனித் தனியான ஆட்சி முறை வகுத்துக் கொண்டு சுயமாக ஆண்டு வந்தன. இதனால் இவைகளைச் சுலபமாக ஒன்று சேர்க்க முடிந்தது. இந்த அமெரிக்காவின் மாதிரியையே சீனாவும் பின் பற்றுவ தாயிருந்தால், ஏற்கனவே ஒற்றுமைப் பட்டிருக்கும் சீனாவை, சுமார் இருபது மகாணங்களாகப் பிரித்து, அவைகளுக்குத் தனித் தனி ஆட்சி முறைகளை வகுத்துக் கொடுத்து, பிறகு அவற்றை ஒன்று சேர்க்க வேண்டும். இது சாத்தியமா? இந்த மாதிரியெல்லாம் நினைப்பதே தவறு என்று நான்

கருதுகிறேன். பிறர் சொல்வதைக் கேட்டு அப்படியே திருப்பிச் சொல்வது கிளிப் பிள்ளைகளின் வேலை. நாம் அப்படி நடந்து கொள்ளலாமா?

சீனாவின் நிலைமை யென்ன? சீனாவைத் தற்போழ்து பதினெட்டு மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இவற்றோடு, மஞ்சூரியாவிலுள்ள மூன்று மாகாணங்களையும் சிங்கியாங் மாகாணத்தையும் சேர்த்துப் பாருங்கள். மொத்தம் இருபத்திரண்டு மாகாணங்களாகின்றன. இவை தவிர, ஜிஹோல், ஸுயியுவான், கோகோநோர், மங்கோலியா, திபேத்து முதலிய பிரதேசங்கள், சீனாவின் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கின்றன. மஞ்சு அரச பரம்பரையின் 230 வருஷ ஆட்சிக் காலத்தில், மேலே கூறப்பட்ட பிரதேசங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தின்—அதாவது மஞ்சு அரசாங்கத்தின்—நிருவாகத்தின் கீழேயே இருந்தன. இப்படியே, மிங், யுவான், ஸுங், டாங், ஹான் முதலிய அரச பரம்பரைகளின் காலத்திலே சீனா ஒற்றுமைப் பட்ட ஒரு தேசமாகவே, மத்திய அரசாங்கத்திற் குட்பட்டே இருந்து வந்திருக்கிறது. ஒற்றுமைப்பட்ட ஆட்சியின் கீழ் வாழ்ந்திருப்பதுதான் சீனாவின் சுபாவமாயிருந்து வந்திருக்கிறது. இந்த ஒற்றுமைப்பட்ட ஆட்சி காலம், சீனாவின் நற்காலமாகவும் இருந்து வந்திருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு ஒற்றுமை குறைந்ததோ அவ்வளவுக் கவ்வளவு தேசத்தில் குழப்பமும் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நாம் அறிந்து கொள்ள வேண்டிய தென்ன? ஒற்றுமைப்பட்டுள்ள சீனாவை மீண்டும் பிரிக்கக் கூடாதென்பதுதான்.

இப்பொழுது சீனாவில் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால், அது தற்காலிக அம்சந்தான். ராணுவத் தலைவர்கள், சில பிரதேசங்களைத் தங்கள் ஆதிக்கத்துக் குட்படுத்திக் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம். இவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வேண்டி, சமஷ்டி அரசியலை நாம் ஒரு ரட்சையாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. ராணுவத் தலைவர்கள், சீனாவைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று ஏதேனும் காரணத்தைச் சொல்லிப் பிரிப்பார்களானால், மீண்டும் சீனா தலையெடுக்க முடியாது. அமெரிக்காவில் சமஷ்டி அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதால்தான், அந்த நாடு சீரும் செழிப்பு மடைந்தது என்று சொல்லி அதே பிரகாரம் சீனாவிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அது காரணத்திற்கு முன்னர் காரியத்தை வைத்துப் பார்ப்பது போலாகும். சீனாவில் சர்வ தேச ஆதிக்கத்தை ஸ்தாபிக்க ஏன் வல்லரசுகளெல்லாம் முயல்கின்றன? நம்முடைய பல ஹீனத்தை அவை எவ்வாறு கண்டு பிடித்தன? சீனாவிலுள்ள அறிஞர்கள், காலத்திற் கொவ்வாத அபிப்பிராயங்களை வெளியிடுகிறார்களென்று காரணங் கூறி, அவை சீனாவை பரிகாசப் பார்வையோடு பார்க்கின்றன. சீனர்கள், அவர்களுடைய விவகாரங்களை அவர்களால் கவனித்துக் கொள்ள முடியாதென்றும், இதனாலேயே வெளி நாட்டாருடைய மேற்பார்வை

தேவை யிருக்கிற தென்றும் இந்த வெளி நாட்டரசுகள் கூறுகின்றன.

கீழ் நாட்டிலேயுள்ள நாம், எல்லா மாகாணங்களும் சேர்ந்த ஒரு சமஷ்டி அரசியலை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்வோமானால், சீனாவையும் ஜப்பானையும் சேர்த்த ஒரு சமஷ்டி ஏற்படுத்த வேண்டும்; அல்லது, சீனா, அன்னம், பர்மா, இந்தியா, பர்ஷியா, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளைச் சேர்ந்த ஒரு சமஷ்டியை ஏற்படுத்த வேண்டும். இந்த நாடுகள் எப்பொழுதுமே ஐக்கிய நாடுகளாயிருந்ததில்லை. இவையனைத்தையும் ஒன்று படுத்தி, ஆசியா கண்டத்தைப் பணக்கார கண்டமாகச் செய்வதோடு ஐரோப்பாவையும் எதிர்க்கலாம் என்று சொன்னால் அதில்தான் அர்த்தமிருக்கிறது. ஏற்கனவே, சீனாவிலுள்ள பதினெட்டு மாகாணங்களும், மஞ்சூ அரச பரம்பரையின் கீழ் ஒன்றுபட்ட நாடாக ஐக்கியப் பட்டிருக்கின்றன. இந்த மஞ்சூ அரச பரம்பரையை வீழ்த்தி, அதன் ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களை நாம் சுவாதீனப்படுத்திக் கொண்ட பிறகுதான், நாம் சீனாவில் குடியரசை ஸ்தாபிக்க முடிந்தது. அப்படியிருக்க, மீண்டும் ஏன் சீனாவைப் பல மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும்? சீனாவைப் பிரிக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள், ஒவ்வொரு மாகாணத்தையும் தங்கள் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் தான். இந்த நோக்கத்துடன் பல மாகாணங்களைப் பிரித்து மீண்டும் ஒன்று சேர்ப்பது நாட்டை ராணுவ ஆதிக்கத்திற்குட் படுத்துவதாகும். இதனால் சீனாவுக்கு எவ்வித நன்மையுமுண்டாகாது.

அமெரிக்காவிலுள்ள பதின்மூன்று மாகாணங்களும் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்று சுதந்திர மடைந்த காலத்தில், அவைகளுக்குள் எவ்வித அரசியல் ஒற்றுமையுமில்லை. இதனால் ஐக்கியப்பட்ட ஒரு ராஜாங்கத்தைச் சிருஷ்டிப்பது மிகவும் கடினமான காரியமாயிருந்தது. இது காரணமாகவே, ஹாமில்டன் கட்சியினருக்கும் ஜெப்பர்ஸன் கட்சியினருக்கும் பலத்த வாக்கு வாதங்கள் ஏற்பட்டன. தேசத்தின் அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்ட பிறகு, அது விஷயமாக ஒவ்வொரு மாகாணமும் அதனதன் இஷ்டப்படி வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. கடைசியில் ஹாமில்டன் கட்சிதான் வென்றது. மேற்படி அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்ட காலத்தில், தேசத்து மகா ஜனங்கள் ஹாமில்டன் கட்சி யென்றும் ஜெப்பர்ஸன் கட்சி யென்றும் பிரிந்திருந்தார்களாதலினால், மேற்படி அரசியல் திட்டம், இரண்டு கட்சியினரும் சமரஸமாகப் போகக் கூடிய ஓர் அரசியல் திட்டமாக இருந்தது. மத்திய அரசாங்கத்திற்கு என்னென்ன அரசியல் அதிகாரங்கள் உண்டு என்பது அரசியல் திட்டத்திலேயே வரையறுக்கப்பட்டு விட்டது; மேற்படி திட்டத்தில் நிர்ணயிக்கப் படாத அதிகாரங்களெல்லாம் மாகாண அரசாங்கங்களைச் சேர்ந்தவை யென்று கூறப்பட்டன. உதாரணமாக, நாணயங்களை அச்சிடும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டது. இது விஷயத்தில் மாகாண அரசாங்

கங்கள் தலைபிடாதபடி செய்யப்பட்டன. இங்ஙனமே, அந்நிய நாட்டு விவகாரங்கள், தேசியப் பாதுகாப்பு, முதலியவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தின் வசம் ஒப்புவிக்கப் பட்டன. இங்ஙனம், அதிகாரங்களைப் பகுத்துக் கொடுத்தது, மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் ஒரு சமரஸம் ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்பதற்காகத் தான். இந்த சமரஸ ஏற்பாட்டினுல் ஜனங்கள் என்ன விதமான சாதகத்தை யடைந்தார்கள்? ஒரு வரம்புக்குட்பட்ட ஓட்டளிக்கும் சுதந்திரம், காங்கிரஸுக்கு—அதாவது பார்லிமெண்டுக்கு—அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கவும் அப்படியே ஸ்தல ஸ்தாபன உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கவு மட்டுமே, ஓட்டர்களுக்கு உரிமை இருந்தது. நிருவாக அரசாங்கத்தின் தலைவரான பிரசிடெண்டும் மற்ற செனெட்டர்களும், மறைமுகமான தேர்தலிலேயே தெரிந்தெடுக்கப் பட்டார்கள். நாளா வட்டத்தில் தான், ஜனங்களின் வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டது; ஜனங்கள் நேரடியாகத் தேர்தலில் கலந்து கொண்டு உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமை பெற்ருர்கள். இதைத்தான் சர்வ ஜன வாக்குரிமை யென்று நாம் அழைக்கிருேம்.

இதனுல், அமெரிக்காவில் சர்வஜன வாக்குச் சுதந்திரம் ஏற்பட்டது படிப்படியாகத்தான் என்பது நன்கு தெரிகிறது. முதலில் ஆண்களுக்கு மட்டுந்தான் ஓட்டுரிமை இருந்த. இருபது வருஷங்களுக்கு முன்னுல் வரை, பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லாமலே இருந்தது. அப்பொழுது, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சி பலமாக நடைபெற்றது. ஸ்திரீகள் இந்தக் கிளர்ச்சியில் வெற்றி பெற மாட்டார்கள் என்று அப்பொழுது பலரும் நினைத்தார்கள். ஸ்திரீகளே இந்தக் கிளர்ச்சிக்கு விரோதமா யிருந்தார்கள். கடைசியில் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னர்தான், இவர்கள் வெற்றி பெற்ருர்கள். இதற்குக் காரணம் ஐரோப்பிய மகா யுத்தம். ஏனென்ருல், யுத்தத்தின் பொழுது, ஆண்களிற் பெரும்பாலோர் ராணுவத்திற்குச் சென்று யுத்த களத்திற்குப் போய் விட்டார்கள். இதனுல், ஆண்கள் என்னென்ன வேலைகளைப் பார்த்து வந்தார்களோ அவைகளை யெல்லாம் ஸ்திரீகள் பார்க்கும்படியாக நேரிட்டது. ஆண்கள் பார்க்கிற எல்லாக் காரியங்களையும் ஸ்திரீகளும் பார்க்க முடியு மென்ற நிலைமை ஏற்பட்டவுடன், ஆண்களுடைய உரிமைகளும் ஸ்திரீகளுக்கு இருக்க வேண்டுமென்ற அவசியமும் ஏற்பட்டது.

இவைகளினின்று நாம் தெரிந்து கொள்ளக் கூடியது என்ன வென்ருல், மேனுடுகளில் ஏற்பட்ட புரட்சிகளுக்கெல்லாம் ஜன நாயகமே லட்சியமா யிருந்த தென்பது நன்கு புலப்படுகிறது. அப்படி இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக இந்த மேனுடுகள் ஜனநாயகத்திற்காகச் சண்டை போட்ட போதிலும், இவற்றின் இறுதியான விளைவு என்ன வென்ருல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்ததுதான்.

பிரெஞ்சுப் புரட்சிகூட, ஜனநாயகத்தை லட்சியமாகக் கொண்டுதான் தொடங்கப்பட்டது. ஜனநாயக வாதிகளான ரூஸோ முதலிய அறிஞர்கள், எல்லா மனிதர்களும் பிறக்கும்போதே உரிமைகளோடுதான் பிறக்கிறார்களென்றும், இவற்றை அரசர்கள் பறித்துக் கொள்ள முடியாதென்றும் சொன்னார்கள். பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டதற்கு இந்த மாதிரியான எண்ணங்கள் பரவியதுதான் காரணம். புரட்சிக்குப் பிறகு, ஜனநாயக தத்துவத்தை நடை முறையில் கொணர்ந்த போது, பிரபுக்களும் அரச வம்சத்தினரும் பிரான்ஸில் தங்க முடியாமல் வெளி நாடுகளுக்கு ஓடிப் போய் விட்டார்கள். இந்தக் காலத்தில்தான், பிரெஞ்சு ஜனங்கள், பூரண ஜனநாயக தத்துவத்தைப் பரிசோதனை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஜனங்களுக்கு அறிவோ அதிகாரஞ் செலுத்தும் ஆற்றலோ இல்லையென்று சொல்ல யாருக்கும் துணிவு ஏற்படவில்லை. அப்படி யாராவது சொன்னால், அவர்கள் புரட்சிக்கு விரோதிகளென்று கருதப் பட்டு மரண தண்டனைக்குட் படுத்தப்பட்டார்கள். இதன் விளைவாக, பாமர ஜனங்களின் கொடுங் கோலாதிக்கம் ஏற்பட்டது. எங்கணும் கலகமும் குழப்பமும் தொடங்கின. சமுதாய வாழ்வே சீர் குலைந்து போய் விட்டது. இந்த மாதிரியான குழப்பமான நிலைமையிலே பிரபுக்கள், அரச வம்சத்தினர் முதலியோர் மட்டுமல்ல; புரட்சி வாதிகளாகிய டான்டன் முதலியோர்கூட உயிரிழந்தனர். இத்தகைய சம்பவங்களினால், பொது ஜனங்கள் சலித்துப் போய், ஜனநாயகத்தை எதிர்க்கு முகத்தான் நெப்போலியன் சக்ரவர்த்தியாக வருவதை ஆதரித்தார்கள். இதனால் ஜனநாயகத்திற்கு முட்டுக் கட்டை ஏற்பட்டது. சுயேச்சாதிகாரம், முட்டுக் கட்டை போடவில்லையென்பதும், ஜனநாயக வாதிகளிலேயே சில குறுகிய மனப் பான்மையுடையவர்களால் முட்டுக் கட்டை போடப் பட்டதென்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. ஆனால் இவர்களால் கூட, ஜனநாயகத்திற்கு அதிகமான தீங்கு ஏற்படவில்லை. பூரண ஜனநாயகம் வேண்டுமென்று சொன்னார்களே அவர்களால்தான் ஏற்பட்டது. எப்படியென்றால், பாமர ஜனங்கள், தங்களிடம் அதிகாரம் வந்தவுடன் தங்களுக்குத் தலைவர்கள் வேண்டியதில்லையென்று சொல்லி அவர்களையெல்லாம் கொலை செய்து விட்டார்கள். தலைவர்கள் போய் விடவே, ஜனங்களுக்குச் சரியான வழியில் போகத் தெரியவில்லை. இதை இவர்கள் நாளா வட்டத்தில் தெரிந்து கொண்டார்கள். இதனால்தான் ஜனநாயகத்தை மீண்டும் இவர்கள் ஆதரிக்க விரும்பவில்லை.

பிரான்சிலே புரட்சி ஏற்பட்ட பிறகு, ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளாகிய டென்மார்க் ஹாலந்து, ஸ்பெயின், போர்த்துகல் முதலிய நாடுகளிலும் ஜனநாயக இயக்கங்கள் ஏற்பட்டன. இங்ஙனம் தோன்றிய இயக்கங்கள் பல எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு சென்றன. இந்த ஜனநாயக வேகத்தின் முன்னர், அநேக சுயேச்சாதிகார நாடுகள் விழுந்து போயின. அப்படி விழுந்து போகாத நாடுகள் காலத்துக்கேற்றாற் போல் தங்கள் அரசாங்க முறைகளை

மாற்றிக் கொண்டன. உதாரணமாக இங்கிலாந்திலே கூட ஒரு புரட்சியேற்பட்டது. ஓர் அரசன் கொலை செய்யப் பட்டான். ஆனால் பத்து வருஷத்திற்குப் பிறகு முடியாட்சியே அங்கு ஸ்தாபிதமாயிற்று. பிரிட்டிஷ் உயர்தர வகுப்பார் சந்தர்ப்ப வாதிகள். ஜன நாயக எழுச்சியை தங்களால் தகையமுடியாதென்று கண்டு கொண்டு அதனோடு சமரசம் செய்து கொண்டு விட்டார்கள். நவீன ஜன நாயக தத்துவத்தின் ஆரம்பம் இங்கிலாந்தில் தான். அங்கு முடியாட்சி மீண்டும் ஸ்தாபித மானபிறகு உயர்தர வகுப்பினரே அரசாங்க நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வந்தனர். 1832ம் வருஷத்திற்குப் பிறகு தான் சாதாரண ஜனங்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குப் பிறகே ஸ்திரீகள் வாக்குரிமை பெற்றார்கள். குடியேற்ற நாடுகளை நடத்தும் விஷயத்தில்கூட கிரேட் பிரிட்டன், ஜனநாயக எழுச்சியானது முன்னேறி வர வர அதற்கு விட்டுக் கொடுத்து வரும் முறையில்தான் நடந்து வந்திருக்கிறது. உதாரணமாக அயர்லாந்தை யெடுத்துக் கொள்ளுங்கள். முதலில் பிரிட்டன் ராணுவ பலத்தைக் கொண்டு அதை அடக்கப் பார்த்தது. ஆனால் அங்கு ஜனநாயக எழுச்சியானது வளர்ச்சியடைந்து வருவதைக் கண்டு அடக்கு முறையை நிறுத்தி விட்டு ஐரிஷ்காரர்களின் கோரிக்கைக்கு இணங்கி அவர்களுக்கு சுதந்திரமும் அளித்தது. எகிப்திலும் இப்படித்தான். ஐரோப்பிய யுத்தத்தின் போது எகிப்தியர்கள் கிரேட் பிரிட்டனுக்குப் பெரிதும் துணை செய்தார்கள். தன்னுடைய சார்பில் நின்று யுத்தம் செய்யும்படி அவர்களை உற்சாகப் படுத்தும் பொருட்டு, யுத்தம் முடிந்த பிறகு அவர்களுக்குப் பல உரிமைகளை வழங்குவதாகவும் கடைசியில் சுதந்திரத்தைக் கொடுத்து விடுவதாகவும் வாக்களித்தது. ஆனால் யுத்தம் முடிந்த பிறகு, தன் வாக்குறுதியை நிறை வேற்றவில்லை. உடனே எகிப்தில் பெரிய கிளர்ச்சி யுண்டாயிற்று. அதன் பின்னரே கிரேட் பிரிட்டன் இணங்கிக் கொடுத்தது. எகிப்தும் சுதந்திரம் பெற்றது. இந்தியாவும் இப்பொழுது பொது ஜன ஓட்டுரிமை விஸ்தரிக்கப் பட வேண்டுமென்று கேட்கிறது. கிரேட் பிரிட்டனும் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்க நிர்வாகத்தில், தற்போது தொழில் கட்சியினர் பங்கெடுத்துக் கொண்டிருப்பதொன்றைக் கொண்டே உயர்தர வகுப்பினர் ஜனநாயகத்திற்கு மெது மெதுவாக விட்டுக் கொடுத்து வருகின்றனர் என்பது நன்கு புலப்படவில்லையா? பிரிட்டிஷ் உயர்தர வகுப்பினர் காலத்தை யொட்டி நடந்து கொள்ளும் ஸ்வபாவமுடையவர்களாதலினால்தான் இங்கிலாந்தில் விபரீதமான ஆபத்துக்கள் ஒன்றும் எற்படாமல் பழைய முறையில் ஒரே மாதிரியான அரசாங்கம் நடைபெற்று வருகிறது.

அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளுக்குப் பிறகு ஜனநாயக தத்துவங்கள் உலகத்தின் பல பாகங்களிலும் பரவியிருக்கின்றன. ஆனால் இந்தத் தத்துவத்தின் புதிய கோட்பாடுகளெல்லாம் ஜெர்மனியிலிருந்துதான் தோன்றியிருக்கின்றன. ஜெர்மனியில் தான் ஜனநாயக எண்ணங்கள்

செழித்து வளர்ந்திருக்கின்றன. அங்குத் தொழிலாளர் சங்கங்கள் அதிகம். இப்பொழுது கூட உலகத்திலே மிகப்பெரிய தொழிற்கட்சியானது ஜெர்மனியில் தானிருக்கிறது. ஆதியிலிருந்தே ஜெர்மனியில் இந்த ஜனநாயக தத்துவம் வேரூன்றி விட்டது. ஆனால் ஐரோப்பிய யுத்தம் வரையில் அது சரியான பலனைத்தான் கொடுக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன வென்றால் ஜனநாயக எழுச்சியை எதிர்த்து நிற்க ஜெர்மானிய அரசாங்கம் கையாண்ட முறைகள் வேறே; மற்ற அரசாங்கங்கள் கையாண்ட முறைகள் வேறே. இதனால் பயனும் வேறாகவே யிருந்தது. அப்படி யானால் ஜெர்மானிய அரசாங்கம் என்ன முறைகளைத்தான் கையாண்டது?

பிஸ்மார்க் காலத்திலிருந்தே ஜெர்மனியில் ஜனநாயக எழுச்சி தகைப் பட்டு வந்தது என்று சிலர் கூறுகிறார்கள். முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னால் இந்த பிஸ்மார்க் தான் உலக வல்லரசுகளின் அரசியல் கொள்கைகளை நிர்த்தாரணம் செய்து வந்தான். அவ்வளவு செல்வாக்கு இவனுக்கிருந்தது. இதனால் ஜெர்மனிக்கு, ஒரு பலமுள்ள நாடு என்ற பெயர் வந்தது. இவன், அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளு முன்னர், ஜெர்மனிக்குள் சுமார் இருபது நாடுகள் சுயேச்சையாக வாழ்ந்து வந்தன. ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லாமல் சண்டை போட்டுக் கொண்டன. இந்த நிலைமையில் நெப்போலியன் ஜெர்மனியை தன் ஆதிக்கத்திற்குட் படுத்திக் கொண்டான். ஜனங்கள் சகிக்க முடியாத துன்பத்தை அனுபவித்தார்கள். அப்பொழுது பிஸ்மார்க் தோன்றி எல்லா ஜெர்மானிய நாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரு ஜெர்மானிய ஏகாதிபத்தியமாக உருவகப்படுத்தினான். அதிலிருந்து தான் ஜெர்மனிக்கு சீரும் சிறப்பும் ஏற்பட்டன.

பத்து வருஷங்களுக்கு முன்னால் உலகத்திலேயே பலம் பொருந்திய நாடாக ஜெர்மனியும், பணக்கார நாடாக அமெரிக்காவும் முறையே இருந்தன. இந்த இரண்டு நாடுகளிலும் சமஷ்டி அரசாங்க முறை நடைபெறுவதால் சீனாவிலும் சமஷ்டி அரசாங்கத்தை யேற்படுத்தி அதனை ஒரு பலம் பொருந்திய நாடாகவும் பணக்கார நாடாகவும் ஏன் செய்யக் கூடாதென்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னர் ஜெர்மனி யென்பது ப்ரஷ்யா மாகாணம் மட்டுமாகத்தானிருந்தது என்பதையும், பிஸ்மார்க் தோன்றி அரசியல் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு ப்ரஷ்யா மாகாணத்தை ஓர் அஸ்திவாரமாக அமைத்து அதன் மீது ஜெர்மானிய ஏகாதிபத்தியம் என்னும் கட்டிடத்தை அமைத்தான் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஜெர்மானிய ஐக்கிய ராஜ்யத்தை பிஸ்மார்க் அமைத்துக் கொண்டிருந்த போது அவனை, பிரான்சும் ஆஸ்திரியாவும் எதிர்த்ததற்கு என்ன காரணம்? ஆஸ்திரியர்களும் ஜெர்மானியர்களும் ஒரே ட்யூடானிய ஜாதியைச் சேர்ந்தவர்கள். அப்படியிருந்தும் ஆஸ்திரியா ஏன் எதிர்த்தது? ஏனென்றால் அப்பொழுதைய ஆஸ்திரியச் சக்கிரவர்த்தி, ஐரோப்பிய அரசியல் அரங்கத்தில் தனக்கு

தலைமைப் பதவி கிடைக்க வேண்டுமென்று போராடிக் கொண்டிருந்தான். எனவே, ஜெர்மனி ஒன்று சேர்ந்து தன்னை விட ஒரு பலசாலியான நாடாகி விடுவதை அவன் பார்க்க விரும்பவில்லை. இதை உணர்ந்த திறமை சாலியான பிஸ்மார்க் 1866ம் வருஷம் ஆஸ்திரியா மீது படையெடுத்து அதனைத் தோற்கடித்தான். தனது வெற்றியின் பெருமிதத்தில் பிஸ்மார்க், ஆஸ்திரியாவை பூகோள படத்திலேயே இல்லாமற் செய்து விட்டிருக்க முடியும். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால், ஜெர்மானியர்களும் ஆஸ்திரியர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களென்றும் ஆஸ்திரியர்களால் ஜெர்மனிக்குத் தொந்திரவு உண்டாகாதென்றும் பிஸ்மார்க் தெரிந்து கொண்டிருந்தான். பிஸ்மார்க், தீர்க்க தரிசன முள்ள ஒரு ராஜதந்திரி. எதிர்காலத்தில் ஜெர்மனிக்கு ஏதேனும் தொந்திரவு உண்டாகுமானால், அது பிரிட்டனாலும் பிரான்சினாலும்தான் உண்டாகுமென்று நிர்ணயித்து வைத்திருந்தான். இந்த எண்ணத்துடன் தான், அவன் ஆஸ்திரியாவுக்குத் தாராளமான சமாதான நிபந்தனைகளை வழங்கினான். ஆஸ்திரியாவும் இந்த நிபந்தனைகளை நன்றியுடன் ஏற்றுக் கொண்டது. இந்த உடன் படிக்கை ஏற்பட்ட ஏழு வருஷங் கழித்து—1870ம் வருஷம்—ஜெர்மனி, பிரான்ஸின் மீது யுத்தம் தொடுத்து, மூன்றாவது நெப்போலியனைத் தோற்கடித்து பாரிஸையும் கைப்பற்றிக் கொண்டது. சமாதானம் ஏற்பட்டதும் பிரான்ஸைச் சேர்ந்திருந்த ஆல்சேஸ்-லோரெயின் பிரதேசம் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது. இந்த இரண்டு யுத்தங்களுக்குப் பிறகு, ஜெர்மனியில் ஒற்றுமை உணர்ச்சி வலுத்தது. தனித் தனியாகப் பிரிந்திருந்த எல்லா மாகாணங்களும் ஒன்று சேர்ந்தன. இங்ஙனம் ஐக்கியப்பட்ட பிறகு, ஐரோப்பிய யுத்தம் வரையில் உலகத்திலேயே மிகவும் வல்லமை பொருந்திய அரசாங்கமாக ஜெர்மனிதான் இருந்தது. இதற்கெல்லாம் காரணம் பிஸ்மார்க்தான். பிஸ்மார்க், தான் நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட இருபது வருஷங்களுக்குள், ஜெர்மனியை ஒரு வல்லரசாக மாற்றி விட்டான்.

பிஸ்மார்க் அதிகார பதவியிலிருந்த வரையில் ஜெர்மனியில் ஜனநாயக இயக்கம் வெற்றியடைய முடியவில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்தே, ஜனநாயக இயக்கம் ஐரோப்பாவில் அவ்வளவு உரம் பெறவில்லை. அதற்குப் பதிலாக அபேதவாதம் தலையெடுக்க ஆரம்பித்தது. இந்த இயக்கம் தோன்றியதும், ஜனங்கள் அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டமானது, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட போராட்டமாகும். எப்படி தொழிலாளர் சங்கங்கள்தான் ஜெர்மனியில் முதன் முதலாக உற்பத்தியாயினவோ அதைப் போல் அபேதவாதமும் அந்த நாட்டில்தான் தோன்றின. அபேதவாத தத்துவத்தைப் பற்றிச் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிற அறிஞர்கள் எல்லோரும் ஜெர்மானியர்களே. கார்ல் மார்க்ஸ் என்ற அபேதவாத அறிஞ

ரைப் பற்றி உங்க ளெல்லோருக்கும் தெரியும். அவர் ஒரு ஜெர்மானியர். ருஷ்யாவில் புரட்சியைக் கிளப்பியவர்கள் எல்லோரும் மார்க்ஸின் சிஷ்யர்கள்.

ஆரம்பத்தில் ஜன நாயகத்திற்கும் அபேதவாதத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தது. இரண்டும் ஒரு படித்தாகவே வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஐரோப்பாவில் ஜனநாயக எண்ணங்கள் பரவியதன் காரணமாக, ஜன நாயகப் புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அபேதவாத எண்ணங்கள் பரவிய காலத்தில் பொருளாதாரப் புரட்சிகள் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஜெர்மனியில் அபேதவாதம் பிறந்த காலமும் பிஸ்மார்க் அதிகாரம் வகித்து ஆட்சி நடத்திய காலமும் ஒன்றாக இருந்தது. பிஸ்மார்க்கைத்தவிர வேறு யாராவது இருந்தால், இந்த அபேதவாதத்தை அரசியல் அதிகாரம் கொண்டு அடக்கி யிருப்பார்கள். ஆனால் பிஸ்மார்க் அப்படிச் செய்யாமல் வேறு முறைகளைக் கையாண்டான். அபேதவாதிகள், எல்லா உற்பத்திச் சாதனங்களும் தேசியமயமாக வேண்டுமென்று கூறி வந்தார்கள். பிஸ்மார்க், ரெயில்வே முதலிய சாதனங்களை, அரசாங்கத்தின் சொத்தாக ஆக்கி விட்டான். உதாரணமாக, பிஸ்மார்க் ஆட்சிக்கு வருமுன்னர், பிரான்சிலும் ஜெர்மனியிலும் இருந்த எல்லா ரெயில்வேக்களும், பல தனிப்பட்ட மனிதர்களுக்குச் சொந்தமாயிருந்து வந்தன. இதனால் தேசத்தின் எல்லாச் சொத்துக்களும் பணக்காரர்களின் கையில் போய்ச் சேர்ந்தன. இந்த நிலைமையை பிஸ்மார்க் மாற்றி யமைத்தான்.

ரெயில்வே முதலியவைகளை அரசாங்கச் சொத்தாக்கினான். தொழிலாளர்களின் வேலை நேரத்தை நிர்ணயம் செய்தான். வயது வந்தவர்களுக்குப் பென்ஷன் கிடைக்குமாறு செய்தான். அரசாங்க நிருவாகத்தின் கீழ் வந்த ரெயில்வேக்கள், பாங்கிகள் முதலியவைகளிலிருந்து கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, தொழிலாளர்களுக்குப் பல நன்மைகள் செய்து கொடுத்தான். அதனால் தொழிலாளர்கள் திருப்தி யடைந்தார்கள். இதற்கு முன்னர், தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் வெளி நாடுகளுக்கு வேலை தேடச் சென்றார்கள் ஆனால் பிஸ்மார்க் தோன்றிய பிறகு, வெளி நாடுகளிலிருந்து பலர் ஜெர்மனிக்குத் தொழில் பார்க்க வந்தார்கள். அபேதவாதம் வருமென்று எதிர்பார்த்து, அதற்கு முன்னடியே பிஸ்மார்க் ஜாக்கிரதையாயிருந்து பல காரியங்களைச் செய்தான். அதனால் ஜனங்கள் புரட்சியில் மனஞ் செலுத்தவில்லை. ஜெர்மனி முதலிய நாடுகளில் பொருளாதாரப் புரட்சிகள் ஏற்படாததற்கு இதுதான் காரணம்.

மேனாடுகளில் ஜனநாயக முறையானது எப்படி நடை முறையில் கொணரப்பட்ட தென்பதைச் சிறிது கவனிப்போம். அமெரிக்கர்கள், சுதந்திர யுத்தத்திற்குப் பிறகு ஓட்டுரிமை பெற்றார்கள். பணம், அறிவு, சமுதாய அந்தஸ்து முதலிய விஷயங்களில் எவ்வித வேற்றுமையுமின்றி,

எல்லாரும் ஓட்டளிக்க உரிமை பெற்றிருக்கிறார்களென்று சொன்னால், ஜனநாயகம் அதனோடு முடிவு பெற்றுவிட்டதென்று பலரும் கருதினார்கள். ஆனால் ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு நடைபெற்றதென்ன? பல தடைகள் ஏற்பட்ட போதிலும் ஜனநாயகமானது முன்னேறிக் கொண்டுதான் செல்கிறது. சமீபத்தில் ஸ்விட்ஜர்லாந்து வாசிகள், ஓட்டளிக்கும் உரிமை தவிர, சட்டங்களைச் செய்யும் உரிமையும், ஒரு சட்டம் தீமை பயப்பதாயிருந்தால் அதனை ரத்து செய்யும் உரிமையும் பெற்றிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள சில மாகாணங்களில், உத்தியோகஸ்தர்களை உத்தியோகத்தினின்று விலக்கி விடும் அதிகாரத்தையும் ஜனங்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்த நான்கு உரிமைகளும் ஜனநாயக லட்சியத்தைப் பூர்த்தி செய்கின்றனவா? இல்லை. நாளா வட்டத்தில்தான் இது பூர்த்தியடைய முடியும். ஜனநாயகத்தின் உயர்ந்த அம்சங்கள் நிலவியுள்ள நாடுகளில், ஜனங்கள் அரசாங்க நிருவாகத்தில் என்ன விதமான பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன விதமான அதிகாரங்கள் இருக்கின்றன? சென்ற ஒரு நூற்றாண்டில் ஜனங்களுக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களெல்லாம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவும், பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் படவுமே யாகும். ஜனப் பிரதிநிதிகளாக யார் தெரிந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்கள் பார்லிமெண்டில் அமர்ந்து அரசாங்க காரியங்களைக் கவனிக்கிறார்கள். தேச நன்மைக்குகந்த எல்லாச் சட்டங்களும் பார்லிமெண்டினால் நிறைவேற்றப்பட வேண்டும். பார்லிமெண்டின் அங்கீகாரமின்றி இவற்றை அமுலுக்குக் கொண்டுவர முடியாது. இதற்குத்தான் 'பிரதிநிதித்துவ அரசாங்கம்' அல்லது 'பார்லிமெண்டரி அரசாங்கம்' என்று பெயர். ஆனால் இந்த மாதிரியான அரசாங்க முறையினால், ஜனநாயகத்துவம் பூரண வளர்ச்சி பெறுகிறதா? 'பிரதிநிதித்துவ அரசாங்க' முறை ஏற்பட்டால் தாங்கள் பூரண திருப்தியடைந்து விடுவதாக ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் நினைத்தார்கள். 1911ம் வருஷத்துப் புரட்சிக்குப் பிறகு, சீனர்களாகிய நாம் பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப் பெற வில்லையா? அப்படியானால், ஜனநாயக அர ாங்கத்தின் கீழ் என்னென்ன விதமான சாதகங்களை நாம் பெற்றிருக்கிறோம்? நம்முடைய ஜனப்பிரதிநிதிகளின் நிலைமை நமக்கு நன்கு தெரியும். அவர்களுக்கு ஏதேனும் கொஞ்சம் பணம் கிடைத்தால், அதற்காகத் தங்களை விற்று விடவும் அவர்கள் தயார். அப்படிப் பட்டவர்கள் எல்லா ஜனங்களாலும் தூற்றப்படுகிறார்கள். எந்த ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கீழும் சில தீமைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் சீனாவில் இந்தப் பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் கீழ் அதிகமான தீமைகள் உண்டாயிருக்கின்றன. மேனாட்டு ஜனநாயக முறையின் விளைவு இதுதான்.

மலரின் விருப்பம்

வித்துவான் எஸ். உமைதாணு பிள்ளை.

விடியும் வேளை வந்ததென்று
விரைந்து நந்த வனமடைந்து
மடிந்து கவிந்த கொம்பிலுள்ள
மலரைப் பறித்து நிற்கையிலே
வளைந்து நின்ற செடி யெல்லாம்
மாறி மாறி யெனை நோக்கி
உளைந்து நெஞ்சம் வருந்துவதேன்
ஊக்கத்துடன் வா வென்றழைத்தே (1)
இந்த உலகை யியக்குகின்ற
இறையின் முடிமீ திருப்பதனால்
வந்த பெருமை யடைந்திருந்து
வாழும் வாழ்வில் விருப்பமில்லை;
கந்தம் வீசி மாலைகளாய்
காதலர் கையி லினி தமர்ந்தே
இந்த உலகிற் காதலி கட்
கின்பந் தரவும் விருப்பமில்லை; (2)
மண்ணை யாண்ட மன்ன ரெல்லாம்
மாண்ட வந்நா ளவர்மீது
கண்ணி யத்தோ டமர்ந் திருந்து
காட்சி தர வும் விருப்பமில்லை;
விண்ணில் வாழும் மங்கையர்தம்
விளங்குங் கூந்த லணிசெய்து
வண்ணம் பெருத விண்ணுலகை
வளஞ்செய் வதிலும் விருப்பமில்லை; (3)
தந்தை நாட்டிற் கின்னுயிரும்
தயங்கா தீயும் வீரர்கள்
வந்து சென்று நடமாடும்
வழியிற் கிடந்து மிதிபடவே
என்றன் நண்ப! என்றும்நீ
என்னைப் பற்றி யிடுவதுபோல்
இந்த உலகில் எனக்கின்பம்
யாது மில்லை" என்றதடா. (4)

அரசனும் குருவும் அல்லது புத்தகப் படிப்பும் அநுபூதியும்

(ஒரு கதை)

—" ஆசிரமவாசி "

ஒரு அரசன் தனது நித்திய ராஜரீகக் கடமைகளை முடித்தபின் சயன அறையில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு முன்னே ஒரு பெரிய நிலைக்கண்ணாடி யிருந்தது. அதில் தனது பிரதிபிம்பத்தைக் கூர்ந்து நோக்கிய போது கரிய கூந்தலுக்கிடையே வெள்ளிய நரை மயிர்களிருப்பதையும், முகத்தில் சுருக்குகள் உண்டாவதையுங் கண்டான். இக்குறிப்புகளால் அந்திய காலம் நெருங்கி விட்டதை உணர்ந்து பின்வருமாறு சிந்தித்தான் :—நான் பல்லாண்டுகளாகத் திறமையுடன் செங்கோல் செலுத்தி யுள்ளேன். பெயர், புகழ், செல்வம் அனைத்தும் போதியவளவு கிடைத்திருக்கின்றன. இனிமேல் வேண்டுவது யாதொன்று மில்லை. ஆதலால் எனது இராச்சிய பாரத்தை எனது மூத்த குமாரனுக்குக் கொடுத்து விட்டுத் துறவறம் பூணுதலே நன்று. அரச குமாரன் ராஜரீகக் கடமைகளை நன்கு கற்கும் வரை நான் அடிக்கடி தபோவனங்களுக்குச் சென்று சில நேரமேனுந் தபசிகளோடு பழகி அவர்களைப் போல் வசிக்க முயல்வேன். நாளடைவில் என் இந்திரியங்கள் ஒருவாறு வசப்பட்டதும் நான் முழுநேரத்தையும் ஆத்மீக நெறியில் செலவிடுவேனாக'.

இந்த நோக்கத்துடன் நகர்ப் புறத்துள்ள தபோவன மொன்றில் ஒரு பன்னகசாலை கட்டுவித்து அறிவிற் சிறந்த தனது பிராமண குருவையும் அங்கு வரவழைத்தான். குருவும் மனமகிழ்ந்து அரசனை வாழ்த்தி, 'உனது தியானத்துக்குப் பயன்படும்படி ஸ்ரீமத் பாகவதத்தை வாசிக்கின்றேன். அதில் இருடிகளின் வாழ்வைப் பற்றியும், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் லீலைகளைப் பற்றியும் விரிவாகக் கூறியிருக்கின்றன' எனக் கூறினன். அன்று முதல் அரசனுங் குருவும் சாயந்திர வேளையில் பாகவத பாராயணஞ் செய்து தியானத்தில் அமர்ந்து இன்புற்றிருந்தனர்.

இங்ஙனம் பல நாட் கழிந்தது. யோகாப்பியாசம், தியானம், செபம் முதலியவற்றால் அரசனுக்குப் பொருள், இராச்சியம், சந்தானம் முதலியவற்றின் மேலுள்ள பற்று கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தொடங்கிற்று. நாளடைவில் வைராக்கியம் முற்றி குருவின் வாக்கிலிருந்து

வரும் ஒவ்வொரு சொல்லையுங் கூர்ந்து அவதானித்துக் கேட்டு வந்தான். இப்படிப் பல ஆண்டுகள் சென்றன. ஆனால் உள்ளத்தில் உண்மை ஒளியோ உண்டாக வில்லை. இவ்வளவு காலமும் சாஸ்திரங் கேட்டும், சிந்தித்தும் ஒரு வித தெளிவும் அடைய வில்லையே யென்று அரசன் மனந்தளர்ந்தான்.

ஒரு நாள் சாயந்திர வேளையில் அரசன் உலாவச் சென்றிருந்தான். அத்தருணம், தான் இவ்வளவு காலம் முயற்சித்தும்பகவத்தரிசனங்கிடைக்க வில்லையே யென்ற எண்ணம் அவன் மனதை வருத்தியது. அநுபூதி யடைவதற்கு இன்னும் எவ்வளவு காலஞ் செல்லு மென்பதைத் தன் குருவிடமிருந்து அறிந்து கொள்ள விரும்பினான் குருவோ ஒரு ஆற்றங் கரையில் சந்தியா வந்தனஞ் செய்து கொண்டிருந்தார். அரசன் வாடிய முகத்துடன் குருவை அணுகினான். செபம் முடிந்தவுடன் குரு, அரசனைப் பார்த்து 'தரும சீலனாகிய அரசனே! உனக்குறு குறையாது? உனது வதனம் வாட்டமடையக் காரண மேன்? நீயோ ராச்சிய பாரப் பொறுப்பை நீத்து போகிய நேரத்தை வேதம் ஓதுதலிலும், தியானத்திலும் பிரயோசனப் படுத்துகின்றாய். ஆகையால் நீ மிகவும் பாக்கியசாலி யல்லவா?' என்று கூறினார். அரசனுங் குருவை நமஸ்கரித்து 'ஐய! எனக்காக நீங்கள் படும் பிரயாசத்துக்காக நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். ஸ்ரீமத் பாகவத பாராயணத்தினால் என்மனம் ஒருவாறு சாந்தி யடைந்திருக்கின்றது. எனது குமாரனே ராஜரீகக் கடமைகளைச் சிறப்பாகப் பார்த்து வருகின்றான். ஆகையால் அதைப் பற்றியும் எனக்குச் சிறிதளவேனுங் கவலையில்லை. ஆனால் எனது மனமானது பழையபடி அமைதியற்ற நிலையில் தானிருக்கிறது. இதுவரை என் மனத்தின் மேல் படர்ந்துள்ள அஞ்ஞானமாகிய இருட் படலத்தை நீக்குவதற்கு ஒரு ஞானச் சுடர் தோன்றவில்லையே! பரீக்ஷித்து மன்னன் ஏழுநாள் பாகவதங் கேட்டு உண்மை ஒளி பெற்றானென்று நீங்கள் கூறினீர்களே! பாவியாகிய நானோ பல்லாண்டுகளாகப் பாகவதங்கேட்டும் ஒரு தினை யளவேனும் அநுபூதி யடைய வில்லையே! இதற்குக் காரணந் தானென்னனே? என் மீது கிருபை கூர்ந்து இந்த உத்தரத்துக்கு விடை யளித்தருளல் வேண்டும்' எனப் பரிந்து கேட்டான்.

இந்தப் பிராமணக் குருக்கள் அநுபூதியடைந்தவனல்லன். அப்படிப் பட்ட குரு எங்ஙனம் பிறருக்கு அநுபூதி யடைய வழிகாட்ட முடியும்? சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்து அதை வெகு சுலபமாகப் பிறருக்கு விளக்குதற்குப் பயின்றிருந்தான்; ஆனால் அதில் பரந்து கிடக்கும் உண்மையை அவனால் அநுபவத்தில் உணர முடியவில்லை. அரசனின் கேள்வியை மறக்கச் செய்வதற்கு வேறு விஷயங்களில் அரசன் மனதைச் செலுத்த முயன்றான். அரசன் மிகுந்த சிரத்தையுள்ளவனான படியால் அவனை அவ்வாறு ஏமாற்ற முடியவில்லை. உடனே பதில் கூற முடியாமல் பிராமணன் ஒரு மாதத்துக் குள் அரசனுக்குத் திருப்தியான பதிலளிப்பதாக வாக்குப் பண்ணினான். அரசனும் பொறுமையாக நாட்களை எண்ணிய வண்ணமா யிருந்

தான். ஒரு நாள் கழிவது ஒரு யுகம் கழிவது போன்றிருந்தது. குருவுந் தன்னாலியன்ற வரை யோசித்துப் பார்த்தான். அறிவு நூல்களை ஆராய்ந்து பார்த்தான். ஒரு வழியாலுந் தக்க பதில் கிடைக்கவில்லை தவணைக் காலம் முடிந்தது. அரசன் ஆவலோடு குருவை அணுகினான். அவன் சீடனைப் பார்த்து 'உனது கேள்விக்குப் பதிலளிக்க முடியாது. அதற்கு மறுமொழி உனது உள்ளத்திலிருந்தே காலமன்னியில் வரவேண்டும். அது அப்படி வருமட்டும் அமைதியாக ஆத்மீக வாழ்வைக் கைக்கொள்வது உசிதம்' எனக் கூறினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசனுக்குக் கோபம் மூண்டது. அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு, தனது கேள்விக்குப் பதில் கொடுத்தே தீர வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினான். பிராமணன், தன் சுற்றத்தார், சிநேகிதரைக் கலந்து யோசித்துவிட்டுப் பின் மூன்று தினத்தில் திருப்தியான பதில் அளிப்பதாக வாக்களித்தான். குறித்த நாட்களுக்குள் தக்க பதில் கிடைக்காவிடின் குருவைச் சிரச்சேதம் செய்வதாக அரசன் பயமுறுத்தினான்.

பிராமணன் வீடு சென்றான். உண்ணவோ, உறங்கவோ முடியவில்லை. தனது தலைவிதியை நினைத்து மனம் வருந்தினான். ஒவ்வொரு நிமிடமும் தனக்குறுங் கதி மனதில் தோன்றியது. உற்றார், உறவினருடன் ஒரு வார்த்தையும் பேசாமல் தன் வீட்டுக்குள் பூட்டிக் கொண்டிருந்தான். உறவினர் பல முறை அவனைப் பரிந்து கேட்டபோது தனது சங்கடமான நிலைமையை அவர்களுக்குத் தெரிவித்தான். ஆனால் உதவி செய்யவோ, அல்லது ஆறுதலளிக்கவோ அவர்களால் முடியவில்லை. இப்படியாக இரண்டு தினங்கள் கழிந்தன. எவ்வளவுக்குச் சிந்தித்தானோ அவ்வளவுக்கு மனங் கலங்கியது. இனிமேல் யோசிப்பதில் பயனில்லையென்பதை உணர்ந்தான். ஆண்டவனின் கிருபைதான் தனக்குக் கதியென நினைத்து மூன்றும் நாள் தியானத்தில் அமர்ந்தான்.

இந்தப் பிராமணனுக்கு ஒரு விதவை மகள் இருந்தாள். அவள் அழகும், ஒழுக்கமும் வாய்க்கப் பெற்றவள். கல்வி, கேள்விகளால் சிறந்தவள். சாஸ்திரத்தின் உட்பொருளை நுணுகி ஆராய்ந்து ஆத்மீக அநுபவம் பெற்றவள். ஆனால் பெற்றோரும் உறவினரும் அவளை ஒரு பயித்தியக்காரி என்றே கருதினர். ஆகையால் அவள் பலமுறை தந்தையின் கஷ்டத்தை விசாரித்த போதும் ஒருவரும் அதைப் பற்றி அவளுக்குக் கூறவில்லை. தந்தையின் துயரத்தைப் பார்த்துச் சகிக்கமாட்டாதவளாய் அவன் பாதங்களில் வீழ்ந்து "தந்தையே! நீங்கள் ஏன் ஏக்கமடைய வேண்டும்! உங்கள் துயரத்துக்குக் காரணந்தானென்னே? உங்கள் மனதிலிருப்பதை எனக்குக் கூறுவிடின் யான் இந்த ஆற்றிற் குதித்து உயிர் மாய்த்து விடுவேன்" என்று உறுதியாகக் கூறினாள். தன் அருமை மகளின் பிரிவைப் பார்த்து மனமிரங்கி, தனக்கும் அரசனுக்குமிடையே நடந்த சமாசாரத்தை விரிவாக எடுத்துக் கூறினான். இதைக் கேட்டதும் மகள் புன்னகை பூத்த முகத்தினளாய்,

"நீங்கள் இதை முதல் நாளே எனக்குத் தெரிவித்திருந்தால் உங்கள் மனவேதனையை அப்போதே அகற்றியிருப்பேனே. யாதுக்கும் அஞ்சவேண்டாம். என்னை அரசனிடத்துக்கு அழைத்துச் செல். யான் அவனுக்குத் தகுதியான பதிலளித்து உங்களிருவருக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்துகின்றேன்" என்றாள். அவள் வார்த்தைகள் தந்தைக்கு உறுதி பயப்பனவாயிருந்தன. பிராமணன் இந்தச் சமாசாரத்தை அரசனுக்குத் தெரிவித்தான். அரசனும் அதற்கிசைந்து அப்பெண்மணியை மாளிகைக்கு வரும்படி கட்டளையிட்டான்.

பிராமணன் மகளை அரசாங்க சபைக்குக் கூட்டிச் சென்றான். அவளுடைய கம்பீரத்தோற்றமானது அரசனின் மனதைக் கவர்ச்சி செய்தது. அவள் அரசனைப் பார்த்து "அரசனே! எனது கட்டளைப்படி நடக்கச் சம்மதங் கொடுத்தால்தான் உன்னுடைய சந்தேகத்தை என்னால் நீக்க முடியும்" எனக் கூறினள். அரசன் அந்த நிபந்தனைக்குச் சம்மதித்தான். இரண்டு கயிற்றுத் துண்டுகளும் ஒரு வாளும் எடுத்துக் கொண்டு அரசனையுந் தந்தையையும் பன்னக சாலைக்குப் போகும்படி கட்டளையிட்டாள். அவளும் அவர்களைப் பின் தொடர்ந்தாள். தபோவனத்தை அடைந்ததும் உடனே அரசனைச் சற்றும் மரியாதையின்றி ஒரு கயிற்றினால் மரத்தில் சேர்த்து இறுகக் கட்டினாள். பிரஜைகளின் மரியாதையைப் பெறும் அரசனுக்கு இந்த அவமானத்தைப் பொறுக்க முடியவில்லை. ஆயினும் இந்தச் செயலில் ஏதாவது மறை பொருளிருக்க வேண்டுமென்று நினைத்து ஆறுதலடைந்தான். பிராமண குருவோ தன் தலையே போய் விடுமென்று அஞ்சினான். அவனையும் மற்றொரு கயிற்றினால் இன்னுமொரு மரத்தில் சேர்த்துக் கட்டினாள். பிராமணனுக்குத் தன் மகளின் செயலெல்லாம் விபரீதமாயிருந்தது. கட்டுண்ட அரசனுங் குருவும் ஒருவரை யொருவர் நோக்கிய வண்ணமாய் இனிமேல் நடக்கப் போவதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பெண்மணி உருவிய வாளைக் கையிலேந்திய வண்ணமாய் அரசனை அணுகி, "அரசனே! இந்த வாளால் உனது கட்டுக்களை வெட்டி விடுதலையடைவாயாக" எனக் கூறினாள். "உத்தமப் பெண்மணி! கட்டுண்ட நான் எனது கட்டுக்களை வெட்டி விடுதலையடைவதெங்ஙனம்," என வினவினான். அவள் புன்சிரிப்புடன் "நல்லது" என்று சொல்லி விட்டுத் தன் தந்தையைப் பார்த்து, "அன்பார்ந்த தந்தையே! இந்த வாளினால் உனது சிடனின் பந்தத்தை வெட்டி விடுதலையளிப்பாயாக!" எனக் கூறினள். பிராமணனுக்குத் தன் மகளின் செயல் இப்பொழுது ஒருவாறு தெளிவாயிற்று. "பந்தப்பட்டிருக்கும் நான் எனது பந்தங்களை நீக்கி விடுதலையடைய முடியாமலிருக்கும் பொழுது மற்றொருவரை விடுதலை செய்வது எங்ஙனம்" எனக் கூறினான். பின்னர் அப் பெண்மணி இருவருடைய விலங்குகளையும் அவிழ்த்து விட்டுப் பின்வரும் அமுத மொழிகளைக் கூறினள் :—"மதிப்புக்குரிய அரசனே! அருமைத்

தந்தையே! நான் இங்ஙனம் அவமரியாதை செய்ததற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் இப்படிச் செய்யாவிடின் உங்களுக்கு எனது மறுமொழி திருப்தி யளித்திராது. பரீக்ஷித்து அரசன் ஒரு வாரம் வரை பாகவதங் கேட்டு அநுபூதியடைந்தது உண்மைதான். ஆனால் அவருக்குப் பாகவதம் போதித்தவர் அநுபூதிச் செல்வரும், ஜீவன் முக்தருமாய் விளங்கிய சுகதேவர் ஆவர். உலகப் பந்தங்களில் கட்டுப்பட்டிருக்கும் எனது தந்தை, தான் அடையாத அநுபூதியை உனக்கு அளித்தல் எங்ஙனம்? சாஸ்திர அறிவு மட்டும் ஒருவனுக்கு உண்மையை உணர்த்த உதவி புரியாது. உண்மையை யுணர்ந்த சித்த புருஷன் தான் மற்றொருவனுக்கு அதை உணர வழி காட்ட முடியும். உள்ளத்தில் உண்மை பொளி யுண்டாயின் மனதிலுள்ள சந்தேக விபரீதங்களெல்லாம் நீங்கும். இதைக் குறித்தே,

'உள்ளத்தில் உண்மைபொளி
"உண்டாயின் வாக்கினிலே"
ஒளி யுண்டாகும்

வெள்ளத்தின் பெருக்கைப்
போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்

பள்ளத்தில் வீழ்ந்திருக்குங்
குருட ரெல்லாம்
விழிபெற்றுப் பதவிசேர்வார்'....

என்று ஆன்றோர் ஆத்ம ஞானத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றார். அநுபூதி பெற்ற சித்த புருஷரைக் குருவாகப் பெற்றவர் மிகவும் பாக்கிய சாலியாவர். சதா கடவுள் தியானத்திலமர்ந்திருக்குந் துறவிகளுக்கே அத்தகைய குருவின் கிருபை கிடைக்கும். இப்பருவத்தில் பரீக்ஷித்து அரசன் ஒரு இறந்த சர்ப்பத்தை நிட்டையிலமர்ந்திருந்த ஒரு முனிவரின் கழுத்தில் பூமாலை போன்று சூட்டினான். இதைக்கண்ட முனிவரின் புதல்வன் மனம் சகிக்காதவனாய் அரசன் ஏழு தினங்களில் சர்ப்பந்தீண்டி இறப்பான் என்று சபித்தான். இந்தச் சாபத்தை ஏற்ற அரசன் தனக்குறு கதியை நினைந்து, பாகவத பாராயணத்தின் மூலம் ஆண்டவனின் கல்யாண குணங்களைக் கேட்டு, அவற்றில் சதா தியானத்தில் அமர்ந்திருந்தான். ஆதலினாலே அவனுக்கு அநுபூதி கிடைத்தது. . அரசனே! உனக்குக் கடவுள் வாஞ்சையிருந்த போதிலும் நீ அரசியல் சம்பந்தமாக, அழுக்காறு, அவா, வெகுளி பொருந்தியவனாயிருக்கிறாய். ஆகையால் உனக்குத் திவ்விய தர்சனம் கிடைப்பதெங்ஙனம்? ஆனால் இதை நினைந்து நீ மனந் தளரல் வேண்டாம். தானம், தவம், சாஸ்திரம், தியானம், விவேகம், வைராக்கியம் முதலியவற்றால் மனதைப் பண்படுத்தினால் உள்ளத்தில் உண்மையொளி உதயமாகும்" எனக் கூறினாள்.

இம்மொழிகளைக் கேட்ட அரசன் அம்மங்கையை வணங்கினான். அவளை வாயார வாழ்த்தினான். குருவிடம் தான் இழைத்த துன்பங்களுக்காக மன்னிப்புக் கேட்டான். பின்னர் தன் தேசத்தை முற்றுந் துறந்து கானகஞ் சென்றான்.

•பிராமணன் தன் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென நினைத்து மகளைப் போற்றினான். அவளின் வெற்றி அவனுக்குப் பெருமையை யளித்தது. அரசன் அவனுக்குப் பொன் உதவிய போது அவற்றை யெல்லாம் வெறுத்து, தனது புத்திரி யின் உத்தரவோடு துறவு வாழ்க்கை யைக் கடைப் பிடித்தான்.

இச்சிறு கதையானது புத்தகப் படிப்பின் குறைவையும் அநுபூதியின் நிறைவையுந் தெள்ளிதில் விளக்கு கின்றது. சாஸ்திர• ஆராய்ச்சி புத்தியை ஸ்திரப்படுத்தி, வாழ்வின் இலட்சியத்தைத் தெளிவாகக் காட்டு கின்றது. ஆனால் உண்மையான அறிவு (பராவித்தியா) அநுபூதி பெற்றவர்களுக்கே உரியது. அதே மனதுக்குச் சாந்தத்தை அளிக்க வல்லது.

மாசற்ற மனதையுடைய ஜீவன் முக்தனே பிறருக்கு விமோசன மளிக்க வல்லவன்; அத்தகையவனே உண்மையை உணர்த்த வல்ல சற்குரு ஆவன் என்பதும் இக்கதையிலிருந்து தெளிவாகின்றது. விவேக வைராக் கிய மின்றி தியானம், தபம், யோகம் முதலியன பயிலுதல் நங்கூரமிட்ட கப்பலைத் தண்டினால் வலிப்பது போன்று பிரயோசன மற்றவை என் பதும் இக்கதையின் போதனையாகும்•

இன்றைய சமயவாதி, தனது ஆத்மாவாகிய கப்பலை, வைதிகம் என்னும் துறை முகத்தில் கட்டிப்போட்டு வெயிலிலே உலர்ந்து போகுமாறு விட்டு வைக்க விரும்புகிறான்; பழைய கொள்கைகளாகிற பாய் மரத்தின் மீது, பழைய அபிப்பிராயங்களாகிற கப்பற் பாய் அடிபட்டு அலறும் சப்தத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதிலே திருப்தி யடைகிறான். கப்பலின் இணைப்புகளும் பக்கங்களும் சந்துவிட்டு வெயிலிலே காய்ந்து போவதைக் காண்பதிலே சந் தோஷங் கொள்கிறான். 'நான் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களைக் கலைக்காதீர் கள்; என் மனதை நிலை குலைத்து விடாதீர்கள்; ஏற்கனவே நான் ஒருவித அபிப் பிராயங் கொண்டு விட்டேன்; எனக்கு நாஸ்திக வாதம் வேண்டாம். நான் பின் னோக்கிப் போவேனே தவிர, முன்னோக்கிச் செல்ல மாட்டேன், என்று திருப் பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில்தான் அவன் இன்பம் நுகர்கிறான்.

— இங்கர்ஸால்

மௌலானா அபுல் கலாம் அஸாத்

ஜனனம் 1888

"ஒரு காங்கிரஸ்வாதி"

மௌலானா அபுல் கலாம் அஸாத் ஒரு சிறந்த அரசியல்வாதி என்பதற்காக மட்டும் போற்றப் படுகிறாரில்லை. இஸ்லாமியக் கலை உலகத்தில் இவருடைய திறமையும், அதனால் உண்டான புகழும் மங்கா ஒளியுடன் பிரகாசிக்கின்றது. மௌலானா சாஹிப் அவர்கள் 1888ம் வருஷம் அரேபியாவிலுள்ள மெக்கா நகரத்தில் பிறந்தார். குழந்தைப் பருவத்தை மேற்படி மெக்காவிலேயே கழித்தார். பின்னர், கல்விப் பயிற்சிக்கு, எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற 'அல்-அஷார்' சர்வ கலாசாலைக்குச் சென்றார். இவர் மகா மேதாவியாக விளங்கியபடியால் 14, 15 வயதில், பாரசீகம், அரபி முதலிய பாஷைகளில் நிரம்பிய புலமை பெற்றதோடு, இஸ்லாமிய தர்ம சாஸ்திரத்திலும் நல்ல ஞானம் பெற்றார். சாதாரணமாக, 25 அல்லது 30 வயது வரையில் கற்க வேண்டிய பாடங்களை இவர் 14, 15 வயதுக்குள் கற்றுத் தேறி விட்டார். இவருடைய இவ்வளவு புலமைக்கும் காரணம் இவருடைய பிதாதான். அவர் பெயர் கைருல்-உத்-தீன் சாஹிப் அவர்கள். அவர் 1857ம் வருஷத்தில் நடைபெற்ற 'சிப்பாய் கலகம்' என்று சொல்லப்படுகிற இந்திய தேசிய சுதந்திர யுத்தத்தில் கலந்து கொண்டவர். அதற்குப் பிறகு இந்தியாவிலிருக்க மனமில்லாதவராகி வெளி நாடுகளுக்குச் சென்று விட்டார். ஈராக், துருக்கி, எகிப்து முதலிய பல நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுக் கடைசியில் பம்பாய் வந்து சேர்ந்தார். பம்பாயில் சிறிது காலம் தங்கி விட்டு கல்கத்தாவுக்கு வந்து அங்கேயே நிரந்தர வாசம் செய்தார். அவருடைய காலத்தில், முஸ்லீம் பண்டிதர்களிடையில் அவருக்கு நிரம்பச் செல்வாக்கு இருந்தது. அவர், இஸ்லாம் மதத்தைப் பற்றி அரபி பாஷையில் பல நூல்கள் எழுதி யிருக்கிறார். அவர் 1908ம் வருஷம் தேக வியோகமடைந்தார்.

மௌலானா சாஹிபுவின் முன்னோர்கள் மொகலாய சக்ரவர்த்திகள் பலரின் அன்பையும் விசுவாசத்தையும் பெற்றிருந்தவர்கள். அக்பர் சக்ர

வர்த்தி காலத்தில் அரச குடும்பத்தைச் சார்ந்த பலர்க்கு, இவருடைய முன்னோர்கள் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். இதனால் தான், நமது மௌலானா சாஹிபுவுக்குக் கல்வியில் அதிக உற்சாகமும், பாலியத்திலேயே ஒருவித தெளிவும் இருந்தன. எல்லாம் பரம்பரை வாசனை!

மௌலானா சாஹிப், பாலியத்தில் கெய்ரோ சர்வகலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு, இஸ்லாமிய நாடுகள் பலவற்றிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்தார். ஆங்காங்குள்ள பிரசித்த உலமாக்களுடன் கலந்து பழகினார், இதனால் இவர் மனம் மாறுதலடைந்தது. நவீன முறையில் இஸ்லாமியக் கருத்துக்களை வெளியிட வேண்டுமென்றும், அதற்கான பல நூல்களைப் பிரசுரிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார். மேனாடுகள், எப்படி விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறி யிருக்கின்றன வென்பதையும் தெரிந்து கொண்டார். இதனால் இவருடைய மனோ வெழுச்சியிலேயே ஒரு விகாசம் ஏற்பட்டது. இந்தக் காலத்தில் இவருக்கு, ஆங்கிலத்தைப் படித்துத் தேர்ச்சி பெற வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. அப்படியே படித்து அதில் புலமையும் அடைந்தார்.

இவர், தமது 25 வயதிலிருந்து பொது ஜன வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கினார். அந்த வயதில் இவர் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கினார். இது தவிர, வேறுசில உருது பத்திரிகைகளுக்கு விஷய தானஞ் செய்துவந்தார்.

1909ம் வருஷத்திலிருந்து மௌலானா சாஹிபுவின் அரசியல் கருத்துகள் பெரிய மாறுதலை யடைந்தன. அது வரையில் முஸல்மான்கள், இந்திய தேசிய அரசியலிலே அதிகமாகக் கலந்து கொள்ளவில்லை. காங்கிரசிலும் அதிகமான பேர் வந்து சேரவில்லை. இதனால் மௌலானா அஸாத் கல்கத்தாவில் 'அல்ஹலால்' என்ற ஒரு வாரப்பத்திரிகையை ஆரம்பித்து, முஸ்லீம்கள் தேசிய இயக்கத்தினின்று தனித்திருக்க முடியாதென்றும் அவர்களும் இந்தியாவின் எதிர்கால வாழ்க்கையில் கலந்துகொள்ளத் தங்களைத் தகுதிப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் பிரசாரம் செய்து வந்தார். இதனால் முஸல்மான்களிடையே ஒருவித தேசிய விழிப்பு ஏற்பட்டது. இது தவிர, மௌலானாவின் உருது நடையும், விஷயங்களைத் தர்க்கரீதியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலும் அநேகருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. உலகத்தின் பல பாகங்களில் இருந்தவர்களும் இவருடைய பத்திரிகையை வாங்கிப் படிக்கத் தொடங்கினார்கள். இந்திய முஸ்லீம்களிடையிலேயே அலிகார் கட்சி யென்றும் முஸ்லீம் லீக் கட்சி யென்றும் இரண்டு கட்சிகள் இருந்தன. இந்த இரண்டு கட்சியினரும் இவருடைய கொள்கைகளுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தனர். ஆயினும் இவர் அவற்றை யெல்லாம் பொருட் படுத்தாமல் இந்திய தேசிய சுதந்திரத்தையே லட்சியமாகக் கொண்டு எழுதி வந்தார்.

1914ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கியது. இவர், தமது பத்

திரிகையில் தேசியக் கட்சியைத் தாராளமாக எடுத்து எழுதி வந்தார். இதனால் அரசாங்கத்தார், இவருடைய பத்திரிகையை நிறுத்தி விட்டனர். முதலில் ஜாமீன் கேட்டனர். அது கட்டப்பட்டது. பல காரணங்கள் கூறி அதனைப் பறிமுதல் செய்ததோடு, மீண்டும் பதினாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டனர். இதனால் பத்திரிகையே நின்று விட்டது.

ஆனால் மௌலானா சாஹிப் சும்மாயிருக்க வில்லை. அவரால் சும்மாயிருக்கவும் முடியாது. எனவே 'அல்பலாக்' என்ற வேறொரு பத்திரிகையை ஆரம்பித்தார். அரசாங்கத்தார் பார்த்தார்கள். பத்திரிகைச் சட்டத்தினால் இவரை அடக்க முடியாதென்று தெரிந்து கொண்டு, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவரைக் கைது செய்தனர். நான்கு வருஷம் சிறைவாசம் செய்தார்.

1919ம் வருஷம் பஞ்சாபில் ஜாலியன்வாலாபாக் படுகொலை நடைபெற்றதன் காரணமாக காந்தியடிகள் சத்தியாக்கிரகம் தொடங்கினாரல்லவா? இதற்கு முதற்படியாக 1920ம் வருஷம் மார்ச் மாதம் 22ந் தேதி டெல்லியில் தலைவர்கள் கலந்தாலோசித்தனர். இந்தத் தலைவர்கள் யார்? மகாத்மா காந்தி, லாலா லஜபதிராய், ஹகீம் அஜ்மல் கான், மௌலானா அஜாத் ஆகிய நால்வருமே. இதனால், தெரிய வருவதென்ன வென்றால் ஒத்துழையாமை இயக்கத்தின் ஆதிகர்த்தர்களில் இவரும் ஒருவர் என்பது நன்கு தெரிகிறது. அது மட்டுமல்ல. ஒத்துழையாமை சம்பந்தமாகக் காரியங்களைச் செய்திருக்கிறார்.

1921ம் வருஷம் இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் இளவரசர் விஜயஞ் செய்தார். இவருடைய விஜயத்தை பகிஷ்கரிக்க காங்கிரஸ் பல முயற்சிகளைச் செய்தது. மௌலானாவும் இதில் ஈடுபட்டார். இதன்பயனாக இவரும் தேசபந்து தாஸரும் 1921ம் வருஷம் டிஸம்பர்மாதம் 10 தேதி டெல்லியில் கைதியாயினர். இவருக்கு ஒரு வருஷக் கடுங் காவல் தண்டனை விதிக்கப் பெற்றது. 1923ம் வருஷம் இவர் விடுதலை யடைந்த காலத்தில் காங்கிரஸானது மாறுதல் வேண்டாக் கட்சியென்றும் மாறுதல் வேண்டுங் கட்சியென்றும் இரண்டு பிரிவாகப் பிரிந்திருந்தது. இது சம்பந்தமாக 1923ம் வருஷம் செப்டம்பர்மாதம் டெல்லியில் விசேஷ காங்கிரஸ் ஒன்று கூடி, மாறுதல் வேண்டாக் கட்சியின் கொள்கையை வலியுறுத்தியது. அந்த விசேஷ காங்கிரஸுக்குக் காந்தியடிகளே தலைமை வகித்தார்.

1924ம் வருஷம் மௌலானா அஸாத், தமது பத்திரிகாலயம், பிரசுராலயம் முதலியவைகளை யெல்லாம் டெல்லிக்கு மாற்றிக் கொண்டார். ஆனால் அங்கு நீடித்த காலம் நிற்கவில்லை. மீண்டும் கல்கத்தாவுக்கே மாற்றிக் கொண்டார். இந்தக் காலத்தில் இவர், ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையை உண்டு பண்ண தேசமெங்கணும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்தார்.

1930—31ம் வருஷத்துச் சட்ட மறுப்பு இயக்கத்திலும் இவர் தீவிர

'உனக்கும் அச்சமா?

—வ. பார்த்தசாரதி

மகனே! 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்று இந்தக்காலத்தில் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறாயா? ஐயோ! என்ன அவக்கேடு! இந்த வாசகமொன்றே நமது அடிமைப் புத்தியை நன்கு எடுத்துக் காட்டுகிறதல்லவா? 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று சொல்லிப் போனார்கள் நமது முன்னோர்கள். ஆனால் நாமோ, இப்பொழுது எங்காவது, ஓர் ஆபீசில் 15 அல்லது 20 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாக அமர்ந்து இட்ட வேலையைச் செய்து விட்டு, கண்டவருக்கும் பல்லிளித்துக் கொண்டு காலங் கழிப்பதில் திருப்தி யடைந்து விடுகிறோம். இது தான் வாழ்க்கையென்று எண்ணுகிறோம். என்ன கேவலம்! ஆண் மகனுக்கு அழகு, உத்தியோகமல்ல; அஞ்சாமை.

எந்த மனிதனிடத்தில் அஞ்சாமை குடி கொண்டிருக்கிறதோ, எவன் எல்லாக் காரியங்களையும் தைரியமாக இருந்து நடத்துகிறானோ, அவனைத் தான் எல்லோரும் கொண்டாடுவார்கள். எவனிடத்தில் அச்சம் குடி கொண்டிருக்கிறதோ அவன் பார்க்கிற பார்வையிலேயே அது நன்றாய்த் தெரிந்து விடும். அப்படி அசடு தட்டிய பார்வையோடு நீ இருக்க விரும்பு

மாகக் கலந்து கொண்டார். இதற்காகக் கைதும் ஆனார்.

1940ம் வருஷம் பிப்ரவரி மாதம் ராம்காரில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் பெரும் பான்மையான வாக்குகளால் தெரிந்தெடுக்கப் பட்டார். அதுகாலை இவர் நிகழ்த்திய தலைமையுரை, காந்தியத்திற்குப் பெரிதும் அரண் செய்வதாயிருந்தது.

மௌலானா சாஹிப், இஸ்லாமிய தர்ம சாஸ்திரத்தில் பெரிய நிபுணர். கடினமான பிரச்னையை எல்லாருக்கும் விளங்குமாறு சொல்லும் ஆற்றலுடையவர். வைதிக முஸ்லீம்களிடையிலும் இவருக்கு ஏராளமான செல்வாக்கு உண்டு. இவர் திருக்குர்ஆனுக்கு அழகியதொரு வியாக்கியானஞ் செய்திருக்கிறார். இது பலராலும் போற்றப் பட்டு வருகிறது. அறிஞர் உலகத்திலே மௌலானாவுக்கு நிரந்தரமான ஸ்தானம் ஒன்று எப்பொழுதும் உண்டு.

கிறாயா? உன்னைப்பார்த்த வுடன், எல்லாரும் பரிகாசம் செய்ய ஆரம்பித்துவிட மாட்டார்களா?

ஒருவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ விதமான நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அவைகளை யெல்லாம் சமாளிக்க வேண்டுமானால், அவன் தைரிய முள்ளவனாக வல்லவோ இருக்க வேண்டும்? நீ எத்தனையோ தவறுகள் செய்யலாம். அந்தத் தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்வது எப்படி? உன்னிடத்திலுள்ள மனோதிட மல்லவா உன்னைத் தப்பிக்கும் படி செய்யும். அதனை நீ இழந்து விடலாமா? இந்த மனோ தைரிய மிருந்தால், எவனும் தன்கடமையை வெற்றிகர மாகச் செய்து கொண்டு போவான். அப்படிப்பட்ட மனோ தைரியத்தை நீ இழந்துவிட லாகுமா?

தைரியத்திற்கு எதிராக வுள்ளது எது? கோழைத்தனம். அதை யாராவது விரும்புவார்களா? உலகமே அதைக் கண்டிக்கிற தில்லையா? கோழைத்தனம் எப்பொழுது ஒரு மனிதனிடத்திலே பிரவேசித்து விட்டதோ அப்பொழுதே அவனிடத்திலிருந்த மனிதத் தன்மை போய் விட்டதல்லவா? கோழைத்தனமும் மனிதத் தன்மையும் ஒரே இடத்தில் வசிக்க முடியுமா? எவனொருவன், யுத்தகளத்தில் சத்துருவுக்குப் பயந்து ஓடுகிறானோ அவன் மட்டும் கோழை என்று கருதாதே. எவனொருவன், தன் அபிப்பிராயங்களைத் தாராளமாக எடுத்துச் சொல்லப் பயப்படுகிறானோ, அல்லது பிறருடைய பயமுறுத்தலுக்காகவோ, அல்லது பிறருடைய தயை தாட்சண்யத்திற்காகவோ தன் அபிப்பிராயங்களை அடிக்கடி மாற்றிக் கொள்கிறானோ அவனும் ஒரு கோழை. அவன், தான் கொண்ட அபிப்பிராயத்தை ஆதரித்துப் பேச தைரியமில்லை பார்த்தாயா? அப்படிப் பட்டவன், எந்தச் சமயத்திலும் பிறருக்கு அடிமையாகி விடத் தயாரா யிருக்கிறான். இதனால் தான், அரசியல் அடிமைத் தனத்திலே வாழ்கிறவர்கள், அநேகமாகக் கோழைகளா யிருப்பதைச் சர்வ சாதாரணமாக நீ பார்க்கலாம். அப்படிப்பட்டவர்கள் அடிமைத் தனத்திலே ஊறி, ஊறி, தாங்கள், விடுதலை யடைய வேண்டுமென்ற உணர்ச்சி கூட இல்லாதவர்களாகி விடுகிறார்கள். ஹோமர் என்ற கிரேக்க கவிஞன் கூறுகிறான்:—

'ஒரு மனிதன் எந்த சுதினத்தில் அடிமையாகிறானோ அந்த சுதினத்திலிருந்தே, அவனுடைய நல்லொழுக்கத்தில் பாதிபோய் விடுகிறது. மற்றப்பாதி நல்லொழுக்கமும், அந்த அடிமையைக் கட்டுப் படுத்தி வைக்காமல் அவன் இஷ்டப்படி திரிய விட்டு விட்டால் போய் விடுகிறது?'

என்ன அழகான வாக்கியங்கள் பார்த்தாயா?

சிலர் நினைக்கிறார்கள். பண மிருந்தால்தான் ஒருவன் தைரியமா யிருக்க முடியும்; பணமில்லாதவன் கோழையாகத்தான் இருக்க முடியும் என்று. என்ன அறியாமை! பணத்திற்கும் அஞ்சாமைக்கும் என்ன சம்பந்தம்? பணமில்லாதவன் தான் அதிக தைரியமுள்ளவனயிருக்க முடியும். ஏனென்றால் அவனுக்கு இந்த உலகத்திலே இச்சைகொள்ளக் கூடிய பொருள்கள் அதிகம் இல்லை. அதனால் அவனுக்கு ஆசையும் அதிகமில்லை. ஆசையில்லாதவன் அஞ்சாதவனா யிருக்கலாம்

என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தானே. நமது நாட்டிலே உலகத்தைத் துறந்த பரம ஞானிகள் கூடத்தான் அஞ்சாமைக்கு அணிகலன்கள் போல் இருந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுச் சமயகுரவர்களில் தலைசிறந்தவராகிய அப்பர் சுவாமிகளெனப்படுகிற திருநாவுக்கரசரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயல்லவா? 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்ற அவருடைய வீரவாசகம் நமது செவியில் இன்னும் தொனித்துக் கொண்டிருக்கவில்லையா?

பிறருடைய அவமதிப்புகளைச் சகித்துக் கொண்டிருப்பதற்குக் கூட தைரியம் வேண்டும். உன்னை அவமதித்துப் பேசுகிறானே அவன் தான் கோழை. அந்த அவமதிப்பை ஏற்றுக் கொள்கிற நீ தான் வீரன். அவனைப் போல் நீயும் அவனைத் திருப்பி அவமதித்துப் பேசக்கூடும். அதற்கான தேகபலம், மனோபலம் முதலியன வெல்லாம் உன்னிடம் இருக்கிறது. ஆயினும் நீ அவனை அவமதித்துப் பேசாமலிருக்கிறாய். அப்பொழுதுதான் நீ வீரன். அந்த மாதிரி செய்வதால் தான் அவனுக்கு நீ ஒரு வழிகாட்டிமாதிரி யாகிறாய். ஒரு காந்தம்போல் இருந்து அவனை உன் வசப்படுத்திக் கொண்டு அவனுடைய கோழைத்தனத்தை யெல்லாம் கரைத்து விடுகிறாய். உன்னுடைய தைரியத்தின், மனோதிடத்தின் செல்வாக்கு அவனிடம் படிந்து விடுகிறது. அதனால் அவனும் ஒரு தைரிய புருஷனாகிறான்.

தைரிய முள்ள புருஷனை, அஞ்சாத வீரனை; எல்லா மக்களும் நம்பிக்கையோடு பின்பற்றுகிறார்கள். அவனைப் பின் பற்றுகிற விஷயத்தில், மரணத்தைக் கூட அவர்கள் பொருட்படுத்துகிறார்களில்லை. அந்த வீரன இறந்து போகலாம். அவனுடைய தேகம் நெருப்பிலே எரிக்கப்பட்டோ மண்ணிலே புதைக்கப்பட்டோ போகலாம். ஆனால் அவனுடைய வீரம், அவனுடைய ஆத்மா என்றும் வாழ்ந்து கொண்டுதானிருக்கும்.

ஒரு மஹா புருஷன், தொழுக் கட்டை ஏறியோ, நெருப்புக் குழியில் இறக்கப் பட்டோ மாண்டு போகலாம். ஆனால் எந்த உண்மைக்காக, எந்த தர்மத்திற்காக அவன் மரிக்கிறானோ, அது, அவனுடைய தியாகத்தினின்று பன் மடங்கு பிரகாசத்துடன் துளிர்த்து எழுகிறது. ஒரு தேசாபிமானி, அவனைத் தூக்கு மேடையிலேற்றுவித்து இறந்து போகச் செய்கிறார்கள். அவனும், முகத்தில் புன் சிரிப்பு தவழ இறந்து போகிறான். ஆனால் அவன் எந்த நோக்கத்திற்காக வாழ்ந்தானோ அது வெற்றி பெறவில்லையா? ஒரு மஹானுடைய வாழ்க்கை, அவன் இறந்து போவதோடு மட்டும் முற்றுப் புள்ளி போட்டுக் கொள்வதில்லை. ஆனால் அவனுடைய வாழ்க்கையானது, எல்லாருடைய இதயங்களிலும் புத்துயிர் பெற்று தூண்டா விளக்காக எரிந்து கொண்டிருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு நிரந்தர வாழ்வை யடைய நீ விரும்ப வில்லையா? ஒரு மஹானாக வேண்டு மென்ற ஆசை உனக்கில்லையா? அப்படியானால் அஞ்சாமையை ஆபரணமாகக் கொள்.

தற்போதைய யுத்தத்திற்கு என்ன காரணம்?

—மா. பூ.

1939ம் வருடத்தில் ஆரம்பிக்கப் பெற்ற இந்த மகா யுத்தம் எதிர்பாராது திடீரென ஏற்பட்ட ஒன்றென்று ஒருவரும் நினைத்து விடக்கூடாது. 1914 யுத்தம் முடிந்து வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திடும் போதே அது மற்றொரு யுத்தத்திற்கு அடிகோலுவதாகச் சில தீர்க்கதரிசிகள் குறிப்பிட்டுள்ளார்கள். உலக பிரசித்தரான எச். ஜி. வெல்ஸ் அவர்கள் வெகு காலத்திற்கு முந்தியே உலகத்தின் பவிஷ்யத்தில் தன்னுடைய திருஷ்டியைச் செலுத்தி உலக அரசியலில் பின்னால் ஏற்படக் கூடியவைகளைக் குறிப்பிட்டு ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். 940ல் மற்றுமோர் உலக யுத்த மேற்படுமென்றும் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைப் பிரகாரம் சர்வ தேச நகரமாய்க் கருதப்பட்ட டான்ஸிக் என்ற ஜெர்மன் நகரத்தின் சொந்தத்தைப் பொறுத்தே அது ஏற்படுமென்றும் அன்றே அவர் சொல்லியுள்ளார். 1939ம் வருடக் கடைசியில் ஜெர்மானியர் டான்ஸிக்கை ஆக்கிரமித்த காரணத்தினால்தான் இப்போதைய யுத்தம் நடந்து வருகிறதென்பதை ஒருவரும் மறந்திருக்க மாட்டீர்களல்லவா?

ஸெர்வியா படையாளி ஒருவன் ஆஸ்திரியா இளவரசனைச் சுட்டுக் கொன்றதினால்தான் 1914ல் யுத்தம் ஏற்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறோம். கூட்டிக் குவித்த வெடி மருந்தில் ஒரு தீப்பொறி விழுந்தது போல் யுத்தத்துக்கு ஆயத்தமாயிருந்தவர்களுக்கு ஸெர்விய சம்பவம் ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததென்பது எல்லோரும் அறிந்த விஷயம். அது போன்ற ஒரு அற்ப சம்பவந்தான் 1940ம் வருட யுத்தத்துக்குங் காரணமாயிருக்குமென்று வெல்ஸ் அவர்கள் தமது புஸ்தகத்தில் சொல்லியுள்ளார். அவர் சொல்லியுள்ள காரணம் அதி விநோதமாயுள்ளது. பல்லுப் போன ஒரு ஜெர்மானியப் போர் வீரன் தனது போலிப் பற்களுடன் டான்ஸிக் மார்க்கமாக ரயிலில் பிரயாணம் செய்கிறார். வண்டி டான்ஸிக் பிளாட்பாரத்தில் நிற்கும் போது தனது பல் ஆடுவது போல் தோன்றியதால் ரயில் கதவுக் கண்ணாடியின் முன்பாக நின்று கொண்டு தனது வாயைத் திறந்து ஆடுவதாய்த் தோன்றிய பல்லை அதன் ஸ்தானத்தில் அழுத்துகிறார். இதனை பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த சில போலிஷ் போர் வீரர்கள் பார்த்து அவர் தங்களைப் பார்த்து நகைப்பதாகக் கருதி ரயிலிலேறி அவருடன் சண்டை ஆரம்பித்து அது காரணமாய் அந்த ஜெர்மானியப்

போர் வீரன் கொலை செய்யப் பெறுவதால் 1940ம் வருட யுத்தம் ஆரம்பமாகு மென்று குறிப்பிட்டிருக்கிறார். ஸ்ரீ வெல்ஸின் இந்த ஜோஸ்யம் பலிக்கவில்லை. அவர் ஹிட்லரின் குணத்தை நன்கு தெரிந்திருக்கவில்லை. கெய்சரோ மற்றெவரோ இருந்தால் பெயருக்காவது இவ்வித காரணங்கள் வேண்டும். ஜெர்மனியின் கீர்த்தியும், பிரதாபமுமே வாழ்க்கையின் லட்சியமெனக் கொண்டுள்ள ஹிட்லருக்கு இவைகளைவிட வேறு காரணங்கள் வேண்டுமா? சேனை திரட்டி முடிந்ததும் நேராக போலந்தில் பிரவேசிக்கும்படி ஆக்ஞாபித்தான். சென்ற மூன்று வருடங்களாக ஹிட்லரின் சேனைகள் எந்த சமயத்திலும் எது செய்வதற்கும் தயாராயிருந்தார்கள். அரசியல் உடன்படிக்கைக்கோ சர்வ தேசச் சட்டங்களுக்கோ ஹிட்லரைக் கட்டுப்படுத்துவதற்கான சக்தியில்லாதாயிற்று. தனது நிச்சயத்தைத் தவிர வேறெந்த நிபந்தனையையும் ஹிட்லர் பொருட்படுத்தவில்லை. ஜெர்மனியின் இரும்பு மனிதன் என்றுபுகழ்பெற்ற பிஸ்மார்க், ஹிட்லருக்கு ஒருவழிகாட்டியாயமைந்தான். யுத்தம் தேவையென்று தோன்றினால் பிஸ்மார்க் சேனாதிபதியான மோல்ட்கேயிடம் "தாங்கள் தயார்தானா?" என்று கேட்பான். மோல்ட்கேயும் "தயார்" என்று பதிலிறுப்பார். "பிரான்சுக்கோ அல்லது இதர சத்துரு தேசத்திற்கோ நுழையுங்கள்" என்று ஆக்ஞாபிப்பதைத் தவிர வேறு யாதொரு முன்னேற்பாடும் பிஸ்மார்க் செய்ய வேண்டியதே நேரிடாது.

வெர்சேல்ஸ் உடன்படிக்கையைப் பார்த்தாலே 1939ம் வருட யுத்தத்துக்குக் காரணம் கண்டு கொள்ளலாமென்று முன் குறிப்பிட்டேனல்லவா?

1914ம் ஆண்டு உலக யுத்தம் முடிந்ததும் வெற்றி பெற்றவரும் தோல்வியுற்றோரும் ஒருங்கே உலகத்துக்கு இதைவிட பெருங் கஷ்டம் வருவதற்கில்லையென்று சொன்னார்கள். பல வருஷங்களாக அரும் பாடுபட்டு அடைந்த நாகரீகமெல்லாம் அழிந்தே போயின. எங்கு பார்த்தாலும் தரித்திரமும் வியாதியும் அழிவும் தான். அநேக லட்சம் ஜனங்கள் யுத்தத்தில் செத்து மடிந்தார்கள். அதிலிரண்டு மடங்கு க்ஷாமத்தினாலும் ரோகத்தினாலும் மடிந்தார்கள். லட்சக் கணக்கானவர்கள் அங்கஹீனர்களாய் ஆயுட் காலம் முழுவதும் கழிக்க வேண்டி வந்தது. நகரங்களும் பட்டணங்களும் பாலைவனங்கள் போலும், சுடுகாடுகள் போலுமிருந்தன. கணக்கிலடங்காப் பணங்களைச் செலவிட்டுக் கட்டிய கட்டிடங்களெல்லாம் மண்ணோடு மண்ணாயின. எண்ணற்ற பெண்கள் விதவைகளாயினர். மக்களை இழந்தனர் மாந்தர்கள் பலர். பாவிப் பாரற்று பாலகர்கள் தெருவி லலைந்தனர். எங்கு பார்த்தாலும் மனமொடிந்த மனிதர்களே காணப் பட்டனர். சாம்ராஜ்ய நிர்மாணங்களுக்காகவும் தேசம் பிடிக்கும் மோகங்களுக்காகவும் மனித வர்க்கத்தின் மேன்மையும், நாகரீகமும் பலி கொடுக்கப் பட்டிருக்கும் அந்த நிலைமை உலகத்தையே ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. இச்சம்பவங்கள் உயர்ந்த நோக்கமும் விரிந்த ஞானமும் படைத்த சில பெரியார்களின் மனதை இளகச் செய்தது. சிலர் யுத்தமாகிற பேராபத்திலிருந்து உலகத்தை விடு

விப்பதற்கான மார்க்கங்களைப் பற்றி சிந்தித்து பொது ஜனங்களிடையே இது சம்பந்தமான பிரசாரங்களும் செய்ய ஆரம்பித்தனர். இவ்விதமானவர்களில் முதன்மையானவர் பிரஸிடெண்ட் வில்ஸனாவார். இவர் சமத்துவம், சுதந்தரம், சகோதரத்துவம் இவை போன்ற உயர் குணங்களைக் கொண்டு உலகத்தை ஐக்கியப் படுத்தும் உயர்ந்த நோக்கத்துடன் ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்தார். அவர் சென்ற விடங்களிலெல்லாம், அறிவாளிகளையும் அரசியல் பெரியார்களையும் சந்தித்து அப்பிரதேசங்களிலெல்லாம் தன்னுடைய எண்ணத்தைப் பரப்பி வந்தார். உலகம் அவரை தேவ தூதனாகப் பாவித்து வரவேற்று லோக ரக்ஷைக்கான அவரது பிரசாரங்களை ஆவலுடன் ஏற்று உலக புனருத்தாரணத்திற்காக பூலோகத்தின் மறு புறத்திலிருந்து வந்துள்ள அவரது நன்னோக்கங்கள் நிறைவேறி உலகத்தில் அழியாச் சமாதானம் நிலவ உதவ வேணுமாய் இறைவனை வணங்கினார்கள். இதற்காக அவர் வெளியிட்ட 14 விஷயங்களைப் பாராட்டி பல பெரியார்கள் சிலாகிக்கவும் ஆரம்பித்தனர். பத்திரிகைகளில் இவை பற்றிய விமர்சனங்களுக்கோர் அளவில்லை.

மாதங்கள் சில சென்றன. அவரது பிரசாரங்கள் காற்றுடன் லயிக்க ஆரம்பமாயிற்று. ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்தை முடித்து தன் தேசமடைந்த அந்த அமெரிக்க பிரஸிடெண்டுக்கு தன் தேசத்திலேயே நல்வரவு கிடைக்கவில்லையென்று சொல்லலாம். அவர் ஐரோப்பாவிலிருந்து விடை பெற்றுக் கொண்டதோடு அவரது நோக்கங்களும் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டன.

வில்சனின் நோக்கங்களை ஏற்றுக் கொள்ள வல்லரசுகளொன்றும் தயாராயிருக்கவில்லை. சாம்ராஜ்ய ஸ்தாபன ஆசையும், அரசியல் ஸ்தாபன மோகமும் ஒவ்வொருவரையும் பற்றிக் கொண்டன. அமெரிக்கத் தேர்தல் சமீபித்திருந்ததினாலும், தன் பேரிலிருந்த பொது ஜனாபிப்பிராயத்துக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதென்று அறிந்ததாலும் வில்ஸன் உலக உத்தாரண வேலையைத் தொடர்ந்து செய்ய விரும்பவில்லை. உலக ரக்ஷைக் கிறங்கிய வில்ஸன் தன் ஸ்தான ரக்ஷைக்கு (பிரஸிடெண்ட்) வேலை செய்ய வேண்டியவரானார். ஐரோப்பா வல்லரசுகளுக்கு ஸாம்ராஜ்ய ஸ்தாபன வேலையிலீடுபட வேண்டியிருந்ததினால் வேறெதிலும் கவனம் செலுத்த முடியாமலாயிற்று.

மகா யுத்தத்தில் ஜெர்மனி தோற்று நேச தேசங்கள் வெற்றி பெற்றிருந்ததால் வல்லரசுகளின் ஒரே நோக்கம் ஜெர்மனியை எவ்விதம் கஷ்டத்திலாக்குவது என்பதுதான். ஒரு யுத்தத்தினால் ஐரோப்பாவுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே கஷ்டத்தை உண்டு பண்ணிய ஜெர்மனியின் பேரில் யாருக்குமே அனுதாபமிருக்காதல்லவா! நேச தேசங்கள், ஜெர்மனி, மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்காமலிருப்பதற்கும் நடந்த யுத்தத்திலேற்பட்ட நஷ்டத்தை அவர்களிடத்திலிருந்து ஈடுபடுத்தக் கூடியதுமான மார்க்கங்களைப் பற்றி யோசிக்கலாயின. இங்கிலாந்தும் இதர வல்லரசுகளும் ஜெர்மனிக்குச் சில. சாதகங்

களைக் கொடுக்க விரும்பினாலும் பிரான்ஸ் அதற்கிணங்க வில்லை. ஜெர்மனியை என்றென்றைக்கும் கஷ்டத்தில் வைத்திருந்தால்தான் தாங்கள் சுகமாக வாழலாமென்று பிரான்ஸ் நன்கு தெரிந்து கொண்டிருந்தது. ஜெர்மனியின் சகல வசதிகளையும் இல்லாததாக்கி அதனை முன்னேற முடியாமல் செய்ய வேணு மென்பது அப்போதைய பிரஞ்சு பிரதம மந்திரி க்ளெமென்சோவின் அபிப்பிராயம். பலத்த விவாதத்திற்குப் பின் ஐரோப்பிய வல்லரசுகள் வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கை யெழுத்திட்டனர். ஜெர்மன் பிரதிநிதிகளும் விவாத காலத்திலிருந்தார்களெனினும் அவர்களது அபிப்பிராயங்களைக் கவனிப்பார் யாருமங்கிருக்க வில்லை. கையெழுத்திடுவதற்கு முன்பாய் நிபந்தனைகளெல்லாம் ஜெர்மன் பிரதிநிதிகளுக்கு வாசித்துக் காண்பிக்கப் பெற்றன. அவர்களும் குனிந்த தலை நிமிராமல் கேட்டனர். அவர்களுக்கு உடன்படிக்கையில் கையெழுத்துச் செய்வதைத் தவிர வேறு வழியில்லாமலிருந்தது. நேச தேசங்கள் ஜெர்மனியை துண்டு துண்டாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் பங்கிட்டன. மூன்று ஜில்லாக்கள் பெல்ஜியத்துக்குக் கொடுக்கப் பெற்றன. இன்னொரு பாகம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது. ஜெக்கோஸ்லோவேகியா என்ற தேசம் சிருஷ்டிக்கப் பெற்றதில் பெரும் பாகம் ஜெர்மானிய ஜில்லாக்கள்தான். சில பாகங்கள் போலந்துக்கும் நல்கப்பட்டன. அரசியல் விஷயங்களில் ஜெர்மனிக்கு அதி முக்கியமாயிருந்த பிரசித்தி பெற்ற போலிஷ் காரிடர் போலந்து வசமாக்கப் பெற்றது. அப்பிரதேசத்தின் முக்கிய பட்டணமான டான்ஸிக் நகரம் சர்வதேச நகரமாக்கப் பெற்றது. டான்ஸிக் நகரிலுள்ள ஜனத் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூற்று பேர் ஜெர்மானியர்களே. இதோடு கூட ஆஸ்திரியா ஒரு பொழுதும் ஜெர்மனியின் ஆதீனத்திலிருக்கக் கூடாதென்ற நிபந்தனையும் ஏற்படுத்தப் பெற்றது. மேலும் ஜெர்மனியிடமிருந்து யுத்த ஈடாக ஒரு பெருந் தொகையை வசூலிப்ப தென்றும் தீர்மானிக்கப் பெற்றது. இவ்விதமாக வல்லரசுகள் ஜெர்மனியின் கோபத்தைக் கிளப்பி விட்டன.

தேசப் பற்று அதிகமுள்ள ஜனங்களைக் கொண்ட ஜெர்மனியை பிரான்சும், இங்கிலாந்தும் அடக்கியாள உத்தேசித்தது ஜெர்மானியருக்கு அதிக ஆத்திரத்தை யுண்டாக்கியது. ஜெர்மனியின் பிற்கால சரித்திரம் வெர்சேல்ஸ் உடன்படிக்கையை வஞ்சம் தீர்த்துக் கொண்ட மார்க்கம் என்று கூடச் சொல்லலாம். அந்த உடன்படிக்கை யில்லாவிடில் ஹிட்லர் என்ற ஒருவன் ஏற்பட்டிருக்கவே மாட்டான். 1914ல் கிடைத்த தோல்விக்கு பழிதீர்க்க வேணு மென்று குதித்துக் கொண்டிருக்கும் தேஜஸின் ஸ்வரூபமாய் விளங்குகிறான் ஹிட்லர். தங்களது அவமானத்தைப் போக்கப் போர் தொடுக்க முன் வந்த ஹிட்லருக்கு ஜெர்மானியர்கள் ஊக்கமளித்ததில் என்ன ஆச்சர்யம்? அந்த வஞ்சத் தீர்ப்புதான் இப்பொழுது நடக்கும் உலக மகா யுத்தம்.

வேறு காரணங்களு மில்லாமலில்லை. 1929ல் உண்டான பொருளாதார வீழ்ச்சி எல்லா தேசங்களைக் காட்டி

னும் ஜெர்மனியைத்தான் அதிகமாகப் பாதிப்பதாயிருந்தது. ஜெர்மன் மார்க் நாணயங்களின் மதிப்புக் குறைந்து குறைந்து ஜெர்மன் கவர்ன்மெண்டு 'பாப்பராய்' விடுமோ என்று உலகமே பயப்படும்படியாயிற்று. உதவிக்காக ஜெர்மனி நாற்புறமும் கையை நீட்டிற்று. ஜெர்மனி விழுந்து விட்டால் அதனாலேற்படும் இடையூறுகளைக் கருதி இங்கிலாந்து அதற்கு உதவியளிக்க நினைத்தது. இதற்காக அன்றைய பிரதம மந்திரி மகடோனால்ட் லண்டனில் ஒரு மகாசபையைக் கூட்டினார். இம் மகா நாட்டில் கீழ் தேசத்திலும் மேல் தேசத்திலுமுள்ள வல்லரசுகளெல்லாம் கலந்து கொண்டன. யுத்த ஈட்டுத் தொகையாகிய பெருந் தொகை எந்தக் காலத்திலாவது வசூலிக்க இடமிருக்க வேண்டுமென்ற எண்ணத்தால் அதற்கு உதவியளிக்க வேணுமென்று இங்கிலாந்தும் அமெரிக்காவும் விரும்பிற்று. ஜெர்மனி, தன் நிர்க்கதியான நிலைமையையும் இதர நாடுகள் உதவியளிக்காவிடில் ஏற்படக் கூடிய இடைஞ்சல்களைக் குறித்தும் பிரசங்கம் செய்தது. மிஸ்டர் மக்டோனால்ட் பிரிட்டிஷ் பிரஜைகளின் உதார குணத்தை உணர்த்தும் முறையில் அவர்கள் ஜெர்மனிக்குக் கூடுமான வரை உதவியளிக்க சித்தமாயிருப்பதாய் சொற்பொழி வாற்றினார். அதன் பின் அமெரிக்கப் பிரதிநிதிகள் மக்டோனால்டை ஆதரிப்பதாகத் தெரிவித்துக் கொண்டனர். பின் எல்லோருடைய திருஷ்டியும் பிரஞ்சு பிரதிநிதிகள் இருக்குமிடத்துக்குச் சென்றது. எல்லா தேசப் பிரதிநிதிகளும் பேசினாரென்றாலும் பிரஞ்சு தேசத்தவர்கள் மட்டிலும் வாய் திறக்கவில்லை. பிரதிநிதிகளிலொருவரேனும் இடம் விட்டு எழுந்திருக்கக் கூடச் செய்யவில்லை. அன்றைய கூட்டம் கலைந்தது. மறுநாள் கூட்டத்திற்கு முன் என்னென்ன சூழ்ச்சிகளும், தந்திரங்களும் திரைமறைவில் நடந்ததென்று யாராலும் சொல்ல முடியாது. மகா நாடு வெற்றிகரமாய் முடியவில்லையென்பது வெளிப்படை. பிரஞ்சு பிரதிநிதிகள் ஜெர்மனிக்குத் தாங்கள் ஒருவித உதவியும் அளிக்க விரும்பவில்லையென்பதோடல்லாமல் இங்கிலாந்தோ அல்லது வேறு வல்லரசோ செய்வதிலும் தங்களுக்குச் சம்மதமில்லையென்பதை வெளிப் படுத்தினார்கள். ஜெர்மனி பொருளாதார வீழ்ச்சியால் ஒடுங்க வேணுமென்றும் இதர தேசங்கள் உதவி யளித்தால் அது ஏற்பட மார்க்கமில்லையென்றும் அவ்வித மேற்பட்டால்தான் பிரான்ஸ் என்றென்றைக்கும் நிர்ப்பயமாயிருந்து வரலாமென்றும் பிரஞ்சுப் பிரதிநிதிகள் கருதினார்கள். பிரான்சின் வாதம் வெற்றி பெற்றது. இங்கிலாந்தினுடையவும் அமெரிக்காவினுடையவும் உதார குணம் பிரான்சின் விவாதத்தில் அமுங்கிப்போய் விட்டது. லண்டன் மகாநாடு தோல்வியடைந்தது. ஜெர்மன் பிரதிநிதிகள் ஏமாற்றமடைந்தனர். அதற்குப் பின் அன்று ஜெர்மன் சான்சலராயிருந்த ப்ரூனிங் அதிக காலம் அப்பதவியிலிருக்க முடியவில்லை. லண்டன் மகாநாடு ப்ரூனிங்கை ஸ்தானப் பிரஷ்டனாக்கி இன்று ஐரோப்பாவில் இரத்த வெள்ளத்தில் நீந்தி வரும் ஹிட்லரை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு உதவி யளித்தது.

(மொழிபெயர்ப்பு)

காங்கிரஸும் அஹிம்சையும்

காரியக் கமிட்டி தீர்மானம்

அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் 1940ம் ௵ ஜூன் மாதம் 17ந் தேதியிலிருந்து தொடர்ந்து நான்கு நாட்கள் வார்தாவில்கூடியது. தற்போதைய சர்வதேச நிலைமை தீவிரமாக யோசிக்கப்பட்டுக் கடைசியில் கீழ்கண்ட அறிக்கை வெளியிடப்பெற்றது:—

ஐரோப்பாவில் அதிவேகமாக ஒன்றன் பின்னொன்றாய் பல துக்ககரமான சம்பவங்கள் நடைபெற்று வருவனவையும் சிறப்பாக பிரெஞ்சு மகா ஜனங்களுக்கு ஏற்பட்ட துரதிருஷ்டத்தையும் கண்டு காரியக்கமிட்டியார் பெரிதும் வருந்துகின்றனர். இந்தச் சம்பவங்கள் எதிர் பாராத பல விளைவுகளை உண்டு பண்ணியிருக்கின்றன. புதிய நிலைமைகளும் சிக்கலான பிரச்னைகளும் இதன் விளைவாக இனியும் உண்டாகலாம்.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து, இந்தியா ஒரு சுதந்திர நாடாக இயங்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், காங்கிரஸின் கொள்கை இருந்து வருகிறது. காங்கிரஸின் இந்தக் கொள்கையானது, ராம்கார் காங்கிரஸ் தீர்மானத்திலும் வலியுறுத்தப்பட்டது. இந்தக் கொள்கை அநுஷ்டிக்கப் பட்டு வரும் விதமானது, நிலைமையின் அன்றாட மாறுதலை யொட்டி யிருக்கிறது. எந்தெந்த பிரச்னைகள் மிகத் தொலைவில் இருப்பதாகக் கருதப்பட்டனவோ அவை இப்பொழுது சமீபத்தில் இருக்கின்றன. இன்னும் சில பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டியனவாகும் தேசத்திற்குச் சுதந்திரம் பெறும் பிரச்னையானது. அந்தச் சுதந்திரத்தை வைத்துக் காப்பாற்றும் பிரச்னையோடும், வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் குழப்பம் இவைகளினின்று பாதுகாத்துக் கொள்கிற பிரச்னையோடும் சேர்த்தே ஆலோசிக்கப் பட வேண்டி யிருக்கிறது.

மற்றப் பிரஜைகளின் மீதும் மற்ற நாடுகளின் மீதும் ஆதிக்கங் கொள்ள வேண்டுமென்ற ஏகாபத்திய ஆசையாலும், யுத்த தளவாடங்களை அதிகப் படுத்திக்கொள்ளும் போட்டியினாலும் தற்போதைய ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டு, அதன் விளைவாக, இது வரையில் நேர்ந்திராத துயரமும் துன்பமும் மானிட சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. தேசிய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், ஜனங்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், ஒழுங்கு படுத்தப் பெற்ற பலாத்காரம், எவ்வளவு விரிவான முறையில் அமைக்கப்பட்

டிருந்த போதிலும் அது பயனற்றதாக முடியுமென்பதை இந்த யுத்தம் நிரூபித்து விட்டது.

இந்த ஐரோப்பிய யுத்தமானது, யுத்தத்தினால் சமாதானமும் சுதந்திரமும் உண்டாகாதென்பதை தெளிவாக்கி விட்டது. இப்பொழுது உலகத்தின் முன்னர் இரண்டு வழிகள் தானிருக்கின்றன. யுத்தம் நடத்தி கேவலமான சீரழிவுக்கு உலகம் வந்து விடுவதா, அல்லது எல்லா ஜனங்களுக்கும் சுதந்திரத்தை யளிப்பதென்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உலகத்தில் சமாதானத்தையும் அஹிம்சையையும் நிலை நாட்டுவதா என்பது தான் இந்த இரண்டு வழிகள். ஜன உரிமையைப் பாது காத்துக் கொள்ளவும், பலாத்காரப் படையெடுப்பினின்று பாதுகாத்துக் கொள்ளவும் ஒழுங்கு படுத்தப்பட்ட அஹிம்சை வழியை யுத்தச் சுமையைத் தாங்க முடியாமல் கதறிக் கொண்டிருக்கும் உலக ஜனங்களுக்கு, மகாத்மா காந்தி காட்டினார் மானிட சமுதாய சரித்திரத்தின் இந்த நெருக்கடியான நிலைமையில், காங்கிரஸானது இந்த லட்சியத்தை வற்புறுத்த வேண்டுமென்றும், இந்தியாவானது, தனது சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், வெளி நாட்டுப் படையெடுப்பினின்றோ அல்லது உள் நாட்டுக் குழப்பத்தினின்றோ தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆயுதந் தரித்த படைகளை வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் மகாத்மா காந்தி உணர்கிறார்.

காங்கிரஸானது, தன்னுடைய சுதந்திரப் போராட்டத்திற்கு அஹிம்சையையே அநுஷ்டித்து வர வேண்டுமென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கருதிய போதிலும், தற்போதைய மனித சக்திகளின் குறைபாடுகளையும் தவறுகளையும், காரியக் கமிட்டி புறக்கணித்து விட முடியாது. தவிர, காங்கிரஸானது, ஜனங்கள் மீது பூரண அஹிம்சை ஆதிக்கம் கொள்கிற வரையிலோ, அல்லது ஜனங்களே அஹிம்சை பாடத்தில் பூரண பயிற்சி அடைகிற வரையிலோ உள்ள இடைக் காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களையும் காரியக் கமிட்டி புறக்கணித்து விட முடியாது. இந்தப் பிரச்னையைப் பற்றி காரியக் கமிட்டி தீவிரமாக ஆலோசித்துக் கடைசியில், காந்தியடிகள் அஹிம்சை தத்துவ விஷயத்தில் போகிற அவ்வளவு தொலைவுக்குத் தன்னால் போக முடியாதென்ற முடிவுக்கு வந்திருக்கிறது ஆனால், அவர்—மகாத்மா காந்தி—தமது உன்னத லட்சியத்தைப் பின்பற்றிச் செல்ல அவருக்குப் பூரண உரிமை இருக்க வேண்டுமென்பதையும் அங்கீகரிக்கிறது எனவே, தற்போதைய இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டுக் குழப்பங்களை உத்தேசித்து காங்கிரஸானது இனி என்ன வேலைத் திட்டங்களையோ அல்லது கொள்கைகளையோ நிர்ணயிக்க இருக்கிறதோ அவைகளின் பொறுப்பிலிருந்து காந்தியடிகளை நீக்கி விட வேண்டுமென்று காரியக் கமிட்டி தீர்மானிக்கிறது.

இது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பல பிரச்னைகளைப் பற்றி காரியக் கமிட்டியார் தீவிரமாக யோசித்து, அந்தப் பிரச்னைகளெல்லாம் சமீப காலத்தனவாக இருந்தாலும் நிகழ் காலத்தன வல்லவென்ற முடிவுக்கு

வந்திருக்கின்றனர். சுதந்திரப் போராட்ட விஷயத்தில் அஹிம்சைக் கொள்கையும் முறைகளுமே எப்பொழுதும் போல் இருக்குமென்றும், தேசியப் பாது காப்பு விஷயத்தில் இந்த அஹிம்சைக் கொள்கையை அநுஷ்டிக்க முடியவில்லையே யென்பதற்காக, இது பாதிக்கப் படாதென்றும் கமிட்டி வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

யுத்த முயற்சிகளை அதிகப் படுத்தவே ஆங்காங்கு யுத்தக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப் படுகின்றன. காங்கிரஸ் கொள்கையை முன்னிட்டு, காங்கிரஸ்காரர்கள் இந்தக் கமிட்டிகளில் கலந்து கொள்ள முடியாது; யுத்த நிதிக்கு உதவவும் முடியாது. அரசாங்க ஆதிக்கத்துக் குட்பட்ட 'சிவிக் கார்டு'களிலும் தற்போதைய அரசியல் நிலைமையை உத்தேசித்து காங்கிரஸ்காரர்கள் அவற்றில் கலந்து கொள்ள முடியாது. தற்காப்புக்காகவும், பொதுஜன அமைதியைக் காக்கவும் ஆங்காங்கு காங்கிரஸ் கமிட்டிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். வகுப்பு வேற்றுமைகள் பாராட்டப்படாமலும், எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பின் பேரிலும் இந்த ஏற்பாடு நடைபெற வேண்டும்.

இனி ஏற்படப் போகிற நெருக்கடியான காலத்தை முன்னிட்டு, காங்கிரஸானது, சுறுசுறுப்பான ஸ்தாபனமாகவும் ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட ஒரு ஸ்தாபனமாகவும் வேலை செய்ய வேண்டும். இதற்காக, மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நெருக்கடியான காலத்தில், மாகாணக் கமிட்டிகள், வேலை செய்யாத ஏராளமான அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஸ்தாபனமாக இராமல், சுறுசுறுப்பாக வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். காங்கிரஸ் நிருவாகக் கமிட்டிகளில் அங்கத்தினர்களாயிருக்கும் அனைவரும் தொடர்ந்து தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அப்படிச் செய்யாதவர்கள், செய்ய முடியாதவர்கள், தேசத்திற்குத் தங்கள் கடமையைச் செய்யத் தவறுவதோடு, ஸ்தாபனத்திற்கும் பிரயோஜன மற்றவர்களாகிறார்கள்.

தீர்மானங்கள்

கீழ்க்கண்ட தீர்மானங்களும் காரியக் கமிட்டியால் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன:—

1. ஸ்ரீ ஆர். எஸ். பண்டிதர், காங்கிரஸ் தொண்டர் ஸ்தாபனங்களைப் பற்றித் தயாரித் தனுப்பியுள்ள யாதாஸ்தை காரியக் கமிட்டி பரிசீலனை செய்து பார்த்தது. அவருடைய சிபார்சுகளை பெரும்பாலும் அங்கீகரிக்கிறது. காங்கிரஸ் கொள்கைகளுக்கிணங்க தேசிய சேவை செய்யக் கூடிய பயிற்சி பெற்ற தொண்டர்களை அதிகப்படுத்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுகிற விதமும், பயிற்சி பெறுகிற விதமும் ஏறக்குறைய இந்தியா முழுவதற்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று காரியக் கமிட்டி அபிப்பிராயப் படுகிறது.

நானூறு வருஷங்களுக்கு முன் பக்கோ நகரம் எப்படி யிருந்தது?

—"சரித்திரக்காரன்"

சுமார் நானூறு வருஷங்களுக்கு முன்னர் ரால்ப் பிட்ச் (Ralph Fitche) என்ற ஓர் ஆங்கிலேய வியாபாரி, இந்தியாவின் பலபாகங்களிலும் சுற்றிக் கொண்டு, பர்மாவுக்கு பாசீன் ஆற்றுமார்க்கமாக பக்கோவுக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்து பார்த்த காலத்தில் பக்கோ என்ற பெகு (Pegu) எப்படி யிருந்த தென்பதை, தான் எழுதியுள்ள குறிப்பொன்றில் வருணித்திருக்கிறான். பெகு, இரங்கூனுக்கு வடக்கே சுமார் ஐம்பது மைல் தொலைவில் ரெயில் மார்க்கத்தில் இருக்கிறது. பிட்ச் என்பவன், இந்த பெகுவைப் பற்றி என்ன கூறுகிறானென்பதைக் கவனிப்போம்:—

பெகு ஒரு விசாலமான நகரம்: பலமான பந்தோபஸ்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நகரத்தைச் சுற்றி கற்சுவர்கள் மதில்களாக எழுப்

இந்த வேலையில் உதவி செய்யவும், பயிற்சி விதிகளைத் தயாரிக்கவும், தொண்டர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கு ஆலோசனை சொல்லவும் தொண்டர் கமிட்டியொன்றை காரியக் கமிட்டி நியமிக்கிறது. இதற்த ஸ்ரீ ஆர். எஸ். பண்டிதர் காரியதரிசியாயிருப்பார். இந்தக் கமிட்டி, தனது யாதாஸ்தை காரியக் கமிட்டிக்குச் சமர்ப்பிக்தும் கமிட்டியில் பின்வரும் அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

1. சர்தார் படேல்
2. ராவ்சாஹிப் பட்வர்த்தன்
3. இப்தி கருத்தீன்
4. ஆர். எஸ். பண்டிதர்
5. குதாய்கித்மத்காரின் பிரதிநிதியொருவர்

2 தற்போதைய உலகம் மிக நெருக்கடியான நிலைமையில் இருப்பதால், இதைக் கவனித்துக் கொண்டிருந்து அவ்வப்பொழுது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள, காரியக் கமிட்டி அடிக்கடி கூடும். திடீரென்று புறப்பட்டு கூட்டத்திற்கு வருமாறு எல்லா அங்கத்தினர்களும் தயாராயிருக்க வேண்டும்.

ஜூலை மாதக் கடைசி வாரத்தில் அ. இ. கா. கமிட்டி கூட்டத்தைக் கூட்டுவிக்க வேண்டும்.

பப்பட்டிருக்கின்றன. அகழிகள் வெட்டியிருக்கிறார்கள். கோட்டைக்குள்ளிருக்கிற வீடுகள் மூங்கிலினால் கட்டப் பட்டவை. மேலே புல்லைப் பரப்பியிருக்கிறார்கள். வியாபாரிகள் தங்கள் சரக்குகளை வைத்துக் கொள்வதற்காக, செங்கல் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நெருப்புப் பயத்தினின்று காத்துக் கொள்ளவே இங்ஙனம் செய்திருக்கிறார்கள். ஏனென்றால், பெகு நெருப்புப் பயத்திற்குப் பெயர் போனது. ஒரு மணி நேரத்திற்குள் 400 அல்லது 500 வீடுகள் அழிந்து விடக் கூடிய மாதிரி நெருப்புப் பற்றிக் கொண்டு விடுகிறது. பெகுவுக்குள் நுழைய இருபது நுழை வாயில்கள் (கேட்) இருக்கின்றன. எல்லா நுழைவாயில்களும் கற்களினால் கட்டப் பட்டிருக்கின்றன. இவைகளின் மீது மரத்தினால் கூடுகள் மாதிரி கட்டி யிருக்கிறார்கள். இங்கு எப்பொழுதும் காவல் வீரர் காத்து நிற்கின்றனர்.

பெகு நகரத்து வீதிகள் விசாலமாயிருக்கின்றன. ஒரு நுழைவாயிலிலிருந்து மற்றொரு நுழைவாயிலுக்கு நேராக ரோட்டுகள் போகின்றன. ரோட்டுகள், ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு பேர் வரிசையாக குதிரை சவாரி செய்து கொண்டு போகக் கூடிய அளவு அகலமாயிருக்கின்றன. தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் தென்னை மரச்சாலைகள் இருக்கின்றன. இதனால் தெரு ஓரமாக நிழலில் நடந்து செல்லச் சௌகரியமாயிருக்கின்றது. பணம் படைத்தவர்களுடைய வீடுகள் மரத்தினால் கட்டப்பட்டிருக்கின்றன. மேலே ஓடுகள் போட்டு மூடி யிருக்கிறார்கள். அரசனுடைய அரண்மனையும் மரத்தினாலேயே கட்டப் பட்டிருக்கிறது. மேற்பாகமெல்லாம் மெருகு கொடுத்திருக்கிறார்கள். புத்தர் பெருமான் வீற்றிருக்கும் கோயில்களின் மீது வெள்ளியினால்செய்யப்பட்ட ஓடுகளைப் பரப்பி யிருக்கிறார்கள். கோயிற் சுவர்கள் தங்கமூலாம் பூசப் பட்டிருக்கின்றன. அரசனுடைய அரண்மனையின் முன் முற்றத்தில் யானைகள் கட்டப் பட்டிருக்கும் கஜ சாலை இருக்கிறது. இங்கு நான்கு வெள்ளை யானைகள் இருக்கின்றன.

சையாம் முதலிய நாடுகளிலிருந்து இந்த வெள்ளை யானைகள் அரசனுக்குப் பரிசாக அளிக்கப் படுகின்றன. அப்படிப் பரிசளிக்கப்படுகிற தருணத்தில், நகரத்திலுள்ள எல்லா வியாபாரிகளும் இந்த வெள்ளை யானையை வந்து பார்க்க, அரண்மனையில் கூட வேண்டுமென்று உத்திரவிடப் பெறுகிறார்கள். தவிர, இந்தச் சமயத்தில் அரசனுக்கு ஒரு வராகன் காணிக்கையாகச் செலுத்த வேண்டுமென்றும் உத்திரவிடப் படுகிறார்கள். இங்ஙனம் காணிக்கை செலுத்தியவர்கள், தங்கள் ஆயுட்காலம் வரையில் அரண்மனைக்கு வந்து இந்த வெள்ளை யானைகளைப் பார்த்து விட்டுப் போகலாம். பெகு அரசனுக்கு வெள்ளை யானைகளையுடைய அரசன் என்று பெயர். வேறு எந்த அரசனேனும், வெள்ளை யானைகளை வைத்திருந்தால், அவற்றைத் திருப்பிக் கொடுக்குமாறு இந்த பெகு அரசன் சண்டைக்குப் போவான். பெகுவிலுள்ள ஒவ்வொரு வெள்ளை யானைக்கும் ஒவ்வொரு வீடு தனித்தனியாகக் கட்டப் பட்டிருந்தது. இவைகளுக்கு ஆகாரங் கொடுப்பது, தங்க

வெள்ளிப் பாத்திரங்களில் தான். தினந்தோறும் இந்த யானைகள், கழுவப்படும் பொருட்டு ஆற்றுப் பக்கம் அழைத்துச் செல்லப் படுகின் றன. இப்படிச் செல்கிறபோது, மேலே பட்டு விதானங்கள் நிழல் கொடுக்க, முன்னே வாத்தியங்கள் முழங்கச் செல்லும். ஆற்றில் இந்த யானைகள் கொண்டு நிறுத்தப் பட்ட தும், அந்தஸ்துள்ள ஓர் உத்தியோ கஸ்தர் அங்கிருந்து, யானையின் பாதங்களை ஒரு வெள்ளித் தொட்டி யில் கழுவுகிறார்.

பெகு அரசர், தினந்தோறும் இரண்டு முறை தமது பிரஜைகளுக் குத் தரிசனம் கொடுக்கிறார். அப் பொழுது இவருடைய இருமருங் கிலும் ஆஸ்தானிகர்கள் வேறே உட்கார்ந்திருக்கிறார்கள். சுற்றி ஆயுதந் தரித்த மனிதர்கள் காவல் புரிகிறார்கள். யாரேனும் அரசருடன் பேச வேண்டுமானால் அவர் மூன்று முறை மண்டியிட்டு வணங்க வேண் டும். பின்னரே அருகிற் சென்று பேசலாம். அரசர் ஊர்வலமாகச் செல்வதாயிருந்தால், ஆஸ்தானிகர் பலர் புடை சூழ, யானை மீது அம்பாரி யிட்டு, ரத்தின கசிதமான ஓர் ஆசனத் தின் மீதமர்ந்து செல்வார். அல்லது சில சமயங்களில் பல்லக்கிலும் செல் வார். அவருக்கு ஒரு மனைவிதான் உண்டு. ஆனால் அரண்மனையில் வேறு ஸ்திரீகள் சுமார் 300 பேர் இருந்தார்கள்.

அரசர், தினந்தோறும் தம் முன் னர் வரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவார். மனு கொடுக்கிற வர்கள், ஓலையில் எழுதிக் கொண்டு வந்து கொடுப்பார்கள். இந்த ஓலை யானது ஏறக்குறைய 2 அடி நீளமும் இரண்டு அங்குல அகலமும் உடைத் தாயிருந்தது. விண்ணப்பதாரிகள், மனுவைக் கொடுத்து விட்டு, பின்னர் சிறிது பின் வாங்கி, கையில் சொற்பக் காணிக்கையுடன் தயாராயிருப்பார் கள். அரசர், தங்களுக்கு நியாயம் வழங்கினால், அந்தக் காணிக்கையைச் செலுத்தி விட்டுச் செல்வார்கள். இன் றேல், அரசர், அந்தக் காணிக்கையை எடுத்துக் கொள்ளாமல் அவர்களைத் திருப்பி விடுவார்.

பெகு நகரத்தில் வியாபாரம் மிக ஒழுங்காக நடைபெறுகிறது. இங்கு கடன் கொடுத்துக் கடன் வாங்குவ தில் மிக நாணயமாக நடந்து கொள் கிறார்கள். இந்த நகரத்திலிருந்து தங்கம், வெள்ளி, ரத்தினவகைகள், தகரம், ஈயம், செம்பு, கஸ்தூரி, வார் னிஷ், வாசனைக் கட்டைகள், வால் மிளகு, அரிசி, சாராயம், சர்க்கரை முதலியன வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்யப் படுகின்றன. அமீரா பியா நாடுகளிலிருந்து இந்த நகரத் திற்கு நேராகக் கப்பல்கள் வருகின் றன. வெளிநாடுகளிலிருந்து இங்கு கம்பளி துணிகள், வெல்வெட் துணி கள், அபினி முதலியன இறக்குமதி செய்யப்படுகின்றன.

பெகுவிலுள்ள புத்தக் கோயில்கள் மிக அலங்காரமாகவும் ஆடம்பர மாகவும் கட்டப் பட்டிருக்கின்றன. இந்தக் கோயில்களில் பூசை நடத்து கிறவர்கள், உயர்ந்த இடத்தில் கட் டப் பெற்ற வீடுகளில் தனியாக வசிக் கிறார்கள்.

சென்ற மஹாயுத்தத்தைப் பற்றிய சில விவரங்கள்

யுத்தம் ஆரம்பித்தது	1—8—1914
யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது	11—11—1918
யுத்தம் நடைபெற்ற காலம்	4 வருஷம் 3 மாதம் 11 நாள்
யுத்தத்தில் அமெரிக்கா கலந்து கொண்டது	6—4—1917
பாரிஸில் சமாதான மகாநாடு ஆரம்பித்தது	18—1—1919
ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை	28—6—1919 (இதற்கு வார் சேல்ஸ் உடன்படிக்கை என்று பெயர்.)
ஆஸ்திரியாவுடன் ,,	10—9—1919 (செயின்ட் ஜெர்மேன் உடன்படிக்கை)
பல்கேரியாவுடன் ,,	27—11—1919 (நியுயில்லி உடன்படிக்கை.)
ஹங்கேரியுடன் ,,	4—6—1920 (கிராண்ட் டிரியானுன் உடன்படிக்கை.)
துருக்கியுடன் ,,	9—8—1920 (செவர்ஸ் உடன்படிக்கை.)
எத்தனை தேசங்கள் யுத்தத்தில் கலந்து கொண்டன?	27 தேசங்கள்
11—11—1918 வரையில் எத்தனை பேர் யுத்தத்தில் கொல்லப் பட்டனர்?	7,450,200
30—4—1919 வரை ஏற்பட்ட யுத்தச் செலவு எவ்வளவு?	சுமார் ரூ. 558,000,000,000

எந்தெந்த தேசங்கள் கலந்து கொண்டன?

ஒரு பக்கம்
- ஜெர்மனி
- ஆஸ்திரியா—ஹங்கேரி
- துருக்கி
- பல்கேரியா

மற்றொரு பக்கம்
- அமெரிக்கா
- கிரேட்பிரிட்டன்
  - தென்னாப்பிரிக்கா
  - நியூஜிலந்து
  - ஆஸ்திரேலியா
  - இந்தியா
  - கானடா
- பிரான்ஸ்
- ருஷ்யா
- பெல்ஜியம்
- செர்வியா
- மாண்டிநீக்ரோ
- ஜப்பான்
- இத்தலி
- ருமேனியா
- போர்த்துகல்
- கிரீஸ்

யுத்தத்தில் கலந்து கொள்ளாமலிருந்த நாடுகள்

- ஸ்பெயின்
- ஸ்விட்ஜர்லாந்து
- ஹாலந்து
- டென்மார்க்
- நார்வே
- ஸ்வீடன்
- அல்பேனியா
- அபிசீனியா
- பர்ஷியா
- ஆப்கானிஸ்தானம்

அன்றும் இன்றும்

உடன்படிக்கை விவரங்கள்

1914ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் நேசக் கட்சியினராகிய பிரான்ஸ், பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி முதலிய நாடுகளுக்கும் தொடங்கப் பெற்ற யுத்தமானது 11-11-1918ல் நின்றது. அன்று இருகட்சியினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஜெர்மனிக்கும் பிரான்ஸ் பிரிட்டன் முதலிய வல்லரசுகளுக்கும் தொடங்கப் பெற்ற யுத்தத்தில், பிரான்ஸானது ஜெர்மனிக்கு 1940ம் வருஷம் ஜூன்மாதம் இரண்டாவது வாரத்தில் பணிந்து விட்டது. அது சம்பந்தமாக பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் 22-6-40ல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்று நிறைவேறியது. இந்த இரண்டு ஒப்பந்த விவரங்களையும் கீழே பக்கத்துப் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

நேசக் கட்சியினருக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம்
11-11-1918

நேசக் கட்சிப் பிரதிநிதிகள் :—

(1) *நேசக் கட்சிப் படைகளின் தலைவராகிய தளபதி போச்; (2) கடற்படைத் தலைவராகிய அட்மிரல் வெமிஸ்.*

ஜெர்மானியப் பிரதிநிதிகள் :—

(1) *எர்ஸ்பெர்கர் (2) கவுண்ட்வான் ஒபர்ன்டார்ப் (3) வான்விண்டர் பெல்டெட் (4) காப்டன் வான்ஸெலோ.*

நிபந்தனைகளின் விவரம்.

அ. மேற்குப் போர் முனையில்

1. *யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு ஆறு மணி நேரத்தில் தரையிலும் ஆகாயத்திலும் சண்டையை நிறுத்தி விடுதல்.*

ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம்
22-6-40

ஜெர்மன் பிரதிநிதி :

வான் கீடல்

பிரெஞ்சுப் பிரதிநிதி :

தளபதி ஹூண்ட் ஸிங்கர்

(இருவருமே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்)

நிபந்தனைகளின் விவரம்

1. *ஜெர்மனிக்கு விரோதமாக பிரான்ஸிலும், பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலும், பிரெஞ்சு நிருவாகத்தின் கீழுள்ள மற்றப் பிரதேசங்களிலும் யுத்தத்தை நிறுத்திக் கொள்ள பிரெஞ்சு அரசாங்கம் சம்மதிக்கிறது.*

2. படை யெடுக்கப்பட்ட நாடுகளாகிய பெல்ஜியம், பிரான்ஸ், லக்ஸம்பர்க், ஆல்சேஸ் லோரெயின் ஆகிய பிரதேசங்களை, உடனே காலி செய்வது இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பதினைந்து நாட்களுக்குள் முடிய வேண்டும். மேற் குறிப்பிட்ட பிரதேசங்களை, மேற் குறிப்பிட்ட தவணைக்குள் காலி செய்யாத ஜெர்மானியத் துருப்புகள், யுத்தக் கைதிகளாகக் கைது செய்யப் படுவார்கள். அப்படி காலி செய்யப் பட்ட இடங்களை நேசக் கட்சித் துருப்புகளும் அமெரிக்கத் துருப்புகளும் ஆக்ரமித்துக் கொள்ளும். ஒப்பந்தம் கையெழுத்தாகிற சமயத்தில் தயாரிக்கப் படுகிற குறிப்பின் படி துருப்புகள் காலி செய்வது, ஆக்ரமித்துக் கொள்வது முதலியன நடைபெறும்.

3. மேலே குறிப்பிட்ட நாடுகளில் வசிப்போர், அவரவர் இடங்களுக்கு அனுப்பப் பட வேண்டும்.

4. ஜெர்மன் ராணுவமானது கீழ்க் கண்ட யுத்த தளவாடங்களை நல்ல நிலைமையில் ஒப்புவிக்க வேண்டும்:—

2. ஜெர்மானிய உரிமைகளுக்குப் பாதுகாப்பாக, கீழே குறிப்பிடப் பட்ட எல்லையின் வட பாகத்தையும் மேற்குப் பாகத்தையும் ஜெர்மனி ஆக்ரமித்துக் கொள்ளும். ஜினீவா, சாலோன்-ஸார்-ஸலோன், பாரே-லே மோனியல், மௌலின்ஸ், போர்ஜெஸ், வீர்ஜான், அங்கிருந்து டோர்ஸ் நகரத்திற்குக் கிழக்கே இருபது கிலோமீடர் வரையில், அங்கிருந்து தெற்கே டோர்ஸ்-அங்கௌலேமே ரயில் வேக்கு நேராக மாண்ட்-டி-மார்ஸான், செயிண்ட் ஜின்-பிட்-டி-போர்ட் வரையில். இந்தப் பிரதேசங்களில், எவை யெவை இன்னும் ஜெர்மானியத் துருப்புகளால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட வில்லையோ, அவை, இந்த ஒப்பந்தம் முடிந்தவுடன் ஆக்ரமித்துக் கொள்ளப் படும்.

3. ஜெர்மனியால் ஆக்ரமித்துக் கொள்ளப் பட்ட பிரதேசத்தில், ஸ்தல ஸ்தாபன நிருவாகம் தவிர, மற்ற எல்லா நிருவாகத்தையும் ஜெர்மனி நடத்தும். பிரெஞ்சு அரசாங்கம் இதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். ஜெர்மனியால் ஆக்ரமித்துக் கொள்ளப் பட்ட பிரதேசத்திலுள்ள எல்லா பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களும், ஜெர்மன் ராணுவத் தலைமை ஸ்தாபனத்தின் உத்திரவுகளுக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டுமென்றும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பிரெஞ்சு அரசாங்கத்தார் உத்திரவு செய்ய வேண்டும். கிரேட் பிரிட்டனுடன் ஜெர்மனி தொடுத்திருக்கும் போர் முடிந்தவுடன் பிரான்சின் மேற்குத் துறைமுகப் பிரதேசத்தின் ஆக்ரமிப்பை எவ்வளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவுக்கு ஜெர்மனி குறைத்துக் கொள்ளும். ஜெர்மனியால் ஆக்ரமித்துக் கொள்ளப் படாத பிரதேசத்தில் எங்காவது, அல்லது பாரிஸ் நகரத்திலேயாவது, பிரெஞ்சு அரசாங்கம் தனது தலைமை ஸ்தானத்தை வைத்துக்கொள்ளலாம். அப்படி பாரிஸுக்கே தலைமை ஸ்தானத்தை மாற்றிக் கொள்வதாயிருந்தால், ஜெர்மனியால் ஆக்ரமித்துக் கொள்ளப் பட்டனவும், படாதனவுமான பிரதேசங்களை பாரிஸிலிருந்தே நிருவாகம் செய்ய, ஜெர்மனி, வேண்டிய உதவிகளைக் கொடுக்க வேண்டும்.

4. அமைதியைக் காப்பதற்கு எவ்வளவு படைகள் அவசியமோ அந்தப் படைகளைத் தவிர, மற்ற எல்லா பிரெஞ்சு கடற் படை,

5000 பீரங்கிகள்
25,000 யந்திர பீரங்கிகள்
3,000 குழி பீரங்கிகள்
1700 யுத்த ஆகாய விமானங்கள்.

மேற் கண்ட சாமான்களை, நேசக்கட்சி, அமெரிக்கத் துருப்புகள் வசம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகிற போது தயாரிக்கப்படுகிற குறிப்பில் கண்டபடி ஒப்புவிக்க வேண்டும்.

5. ரைன் நதியின் இடது கரை ஜில்லாக்களிலிருக்கும் ஜெர்மானியத் துருப்புகள் காலி செய்ய வேண்டும். அப்படி காலி செய்யப்பட்ட பிரதேசம், நேசக்கட்சி, அமெரிக்கப் படைகளின் மேற் பார்வையின் கீழ் நிருவாகம் செய்யப் பெறும்.

நேசக்கட்சி, அமெரிக்கப் படைகள் இந்தப் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொள்வதற்கு ஜாமீனாக, ரைன் நதியின் குறுக்குப் பாதைகளைக் காவல் புரியும் துருப்புகளும், இன்னும் முக்கியமான இடங்களிலுள்ள துருப்புகளும் இருக்கும்.

ரைன் நதியின் வலது கரையில் டச்சு எல்லைக்கும் ஸ்விட்ஜர்லாந்து எல்லைக்கும் சுமார் ஆறே கால் மைல் விஸ்தீரணத்திற்கு ஒரு பிரதேசம், நடு நிலைமைப் பிரதேசமாக வகுக்கப்படும்.

ரைன் நதியின் வலது கரையிலும் இடது கரையிலும் உள்ள ஜில்லாக்களைச் சத்துருக்கள் காலி செய்வதானது, யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான 31 நாட்களுக்குள் முடிவு பெற வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகிற தருணத்தில் தயாராகிற குறிப்பில் கண்டபடி துருப்புகள் காலி செய்வதும் ஆக்ரமித்துக் கொள்வதும் நடை பெறும்.

6. எந்தப் பிரதேசங்களைத் துருப்புகள் காலி செய்கிறார்களோ அந்தப் பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் காலி செய்யக் கூடாது. ஜனங்களுடைய உயிருக்கும் சொத்துக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தக் கூடாது.

தரைப்படை, ஆகாயப்படை முதலிய அனைத்தையும் கலைத்து, நிராயுத பாணியாக்க வேண்டும். அமைதியைக் காப்பதற்கு எவ்வளவு படைகளும் ஆயுதங்களும் தேவை யென்பதை ஜெர்மனியும் இத்தலியும் சேர்ந்து நிர்ணயிக்க வேண்டும். ஆக்ரமிப்புப் பிரதேசத்திலுள்ள பிரெஞ்சுத் துருப்புகளை, ஆக்ரமிப்புக்குட்படாத பிரதேசத்திற்குக் கொணர்ந்து கலைத்து விடவேண்டும். இங்ஙனம் கலைக்கப்பட வேண்டிய துருப்புகள், இந்த யுத்த நிறுத்த ஒப்பந்த சமயத்தில் எங்கெந்த இடத்தில் இருக்கின்றனவோ அந்த இடத்திலேயே நிராயுத பாணிகளாக்கப்பட வேண்டும்.

5. இதற்கு ஜாமீனாக, ஆக்ரமிப்புக்குட்படாத பிரதேசத்திலுள்ள பீரங்கிகள், டாங்கிகள், டாங்கிகளை எதிர்த்துநிற்கும் ஆயுதங்கள், ஆகாய விமானங்கள், காலாட் படை ஆயுதங்கள், ட்ராக்டர்கள், மற்ற யுத்த தளவாடங்கள் முதலியவற்றை நல்ல நிலைமையில் ஒப்புக் கொடுத்து விடும்படி ஜெர்மனி கேட்கலாம். இவைகளைக் கொடுக்கும் அளவை ஜெர்மனி நிர்ணயிக்கும்.

6. அமைதியைக் காப்பதற்கென்று நிறுவப்பட்டுள்ள பிரெஞ்சுத் துருப்புகளுக்குத் தேவையானவை போக, மற்று ஆக்ரமிப்புக்குட்படாத பிரதேசத்திலுள்ள எல்லா ஆயுதங்களையும் யுத்த தளவாடங்களையும் ஜெர்மனி அல்லது இத்தலியின் மேற்பார்வையின் கீழ் பத்

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்னர், ராணுவ சம்பந்தமான எந்த நடவடிக்கைகளிலேனும் யாராவது கலந்து கொண்டிருந்தால் அவர் மீது எவ்வித வழக்கும் தொடரக் கூடாது.

சேதம் உண்டாகும்படியான எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது.

எல்லா விதமான ராணுவ ஸ்தாபனங்களும், ஸ்டோர்ஸ், ஆகாரவகைகள், ஆயுதங்கள் முதலியன உள்பட அனைத்தும், காலி செய்ய வேண்டு மென்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிற காலத்திற்குள் அப்புறப் படுத்தப் படாமல் அப்படியே ஒப்புவிக்கப் பட வேண்டும்.

ராணுவத்தில் சம்பந்தப்படாத சாதாரண ஜனங்களுக்கும் கால் நடைகளுக்கும் தேவையான ஆகாரவகைகள் முதலியன அப்படியே அந்தந்த இடத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும்.

காலி செய்யப்படுகிற பிரதேசங்களிலுள்ள கைத் தொழில் ஸ்தாபனங்களையோ அவைகளிலுள்ள தொழிலாளர்களையோ பாதிக்கக் கூடிய எந்த நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் படக் கூடாது.

7. ரோட்டுகள், ரெயில் ரோட்டுகள், வாய்க்கால்கள், வாராவதிகள், தந்திகள், டெலிபோன்கள் முதலிய எல்லாப் போக்கு வரத்து வசதிகளுக்கும் எவ்வித பாதகமும் ஏற்படுத்தக் கூடாது.

மேற்படி ஸ்தாபனங்களில் வேலை செய்யும் நபர்கள் அப்படியே உத்தியோகத்திலிருக்க வேண்டும்.

5000 ரெயில் வண்டிகளும் 150,000வாகன்களும் நல்ல நிலைமையில், அவ்வவற்றினுடைய சில்லரைச் சாமான்களுடன் 31 நாட்களுக்குள் ஒப்புவிக்கப் பட வேண்டும்.

5000 மோட்டார் லாரிகளை நல்ல நிலைமையில் 36 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

ஆல்சேஸ்—லோரெயின் பிரதேசத்திலுள்ள ரெயில்வேக்களை அவற்றின் சாமான்கள், சிப்பந்திகள் முதலியவற்றுடன் நல்ல நிலைமையில் 31 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

நிரப் படுத்தி வைக்க வேண்டும். இந்த ஆயுதங்கள் துராக்கிரகமாக உபயோகிக்கப் படுவதைத் தடுக்க, தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஜெர்மன் ராணுவத்திற்கு அதிகார முண்டு. ஆக்ரமிப்புக்குட் படாத பிரதேசத்தில், புதிதாக யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யப் படுவது உடனே நிறுத்தப் பட வேண்டும்.

7. ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் தரையிலும் துறை முகத்திலும் பாதுகாப்புக்காக [illegible]திருக்கும் எல்லா ஏற்பாடுகளையும், அவைகளிடம் இருக்கிற எல்லா ஆயுதங்களுடன் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். கோட்டைகள், சுரங்கங்கள் முதலியன சம்பந்தமாயுள்ள எல்லா பிளான்களையும் ஒப்படைக்க வேண்டும்.

மேற்படி ரெயில்வேக்களை வேலை செய்வதற்காக வேண்டிய, ரைன் நதியின் இடது கரை பிரதேசத்திலுள்ள எல்லாச் சாமான்களையும், நிலக்கரி, கைகாட்டிகள், ரிபேர் ஷாப்புகள் முதலிய அனைத்தையுங் அப்படியே இருக்க விட வேண்டும். இவை நிரம்பட இருப்பதற்கு ஜெர்மனி பொறுப்பாளியா யிருக்க வேண்டும்.

நேசக் கட்சியினரிட மிருந்து பறிக்கப் பட்ட எல்லா விளக்குகளையும் அப்படியே அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

8. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணிநேரத்திற்குள், ஜெர்மன் துருப்புகளால் காலி செய்யப்பட்ட பிரதேசங்களிலுள்ள சுரங்க வெடிகளை வைத்திருக்கும் இடங்களை ஜெர்மானிய ராணுவம் காட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கண்டு பிடித்து அவற்றை அழிக்கும் விதத்தில் ஜெர்மானியத் துருப்புகள் செய்ய வேண்டும்.

இன்னும் கிணறுகள், நீர் ஊற்றுக்கள் முதலியவைகள் விஷமிடப்பட்டிருந்தால் அவற்றையும் ஜெர்மன் ராணுவம் காட்டிக் கொடுக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை மீறினால் அவற்றிற்குப் பதில் செய்யப்படும்.

8. பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலுள்ள பிரெஞ்சு உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான கப்பற் படையை வைத்துக் கொண்டு மற்றக் கப்பற்படையை குறிப்பிடுகிற துறை முகங்களில் ஒன்று சேர்த்துக் கலைத்து நிராயுத பாணியாக்கி விட வேண்டும். அப்படிச் செய்வது ஜெர்மனி அல்லது இத்தலியின் மேற் பார்வையில் நடைபெற வேண்டும். யுத்த காலத்தில் தனது சொந்த உபயோகத்திற்காக பிரெஞ்சுக் கப்பற் படையை உபயோகித்துக் கொள்ளும் நோக்கம் தனக்கு இல்லையென்று ஜெர்மனி உறுதி கூறுகிறது. ஆனால், துறைமுகப் பாது காப்புக்காகவும் சுரங்கங்களை அகற்றுவதற்காகவும்மட்டுமேபிரெஞ்சு கப்பற் படை உபயோகிக்கப்படும். குடியேற்ற நாடுகளிலுள்ள எல்லாக் கப்பல்களும், அந்த நாடுகளிலுள்ள பிரெஞ்சு உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான கப்பல்களைத் தவிர மற்றவை யனைத்தும் பிரான்சுக்குத் திருப்பியழைக்கப்பட வேண்டும்.

9. நேசக் கட்சி, அமெரிக்கத் துருப்புகள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களில் தேவையான பொருள்களையோ, மனிதர்களையோ உபயோகித்துக் கொள்ளும் உரிமையை மேற்படி துருப்புகள் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்.

ரைன் ஜில்லாக்களை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் துருப்புகளின் செலவை ஜெர்மன் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

9. எங்கெங்கு கடற் சுரங்கங்கள் போடப் பட்டிருக்கின்றன, எங்கெங்கு பாது காப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்ற விவரங்களைத் தெரியப்படுத்த வேண்டும். கடற் சுரங்கங்களை அகற்றும் வேலையை பிரெஞ்சு துருப்புகளே செய்ய வேண்டும்.

10. விசாரணையிலிருந்து கொண்டிருக்கிற, ஏற்கனவே தண்டிக்கப் பட்டுள்ள எல்லா நேசக் கட்சி, அமெரிக்க யுத்தக் கைதிகளையும் உடனே விடுதலை செய்து விட வேண்டும். நேசக் கட்சி அரசாங்கத்தினரும், அமெ

10. பாக்கியுள்ள ஆயுதந்தரித்த படைகளுக்கு விரோதமாக பிரெஞ்சு அரசாங்கத்தார் எவ்வித விரோதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. பிரெஞ்சுத் துருப்புகள், பிரான்சிலிருந்து வெளியேறாமல்

ரிக்க அரசாங்கத்தினரும், இந்தக் கைதிகளைத் தங்கள் இஷ்டம் போல் நடத்திக் கொள்வர். இந்த ஏற்பாடானது, யுத்தக் கைதிகள் சம்பந்தமாக இது வரையில் அமுலில் இருக்கிற எல்லா ஷரத்துக்களையும் ரத்து செய்கிறது. ஹாலந்திலும், ஸ்விட்ஜர்லாந்திலும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுள்ள எல்லா ஜெர்மானிய யுத்தக் கைதிகளும் இப்பொழுது நடைபெறுவது போல் விடுதலை செய்யப்பட்டு வருவர். ஜெர்மானிய யுத்தக் கைதிகளை விடுதலை செய்கிற விஷயம், சமாதான உடன்படிக்கை ஏற்படுகிற தருணத்தில் யோசிக்கப்படும்.

11. ஜெர்மானியர்களால் காலி செய்யப்படுகிற பிரதேசங்களில் இருக்கும், நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் ஜெர்மானியர்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அங்ஙனம் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான ஜெர்மானிய சிப்பந்திகளும் சாமான்களும் மேற்படி பிரதேசத்தில் இருக்கலாம்.

ஆ. ஜெர்மன் கிழக்கு எல்லைப்புற சம்பந்தமாக

12. யுத்தத்திற்கு முன்னர் எந்தெந்தப் பிரதேசங்கள், ஆஸ்திரியா-ஹங்கேரி, ருமேனியா, துருக்கி ஆகிய நாடுகளில் சேர்ந்திருந்தனவோ அந்தப் பிரதேசங்களில் இப்பொழுது ஜெர்மானியத் துருப்புகள் இருந்தால், அவை. 1914ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி ஜெர்மானிய எல்லை எங்கு இருந்ததோ அந்தப் பிரதேசத்திற்கு வாபீஸ் வாங்கிக் கொண்டு விட வேண்டும். யுத்தத்திற்கு முன்னர் ருஷ்யப் பிரதேசமாயிருந்த இடத்தில் இப்பொழுது ஜெர்மன் துருப்புகள் இருநதால் அவையும் ஜெர்மன் எல்லைக்குள் வாபீஸ் வாங்கிக் கொண்டு விட வேண்டும். அப்படி வாபீஸ் வாங்கிக் கொள்வது நேசக் கட்சியினருடைய விருப்பத்தை யொட்டியதாயிருக்கும்.

13. இப்பொழுது ருஷ்யா எல்லைக்குட்பட்டிருக்கிற பிரதேசத்திலுள்ள எல்லா ஜெர்

தடுக்கப்பட வேண்டும், எந்தச் சாமானும் கிரேட் பிரிட்டனுக்குச் செல்லக் கூடாது. எந்த ஒரு பிரெஞ்சுக்காரனும் ஜெர்மனிக்கு விரோதமாக வேறு வல்லரசுகளின் கீழ் உத்தியோகம் செய்யக் கூடாது.

11. எந்த பிரெஞ்சு வியாபாரக் கப்பலும் துறை முகத்தை விட்டு வெளியே போகக் கூடாது. வியாபார போக்கு வரத்து மீண்டும் தொடங்கப் படுமானால் அதற்கு, ஜெர்மன், அல்லது இத்தாலிய அரசாங்கத்தின் முன் அநுமதி வேண்டும். பிரான்சுக்கு வெளியே யுள்ள பிரெஞ்சு வியாபாரக் கப்பல்கள் உடனே திருப்பி யழைக்கப்பட வேண்டும், அல்லது நடு நிலைமை நாட்டுத் துறை முகங்களுக்குச் செல்ல வேண்டும். ஏற்கனவே கைப்பற்றப் பட்டு பிரெஞ்சு துறை முகங்களிலுள்ள எல்லா ஜெர்மன் வியாபாரக் கப்பல்களையும் நல்ல நிலைமையில் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

12 எந்த பிரெஞ்சு ஆகாய விமானமும், அவைகளின் இருப்பிடத்திலிருந்து செல்லக் கூடாது. எல்லா ஆகாய விமான நிலயங்களும், ஜெர்மானிய அல்லது இத்தாலிய மேற் பார்வையில் இருக்க வேண்டும். ஆக்ரமிப்புக்குட்படாத பிரதேசத்திலுள்ள எல்லா அந்நிய ஆகாய விமானங்களும் ஜெர்மானிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் படவேண்டும். ஜெர்மானிய அதிகாரிகளின் உத்திரவில்லாமல் செல்லும் ஆகாய விமானங்கள் சத்துரு ஆகாய விமானங்களாகவே கருதப்படும்.

13. ஆக்ரமிப்புப் பிரதேசத்திலுள்ள எல்லா ராணுவ ஸ்தாபனங்களும் கருவிகளும் மற்ற

மன் துருப்புகள், யுத்த நிபுணர்கள், யுத்தக் கைதிகள், சிவில், ராணுவ ஏஜெண்டுகள் முதலிய பலரும் காலி செய்யப்படவேண்டும்.

14. ருஷ்ய எல்லைக்குள்ளும் ருமேனிய எல்லைக்குள்ளும், ஜெர்மன் துருப்புகள், ஜெர்மனிக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு போவதை உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

15. புகாரெஸ்ட் உடன் படிக்கையையும், ப்ரெஸ்ட்லிடோவ்ஸ்க் உடன் படிக்கையையும், இதற்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட உடன் படிக்கைகளும் ரத்து செய்யப் பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

16. ஜெர்மனியின் கிழக்கு எல்லைப் புறத்திலுள்ள எந்தப் பிரதேசத்தை ஜெர்மானியர்கள் காலி செய்திருக்கிறார்களோ அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு சாமான் சப்ளை செய்யவோ, அல்லது அமைதியை நிலைநாட்டவோ, நேசக்கட்சியினர் அங்குத் தாராளமாகப் போய் வந்து கொண்டிருப்பர்,

இ. கிழக்கு ஆப்ரிக்காவைப் பற்றி

17. நேசக் கட்சியினர் குறிப்பிடுகிற ஒரு கால வரையறைக்குள் கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ள எல்லாத் துருப்புகளையும் காலி செய்து விடவேண்டும்.

ஈ.-பொது நிபந்தனைகள்

18. மூன்றுவது பிரிவில் கூறப்படாதவர்களும், நேசக் கட்சியினருடைய அல்லது அவர்களைச் சார்ந்த நாடுகளினுடைய பிரஜைகளா யிருந்து இப்பொழுது ஜெர்மனியில் காப்பில் வைக்கப் பட்டோ அல்லது விசாரணையிலோ இருந்தால் அவர்களை ஒரு மாதத்திற்குள், அவ

ஸ்டாக்குகளும் அப்படியே ஒப்புக் கொடுக்கப் பட வேணடும். துறை முகங்கள், நிரந்தரக் கோட்டைகள், மற்றும் கப்பற் போக்கு வரத்துக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் முதலியன, இப்பொழுதுள்ள படியே விட்டு வைக்கப்பட வேண்டும்; அவைகளை அழிக்கக் கூடாது. இங்ஙனமே, ரெயில் வேக்கள், ரோட்டுகள், கால்வாய்கள், டெலிபோன்கள், தந்திகள், கப்பல் போக்கு வரத்துக்கான விளக்கு வசதிகள் முதலிய அனைத்தையும் அப்படியே விட்டு வைக்கவேண்டும். இவைகளைப் பழுது பார்ப்பதற்கான சாமான்கள் உதவப் படவேண்டும்.

14. பிரெஞ்சு பிரதேசத்திலுள்ள எல்லா ஒயர்லஸ் ஸ்டேஷன்களும் உடனே நிறுத்தப் படவேண்டும்.

15. ஆக்ரமிப்புக் குட்படாத பிரதேசத்தின் மூலமாக ஜெர்மனிக்கும் இத்தலிக்கும் வியாபாரப் போக்கு வரத்துக்கள் நடை பெற, பிரெஞ்சு அரசாங்கம் உதவி புரிய வேண்டும்.

16. ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற்கு, ஏற்கனவே அங்கு வசித்திருந்த ஜனங்களைப் பிரெஞ்சு அரசாங்கத்தார் திருப்பி யனுப்ப வேண்டும்.

17. ஆக்கிரமிப்புப் பிரதேசத்தி லிருந்து ஆக்கிரமிப்புக் குட்படாத பிரதேசத்திற்கோ அல்லது வெளிப் பிரதேசங்களுக்கோ மதிப்புள்ள பொருள்களோ, ஸ்டாக்குகளோ மாற்றப்படுமானால் அதனை பிரெஞ்சு அரசாங்கத்தார் தடுக்க வேண்டும்.

18. ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலுள்ள ஜெர்மானியத் துருப்புகளின் செலவை பிரான்ஸ் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ரவர்களுடைய பிரதேசத்திற்குத் திருப்பி யனுப்பி விட வேண்டும்.

19. நேசக்கட்சியினரும் அமெரிக்காவும் இனி ஏதேனும் சலுகைகள், உரிமைகள் முதலியன கேட்பதா யிருந்தால் அவைகளைக் கீழ்க் கண்ட நிபந்தனைகளைப் பாதிக்காது என்ற அங்கீகாரத்தின் பேரில் பின் வரும் பண சம்பந்தமான விதிகள் வரை யறுக்கப் படுகின்றன :—

ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்தல்.

யுத்த நிறுத்த ஒப்பந்த காலம் அமுலில் இருக்கிற வரை, சத்துருக்கள் எந்த விதமான செக்யூரிட்டிகளையும் எடுத்துக் கொண்டு போய் விடக் கூடாது. அந்த செக்யூரிட்டிகள், யுத்த நஷ்ட ஈட்டுக்கு ஜாமீன் போல் இருக்க வேண்டும்.

பெல்ஜியம் நேஷனல் பாங்கியில் ரொக்க டெபாசிட்டாகப் போட்டு வைத்திருந்த தொகையை மீண்டும் அதில் போட்டு விடவேண்டும். படையெடுக்கப் பட்ட நாடுகளிலுள்ள எல்லா தஸ்த வேஜுகள், ஷேர்கள், காகித நோட்டுகள், இவைகளை அச்சிடும் யந்திரங்கள் முதலிய அனைத்தையும் அப்படியே திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

சமாதான உடன்படிக்கை முடிகிற வரை, இந்தத் தங்கத்தை நேசக் கட்சியினரிடம் டிரஸ்டாக ஒப்படைக்க வேண்டும்

19. எல்லா ஜெர்மானிய யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். பிரான்சிலோ, அல்லது பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிலோ உள்ளவர்களும், ஜெர்மானிய அரசாங்கத்தாரால் குறிப்பிடப் படுகிறவர்களுமான எல்லா ஜெர்மானியப் பிரஜைகளையும் பிரெஞ்சு அரசாங்கத்தார் ஜெர்மன் அரசாங்கத்தார் வசம் ஒப்புவிக்க வேண்டும்.

உ. கப்பற் போக்கு வரத்து நிபந்தனைகள்

20. சமுத்திரங்களில் நடைபெறும் சண்டையை உடனே நிறுத்த வேண்டும். ஜெர்மானியக் கப்பல்கள் எங்கெங்கு இருக்கின்றன வென்ற விவரங்களைத் தெரியப் படுத்த வேண்டும்.

நேசக் கட்சியினருடையவும் அவர்களைச் சேர்ந்த மற்ற வல்லரசுகளினுடையவும் யுத்தக் கப்பல்கள், வியாபாரக் கப்பல்கள் முதலியன எல்லாக் கடல்களிலும் செல்லலாம் என்று எல்லா நடுநிலைமை நாடுகளுக்கும் தெரியப் படுத்தி விட வேண்டும்.

20. ஜெர்மானியர்கள் வசம் இருக்கும் எல்லா பிரெஞ்சு யுத்தக் கைதிகளும், சமாதான ஏற்பாடு முடிகிறவரை அப்படியே யிருப்பர்.

21 யுத்தக் கப்பல்களிலிருந்தும் வியாபாரக் கப்பல்களிலிருந்தும் கைதியாக்கப் பட்ட எல்லா நபர்களையும், பதிலுக்குப் பதில் கைதி

21. ஒப்புவிக்கப் பட்ட பொருள்களைப் பாதுகாப்பாக இந்த ஷரத்து கூறுகிறது.

களை விடுதலை செய்ய வேண்டு மென்ற நிபந்தனை யில்லாமல் உடனே விடுதலை செய்யவேண்டும்.

22 நேசக் கட்சியினரும் அமெரிக்காவும் சேர்ந்து நிர்ணயிக்கிற துறை முகங்களில், எல்லா ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களையும் அவைகளின் தளவாடங்களுடன ஒப்புவிக்க வேண்டும், கடலிலே செலுத்த முடியாத நீர் மூழ்கிக் கப்பல்களை, அவைகளை தளவாடங்களில்லாமற் செய்து, நேசக் கட்சியினரின் மேற் பார்வையில் இருக்குமாறு செய்ய வேண்டும். ஜெர்மன் துறை முகங்களில் வைக்கப் பட்டிருக்கும் எல்லா நீர் மூழ்கிக் கப்பல்கள் யாவும், எந்தத் துறை முகத்தில் வந்து தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப் படுகின்றனவோ அந்தத் துறை முகத்தில் வந்து ஒப்புக் கொடுக்க வேண்டும். இந்த ஷரத்தில் கண்ட நிபந்தனைகளை, யுத்த நிறுத்த ஒப்பந்தம் முடிந்த 14 தினங்களுக்குள் நிறைவேற்ற வேண்டும்.

23. நேசக் கட்சியினராலும் அமெரிக்காவினாலும் குறிப்பிடப் படுகிற கீழ்க் கண்ட கப்பல்கள், நிராயுத பாணியாக்கப்பட்டு மேற்படி நேசக் கட்சியினரும் அமெரிக்காவும் குறிப்பிடுகிற துறை முகங்களில் ஒப்புக் கொடுக்கப் பட வேண்டும். நேசக் கட்சியினருடையவும் அமெரிக்காவினுடையவும் மேற் பார்வையில் இவை இருக்கும். இவைகளைக் காப்பதற்கு எத்தனை ஜெர்மன் மாலுமிகள் தேவையோ அத்தனை பேர் மட்டும் இந்தக் கப்பல்களில் இருக்கலாம்.

6 யுத்த க்ருஸர்கள்
10 யுத்தக் கப்பல்கள்
8 லைட் க்ருஸர்கள்
50 நாசகாரிகள்

இவை தவிர, மற்றெல்லா ஜெர்மன் யுத்தக் கப்பல்களும், நேசக் கட்சியினராலும் அமெரிக்காவினாலும் குறிப்பிடுகிற ஜெர்மானியத் துறை முகங்களில் பத்திரப்படுத்தப் பட வேண்டும். இவை, நேசக் கட்சியினருடையவும் அமெரிக்காவினுடையவும் மேற் பார்வையில் இருக்கும். மற்ற எல்லா உப கப்பற் படையும் நிராயுத பாணியாக்கப் பட வேண்டும். பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ள எல்லாக் கப்பல்களும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான ஏழு நாட்களுக்குள் ஜெர்மானியத் துறை முகங்களிலிருந்து புறப்படுவ

22. இந்த யுத்த நிறுத்த நிபந்தனைகளை நடைமுறையில் கொணர ஒரு ஜெர்மானிய யுத்த நிறுத்தக் கமிஷன் நியமனம் பெறும். அந்தக் கமிஷன், பிரெஞ்சு-இத்தாலிய யுத்த நிறுத்தக் கமிஷனுடன் ஒத்துழைக்கும்.

23. இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம், பிரெஞ்சு அரசாங்கமானது இத்தாலிய அரசாங்கத்தினுடன் இதே மாதிரியான ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றிக் கொண்டவுடன் அமுலுக்கு வரும். தான் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டதாக இத்தாலிய அரசாங்கம் தெரிவித்த ஆறு மணி நேரங் கழித்து யுத்தம் நின்று விடும். இதை ஜெர்மன் அரசாங்கம் ஒயர்லெஸ் மூலமாகத் தெரிவிக்கும்.

தற்குத் தயாரா யிருக்க வேண்டும். இவைகள் எந்த வழியாக வர வேண்டு மென்பது கம்பி யில்லாத் தந்தி மூலம் தெரிவிக்க ப்படும்.

24. ஜெர்மன் கடல் எல்லைக்கு வெளியே ஜெர்மனியால் போடப் பட்டிருக்கும் எல்லா கடல் சுரங்கங்களையும் எடுத்து விட நேசக்கட்சி யினருக்கும் அமெரிக்காவுக்கும் உரிமை உண்டு. எங்கெந்த இடங்களில் இந்தச் சுரங்கங்கள் போடப்பட்டிருக்கின்றன வென்பது தெரிவிக் கப்பட வேண்டும்.

25. நேசக் கட்சியினருடையவும் அவர்களைச் சார்ந்த வல்லரசுகளினுடையவும் யுத்தக் கப்பல் களும் வியாபாரக் கப்பல்களும் பால்டிக் கட லுக்குள் போகவும் அதிலிருந்து வெளி வரவும் உரிமை உண்டு. இதற்காக, பால்டிக் கட லுக்குள் செல்வதற்கு, வழியிலுள்ள காட்டே காட் என்ற துறை முகத்திலிருந்து எல்லா ஜெர்மானியத் துறை முகங்களும், மற்ற பந் தோபஸ்து ஏற்பாடுகளும் நேசக் கட்சியினர் வசம் வந்து விட வேண்டும். தவிர, ஜெர்மன் கடலெல்லையிலும் அதற்கு வெளியி லும் போடப் பட்டிருக்கும் எல்லாச் சுரங்க வெடிகளும் அழிக்கப் பட வேண்டும். இந்த விஷயத்தில் நடு நிலைமைப் பிரதேசப் பிரச்னை யொன்றையும் ஜெர்மனி எழுப்பக் கூடாது. அப்படிப் போடப்பட்டிருக்கிற எல்லாச் சுரங் கங்களையும், அவை சம்பந்தமான திட்டங்களை யும் ஜெர்மனி தெரிவிக்க வேண்டும்.

26. இப்பொழுது நேசக் கட்சியினராலும், அவற்றைச் சார்ந்த வல்லரசுகளாலும் விதிக் கப்பட்ட நிர்ப்பந்தங்கள் அப்படியே அமுலில் இருக்கும். தற்போது சமுத்திரங்களில் சென்று கொண்டிருக்கும் எல்லா ஜெர்மன் வியாபாரக் கப்பல்களும் கைப்பற்றப் படும். நேசக் கட்சி யினரும் அமெரிக்காவும் சேர்ந்து, யுத்த நிறுத்த காலம் வரையில், ஜெர்மனிக்கு வேண் டிய பொருள்களைக் கொடுக்க உத்தேசிக் கின்றன.

27. நேசக் கட்சியினரும் அமெரிக்காவும் சேர்ந்து குறிப்பிடுகிற ஜெர்மன் ஆகாய விமான நிலையங்களில் எல்லா ஜெர்மன் ஆகாயப் படை யும் சேர்க்கப்பட்டுக் கலைக்கப் படவேண்டும்.

28. பெல்ஜியத் துறைமுகப் பிரதேசங்களை யும் துறை முகங்களையும் ஜெர்மனி காலி செய் கிற போது, அங்குள்ள எல்லாத் துறைமுகச்

24. சமாதான உடன்படிக்கை யொன்று ஏற்பாடாகிற வரை, இந்த யுத்த நிறுத்த ஒப் பந்தம் அமுலில் இருக்கும். ஆனால் இந்த நிபந்தனைகளை பிரெஞ்சு அரசாங்கம் நிறை வேற்றுவிடின், இந்த ஒப்பந்தம் ரத்து செய்த தாகக் கருதப்படும்.

சாமான்கள், ஸ்டோர்ஸ், ஆயுதங்கள் முதலிய அனைத்தையும் அப்படியே விட்டு விட்டுப்போக வேண்டும்.

29. கருங்கடலிலுள்ள எல்லாத் துறை முகங்களையும் ஜெர்மனி காலி செய்து விட வேண்டும். கருங்கடலில் ஜெர்மனியால் கைப் பற்றப்பட்ட எல்லா ருஷ்யக் கப்பல்களையும், நேசக் கட்சியினர்-அமெரிக்கா வசம் ஜெர்மனி ஒப்புவிக்க வேண்டும். கருங்கடலில் கைப்பற் றப்பட்ட எல்லா நடு நிலைமை நாட்டுக் கப்பல் களும் விடுதலை செய்யப்பட வேண்டும். மேற் கண்ட (கருங்கடல்) துறைமுகங்களில் கைப் பற்றப்பட்ட எல்லா யுத்த தளவாடங்களும் பிறவும் திருப்பப்பட வேண்டும். எல்லா ஜெர் மானிய தளவாடங்களும், 28வது ஷரத்தில் கண்டபடி கைவிடப்பட வேண்டும்.

30. தற்போது ஜெர்மானியர்கள் வசம் இருக்கிற எல்லா நேசக் கட்சி-அமெரிக்க வியாபாரக் கப்பல்களும், நேசக் கட்சியின ராலும் அமெரிக்காவினாலும் குறிப்பிடப்படுகிற துறை முகங்களில், பதிலுக்குப் பதில் ஒப்பு விக்க வேண்டு மென்ற நிபந்தனையில்லாமல் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

31. காலி செய்வதோ, சரணாகதி யடை வதோ திருப்பி ஒப்புவிப்பதோ ஏதேனும் ஒன்று நடை பெறுவதற்கு முன்னர் எந்த விதமான கப்பல்களோ அல்லது சாமான்களோ அழிக் கப்படக் கூடாது.

32. ஜெர்மானிய அரசாங்கமானது, எல்லா நடு நிலைமை நாடுகளுக்கும், சிறப்பாக நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து ஆகிய நாடு களுக்கு, நேசக் கட்சியினருடனோ, அவர் களைச் சார்ந்த வல்லரசுகளுடனோ வியாபாரஞ் செய்யக்கூடாதென்று ஜெர்மானிய அரசாங் கத்தினாலோ ஜெர்மானிய வியாபாரி களாலோ தடுக்கப்பட்டிருந்தாலுஞ் சரி, அல் லது கப்பல் கட்டுங் கருவிகளை சப்ளை செய் வதாகச் சொல்லியிருந்ததற்குப் பதிலாகக் காட்டப்பட்ட [illegible]யாயிருந்தாலுஞ் சரி, அவைகளை யெல்லாம் உடனே ரத்து செய்து விட வேண்டும்.

33. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத் தான பிறகு, எந்த விதமான ஜெர்மன் வியாபா ரக்கப்பலையும், நடு நிலைமை நாடுகளுக்கு ஒப்பு விக்கக் கூடாது.

ஊ. யுத்த நிறுத்த தவணை

34. யுத்த நிறுத்த கால வரையறை 36 நாட்கள் வரை இருக்கும். இதைப் பின்னர் நீடிக்கவும் செய்யலாம். இந்தக் காலத்திற்குள் மேற் கூறப்பட்ட நிபந்தனைகளுள் ஏதேனும் ஒன்று நிறைவேற்றப் படாமல் போனால், ஒப்பந்தக் கட்சியினர் யாரும் 48 மணி நேர முன்னறிக்கை கொடுத்து ரத்து செய்து விடலாம். மூன்றாவது ஷரத்திலும் பதினெட்டாவது ஷரத்திலும் கண்ட நிபந்தனைகளை, அந்தந்த ஷரத்துகளில் குறிப்பிட்டுள்ள தவணை காலத்திற்குள் நிறைவேற்றா விட்டால் அதற்காக, இந்த ஒப்பந்தம் முழுவதுமே ரத்து செய்யப் பட்டு விட்டதாகக் கருதப்பட மாட்டாது. ஆனால் இதற்காக மற்ற ஷரத்துக்களை வேண்டுமென்றே நடை முறையில் கொணர விடாமல் செய்யக் கூடாது.

இந்த ஒப்பந்தம் சரியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக சர்வ தேசப் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தக் கமிஷன் அமைக்கப்படும். இந்தக் கமிஷன், நேசக் கட்சியினரின் மேற் பார்வையில் வேலை செய்யும்.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் 11-11-1918 காலை 5 மணிக்குக் கையெழுத்திடப் பெற்றது.

பிரெஞ்சு-இத்தாலிய யுத்த நிறுத்த ஒப்பந்தம்

25 - 6 - 40

பிரான்சின் மீது ஜெர்மனி படையெடுத்துப் போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கையில், இத்தலியும் ஜூன் மாதம் 10ந் தேதி பிரான்சின் மீது படை யெடுத்து. இதனால் பிரெஞ்சு அரசாங்கம், ஜெர்மனியுடன் சமரசம் செய்து கொண்டது போலவே, இத்தலியுடனும் சமரஸம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படியே இரு நாடுகளுக்கும் 25-6-40ல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விவரங்களைக் கீழே சுருக்கமாகக் கொடுத்திருக்கிறோம்:—

1. பிரான்ஸ், தனது நாட்டிலும், பிரெஞ்சு வட ஆப்பிரிக்காவிலும், குடியேற்ற நாடுகளிலும், ஆகாயத்திலும் சமுத்திரத்திலும் யுத்தத்தை நிறுத்திக் கொள்ளும்.

2. யுத்தம் நடைபெறுகிற இடங்களில், இத்தாலியப் படைகள் எந்த முன்னணி வரிசையில் இருந்தனவோ,

அந்தந்த இடங்களில், இத்தாலியத் துருப்புகள், யுத்த நிறுத்த ஒப்பந்த காலம் வரையில் இருக்கும்.

3. பிரெஞ்சு ராஜ்யத்தில் மேலே சொன்ன முன்னணி வரிசையில் இத்தாலியப் படைகள் இருக்கிற இடத்திலிருந்து ஐம்பது கிலோமீடர் வரையில், உள்ள பிரதேசமானது, யுத்த நிறுத்த ஒப்பந்த காலம் வரையில் ராணுவ பந்தோபஸ்தற்ற பிரதேசமாக்கப்பட வேண்டும்.

4. டுனிஸில், லிபியா-டுனிஷிய எல்லைப்புறத்திலிருந்து கு[illegible]ப்படுகிற ஒரு பிரதேசம் ராணு[illegible]ந்தோபஸ்தற்ற பிரதேசமாக்கப்பட வேண்டும்.

5. அல்ஜீரியாவிலும், அதற்குத் தெற்கே லிபியாவை யொட்டி யிருக்கிற பிரெஞ்சு ஆப்ரிக்கக் குடியேற்ற நாட்டிலும், இருநூறு கிலோமீடர் வரையில் ராணுவ பந்தோபஸ்தற்ற பிரதேசமாக்கப்பட வேண்டும். இத்தலிக்கும் பிரிட்டனுக்கும் யுத்தம் நடைபெறுகிற வரையில், பிரெஞ்சு—இத்தாலிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கிற வரையில் பிரெஞ்சு சோமாலிலாந்து துறைமுகப் பிரதேசம், ராணுவ பந்தோபஸ்தற்றதாக்கப்பட வேண்டும்.

6. ஜிபூடி துறை முகத்தையும், ஜிபூடி-அடிஸ் அபபா ரெயில்வேயின் பிரெஞ்சு இ[illegible]ம், சாமான் போக்கு வரத்[illegible]காக, இத்தலி பூரணமாக உபயோகித்துக் கொள்ளும்.

7. மேலே குறிப்பிடப் பெற்ற ராணுவ பந்தோபஸ்தற்றதான இடங்களில் உள்ள பிரெஞ்சுத் துருப்புகளில் கோட்டை கொத்தளங்களைப் பாதுகாக்கவும், சமாதானத்தை நிலை நாட்டவும் எவ்வளவு துருப்புகள் வேண்டுமோ அவ்வளவு துருப்புகள் போக, மற்றத் துருப்புகள் யுத்தம் நின்ற பத்து தினங்களில் காலி செய்து விட வேண்டும். எவ்வளவு துருப்புகள் பந்தோபஸ்துக்கு இருக்க வேண்டுமென்பது இத்தாலியக் கமிஷனால் நிர்ணயிக்கப் பெறும்.

8. பிரான்சுக்கோ, பிரெஞ்சு குடியேற்ற நாடுகளுக்கோ சொந்தமான யுத்தக் கப்பல்கள், ஆகாய விமானங்கள், யுத்த தளவாடங்கள் முதலியவற்றை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ அனுப்புவதில்லை யென்று பிரெஞ்சு அரசாங்கம் உறுதி கூறுகிறது. ஜெர்மன் அரசாங்கமும் இத்தாலிய அரசாங்கமும் சேர்ந்து மறு உத்திரவு போடுகிற வரையில், பிரெஞ்சு வியாபாரக் கப்பல்கள் அந்தந்தத் துறை முகத்திலேயே இருக்க வேண்டும்.

9. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில், பிரெஞ்சு ஆதீனத்திற்குட்பட்ட துறை முகங்களில் இருக்கிற பிரெஞ்சு சாமான் கப்பல்கள், குறிப்பிடப் பெற்ற துறை முகங்களுக்கோ, அல்லது நடு நிலைமை நாட்டுத் துறை முகங்களுக்கோ திருப்பி யழைக்கப் பட வேண்டும். இது கா[illegible]கைப் பற்றப்பட்ட இத்தாலிய [illegible]மான் கப்பல்கள், திருப்பி ஒப்படைக்கப் பட வேண்டும்.

10. பிரெஞ்சு எல்லையையோ பிரெஞ்சு நிருவாகத்தையோ விட்டு

53-வது இந்திய தேசீய

காங்கிரஸ் தலைவர்

மௌலானா அபுல் கலாம் அஸாத்

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்

1836 - 1886

எந்த பிரெஞ்சு ஆகாய விமானமும் செல்லக்கூடாது. எல்லா பிரெஞ்சு ஆகாய விமான நிலையங்களும், அவைகளின் சாமான்களுடன் இத்தலியினுடைய அல்லது ஜெர்மனியினுடைய நிருவாகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. இத்தலிக்கும் கிரேட் பிரிட்டனுக்கும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறவரை, (பிரான்சுக்குத் தெற்கேயுள்ள) டெளலோன், பிஸெர்ட்டா, அல்ஜியர்ஸ், ஓரன் ஆகிய துறைமுகங்கள் பதினைந்து நாட்களுக்குள் ராணுவ பந்தோபஸ் தற்றதாகச் செய்யப்பட வேண்டும்.

12. யுத்த நிறுத்த நிபந்தனைகளை பிரான்ஸில் நிறை வேற்ற வேண்டுமென்பதற்கு ஜாமீனாக, இத்தாலியப் படையை எதிர்த்து நிற்கும் எல்லா பிரெஞ்சு படைகளினுடைய யுத்த ஆயுதங்கள் அனைத்தும் இத்தலி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

13. பிரெஞ்சு கப்பற் படையானது கலைக்கப்பட்டு, நிராயுதபாணியாக்கப்பட்டு, இத்தலியின் அல்லது ஜெர்மனியின் மேற் பார்வையில், குறிப்பிடப் பெற்ற துறைமுகங்களில் வைக்கப்பெற வேண்டும். பிரெஞ்சு குடியேற்ற நாடுகளைப் பாதுகாக்க எவ்வளவு கப்பற்படை தேவையோ அதை மட்டும் வைத்துக் கொள்ளலாம். பிரான்சில் தற்போது இல்லாத எல்லா பிரெஞ்சு யுத்தக் கப்பல்களும், பிரெஞ்சு துறைமுகங்களுக்குத் திருப்பி அழைக்கப்பட வேண்டும்.

14. தற்போதைய யுத்தத்தில் பிரெஞ்சு கப்பற் படையைத் தான் உபயோகிக்கப் போவதில்லையென்று இத்தாலிய அரசாங்கம் தெரிவிக்கிறது. சமாதானம் ஏற்பட்ட பிறகும், இத்தலி, பிரெஞ்சு கப்பற் படையை எடுத்துக் கொள்ளாது. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில், பிரெஞ்சுக் கப்பல்கள், சுரங்கங்களை அகற்ற வேண்டுமென்று இத்தாலிய அரசாங்கம் கேட்கலாம். சுரங்கங்கள் போடப்பட்டிருக்கிற பிரதேசங்களையும், மற்றக்கப்பல் படை ஸ்தலங்களையும் தீங்கற்றனவாகச் செய்து விடுவதாக பிரெஞ்சு அரசாங்கம் உறுதி கூறுகிறது. பிரெஞ்சுத் துருப்புகளும், பிரெஞ்சு பிரஜைகளும், இத்தலிக்கு விரோதமாக யுத்தத்தில் கலந்து கொள்ளாதபடி பிரெஞ்சு அரசாங்கம் பார்த்துக் கொள்ளும்.

15. பிரெஞ்சு ராஜ்யத்திலிருந்து எல்லா ஒயர்லெஸ் போக்கு வரத்துகளும் நிறுத்தப்பட்டு விடும். எந்தெந்த நிபந்தனைகளின் மீது, பிரான்ஸ், வட ஆப்ரிக்கா, சிரியா, பிரெஞ்சு சோமாலிலாண்ட் முதலிய பிரதேசங்களில் ஒயர்லெஸ் போக்குவரத்துகள் நடைபெறலாமென்பதை இத்தாலிய யுத்த நிறுத்தக் கமிஷன் நிர்ணயிக்கும். எல்லா இத்தாலிய யுத்தக் கைதிகளும், அரசியல் காரணங்களுக்காக பிரான்சில் வசிக்கும் எல்லா இத்தாலிய பிரஜைகளும் இத்தலி வசம் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

அன்றாட உலகம்

1940

மே

30 ஆஸ்திரியாவில், ஜெர்மனிக்கு [illegible]ரோத மான தோர் உணர்ச்சி பரவி [illegible]தாக ஒரு செய்தி கூறுகிறது.

31 பெல்ஜியத் துறை முகங்களிலிருந்து, நேசக் கட்சித் துருப்புகள் பின்வாங்கின.

ஜுன்

1 பாரிசில் ஏகாதிபத்திய யுத்த கௌன்சில் கூடியது.

பிரிட்டிஷ் படைகளின் சேனாபதியான லார்ட்கோர்ட் லண்டனுக்குத் திரும்பி விட்டார்.

2 யுத்தத்தில் இருதரப்பினரும் ஜீவகாருண் யத்தோடு நடந்து கொள்ள வேண்டு மென்று போப்பரசர் வேண்டு கோள் விடுத்திருக்கிறார்.

3 பாரிஸ் நகரத்தில் முதன் முதலாக ஜெர் மன் ஆகாய விமானக் குண்டுகள் விழுந் தன.

எகிப்திலிருந்து இத்தாலியர்கள் வெளி யேறுகிறார்கள்.

4 பிரிட்டிஷ் பார்லிமெ[illegible] ஸ்ரீ சர்ச்சில், யுத்தத்தைப் பற்றி [illegible]சினார்.

டங்கிர்க் துறை மு[illegible]த்திலிருந்து பிரிட் டிஷ் துருப்புகள் இங்[illegible]லாந்துக்குப் புறப் பட்டு விட்டன.

5 பிரான்சில், ஜெர்மானியச் சேனை வீறு கொண்டு தாக்க ஆரம்பித்து விட்டது.

இங்கிலாந்தின் பல பாகங்களில் ஜெர் மானிய ஆகாய விமானக் குண்டுகள் விழுந்தன.

6 பிரெஞ்சுப் படைகளின் வெற்றியில் தனக் குப் பூரண நம்பிக்கை யிருப்பதாக பிரெஞ்சு பிரதம மந்திரி ரெயினுட் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

நேசக் கட்சியினருக்கு ஆகாய விமானங் களை உதவ வேண்டுமென்று அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது.

இங்கிலாந்தின் துறை முகப் பிரதேசங் கள் பல வற்றின்னும் ஜெர்மானிய ஆகாய விமானக் குண்டுகள் விழுந்தன.

7 இத்தாலியக் கப்பல்கள் அனைத்தும் நடு நிலைமைப் பிரதேசத் துறை முகங்களில் சரண் புகுந்து கொள்ள வேண்டுமென்று இத்தாலிய அரசாங்கத்தார் உத்திரவிட்டி ருக்கின்றனர்.

8 பிரெஞ்சுப் படைகள் பின் வாங்குகின்றன. பர்மாவில் கப்பற் படை ரிசர்வ்பட்டாள மொன்றை அமைக்க வேண்டுமென்று பர்மா கவர்னர் உத்திர விட்டிருக்கிறார்.

9 பெல்ஜியத்திலுள்ள சில பெட்ரோல் கிணறுகளின் மீது பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன.

10 இத்தலி நேசக் கட்சியினர் மீது யு[illegible]ர் தொடுத்து விட்டது.

வடக்கு நார்வேயிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் பின் வாங்கி விட்டன.

ஆகாய விமானங்களைத் தாங்கிச் செல்லும் ஒரு பிரிட்டிஷ் கப்பல் இன்று மூழ்கடிக் கப்பட்டது.

விக்கிரமன்

நேசக் கட்சியினருக்குப் பொருளுதவி செய்வதாகவும் ஆனால் ராணுவ உதவி செய்ய முடியாதென்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அறிவித்திருக்கிறார்.

11 மால்டா தீவில் இத்தாலிய ஆகாய விமானங்கள் குண்டுகளை எறிந்தன.

தென்னாப்பிரிக்க ஆகாயப் படையானது, அபிசீனியாவில் பல இடங்களையும் குண்டு போட்டுத் தாக்கியது.

12 சீன-ஜப்பானியப் போராட்டத்தில் ருக்கியாங் நகரத்தின் மீது ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுகள் எறிந்தன.

13 பாரிஸ் நகரம் காலி செய்யப் பட்டு விட்டது.

பிரெஞ்சுப் பிரதம மந்திரி, ரூஸ்வெல்டுக்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எகிப்திய-லிபியா எல்லைப் புறத்தில் இத்தாலியப் படைகளுக்கும் எகிப்தியப் படைகளுக்கும் போராட்டம்.

ஸ்பெயின், தான் இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

14 பிரெஞ்சு பிரதம மந்திரியின் வேண்டுகோளுக்கு ரூஸ்வெல்ட் பதில் விடுத்திருக்கிறார்.

ஜெர்மன் ராணுவம் பாரிஸுக்குள் நுழைந்து விட்டது.

நேசக் கட்சிக் கப்பற் படை ஜினோவா நகரத்தைத் தாக்கின.

15 பிரெஞ்சு அரசாங்கம், டூர்ஸ் நகரத்தை விட்டு வேறோர் இடத்திற்குச் சென்று விட்டது.

சோவியத் துருப்புகள், லிதுவேனியாவுக்குள் நுழைந்தன.

16 இறுதி வரை போராட்டத்தை நடத்துவதாக பிரெஞ்சு அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது.

ஐர்லாந்து, நடு நிலைமையை வகிக்கப் போவதாகத் தீர்மானித்து விட்டது.

17 ரேனாட்டைத் தலைமையாகக் கொண்ட பிரெஞ்சு மந்திரிச்சபை ராஜிநாமா செய்து விட்டது. தளபதி பெடெய்ன் பிரதம மந்திரியானார்.

பிரான்ஸ், தான் சமாதானமாகப் போய் விடுவதாக ஜெர்மனிக்கு அறிவித்திருக்கிறது.

ருஷ்யா, லாட்வியா அரசாங்கத்திற்கும் எஸ்தோனியா அரசாங்கத்திற்கும் யுத்த தாக்கீது பிறப்பித்திருக்கிறது.

வார்தாவில் காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம் கூடியது.

18 பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஸ்ரீ சர்ச்சில் யுத்த நிலைமையைப் பற்றி நீண்டதொரு பிரசங்கம் செய்தார்.

பிரெஞ்சு அரசாங்கத்தின் சமாதானக் கோரிக்கையைப் பற்றி ஆலோசிக்க ஹிட்லரும் முஸோலினியும் ம்யூனிக் நகரத் [illegible] வந்தனர்.

19 [illegible]ரின் சமாதானக் கோரிக்கைக்கு ஜெர்மனி பதில் கொடுத்தது.

இங்கிலாந்தின் கிழக்குப் பாகத்தில் நூறு ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன.

20 ஆஸ்திரேலியப் படைகளும் நியூ [illegible] படைகளும் இங்கிலாந்தில் வந்து சேர்ந்தன.

21 ஹிட்லர், தனது சமாதான நிபந்தனைகளை பிரெஞ்சுப் பிரதிநிதிகளுக்குத் தெரியப் படுத்தினார்.

22 பிரெஞ்சு அரசாங்கம், ஜெர்மன் சமாதான நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது.

அபிசீனியாவிலுள்ள ஜிபூடி துறைமுகத்தில் இத்தாலிய ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

23 இத்தலிக்கும் பிரான்சுக்கும் சமரசப் பேச்சு நடந்தது.

எகிப்து மந்திரிசபை ராஜிநாமா செய்து விட்டது.

24 பிரான்சுக்கும் இத்தலிக்கும் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகி விட்டது.

சீன அரசாங்கத்திற்கு எவ்விதசாமான்களையும் சப்ளை செய்யக் கூடாதென்று ஜப்பான் அரசாங்கம் பிரிட்டனுக்கு தாக்கீது அறிவித் திருக்கிறது.

25 இந்தியாவில் ராஜப் பிரதி நிதிக்கும் பர்மாவில் கவர்னருக்கும் விசேஷ அதிகாரங்கள் கொடுத்திருப்பதான மசோதா பிரிட்டிஷ் பார்லி மெண்டில் நிறைவேற்றப் பட்டது.

26 இங்கிலாந்தில் பிரெஞ்சுப் படை யொன்று திரட்டப் படுகிறது.

27 இந்தோ-சைனாவில் ஜப்பானிய ஆக்ரமிப்பை முன்னிட்டு பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

ருமேனியாவுக்கு ருஷ்யா தாக்கீது பிறப்பித்திருக்கிறது.

28 சோவியத் அரசாங்கத்தின் தாக்கீதுக்கு இணங்க, ருமேனியாவிலுள்ள பெஸ்ஸாரேபியா, வடக்கு கோவினா ஆகிய இரண்டு ருமேனிய ஜில்லாக்களையும் ருஷ்யா ஆக்ரமித்துக் கொண்டு விட்டது.

29 பிரிட்டனின் பல பாகங்களிலும் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளை யெறிந்தன.

பம்பாய்த் துறை முகம், கப்பல் போக்கு வரத்துக் கென்று மூடப்பட்டு விட்டது.

30 இத்தாலிய ஆகாயப் படைத் தலைவரான மார்ஷல் பால்போ எகிப்தில் நடைபெற்ற ஓர் ஆகாய விமானப் போரில் இறந்து போய் விட்டார்.

பிரிட்டிஷ் கால்வாயிலுள்ள ஜெர்ஸே, கேர்ன்ஸே தீவுகளைப் பிரிட்டிஷார் காலி செய்து விட்டனர்.

கிழக்கு ஆசியப் பிரதேசங்களில் தனக்குத்தான் பூரண ஆதிக்கம் இருக்க வேண்டு மென்று ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரி கூறினார்.

என்னுடைய அபிப்பிராயத்தில், புருஷனுக்குச் சமதையானவள் ஸ்திரீ. ஆண் மகனாகிய எனக்கிருக்கும் எல்லா உரிமைகளும் அவளுக்கு இருக்கின்றன. இன்னும் அதிகமான ஓர் உரிமையும் அவளுக்கு உண்டு. ஆண்களால் காப்பாற்றப்பட வேண்டிய உரிமையும் அவளுக்கு உண்டு. இதுதான் என் கொள்கை. நீங்கள் விவாகம் செய்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் நேசிக்கும் மனைவியைச் சந்தோஷமாக இருக்குமாறு செய்யுங்கள். தன்னுடைய சுகத்திற்காக மட்டும் எவனொருவன் விவாகம் செய்து கொள்கிறானோ அவன் தவறு செய்தவனாகிறான். ஆனால் எவனொருவன், 'நான் காதலிக்கும் பெண்ணைச் சந்தோஷிப்பிக்கிறேன்' என்று சொல்லி விவாகஞ் செய்து கொள்கிறானோ அவன் சரியான காரியத்தைச் செய்தவனாகிறான். நீ சந்தோஷமாயிருக்க வேண்டுமானால் பிறரைச் சந்தோஷப் படுத்து. குறுக்கு வழியாகச் சென்று விடுவதால் மட்டும் நீ சந்தோஷமடைய முடியாது. மற்றவர்களையும் அணைத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். ■

—இங்கர்ஸால்